நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 17 ஞாயிற்றுக்கிழமை (30.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 125

# வட போர்முனையில் தாக்குதல்களை முன் நகர்த்த மழையே குந்தகம்

## களமுனைத் தளபதிகள் ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பு

கொழும்பு, மார்ச் 30

**வடக்கின் போர்முனைகளில் இராணுவத்தினரின் தாக்குதல்களை - படை நடவடிக்கைகளை - முன்நகர்த்துவதற்கு அப்பகுதிகளில் தொடரும் மழை மற்றும் வெள்ளம் குந்தகமாக உள்ளன. இவ்வாறு வடக்கு மற்றும் வன்னி களமுனைத் தளபதிகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரில் எடுத்து உரைத்துள்ளனர் - விளக்கியுள்ளனர்.**

வடக்கின் போர்முனைகளில் குறிப்பாக வன்னிப் போர்முனைகளில் இராணுவ நடவடிக்கைகள் மந்தகதி அடைந்திருப்பது குறித்து ஜனாதிபதி வினாவினார் என்றும், அப்போதே மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் - தெளிவுபடுத்தப்பட்டதாகவும் - அறியவந்துள்ளது.

இயன்றவரை வடமுனைத் தாக்குதல்களைத் தொய்வின்றி மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி களமுனைத் தளபதிகளிடம் கூறினார் என்றும் சொல்லப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தலைமையில் விசேட பாதுகாப்புச் சபை மாநாடு நடைபெற்றது. அதற்கு வடக்கு, வன்னிப் பகுதிகளிலிருந்தும் களமுனைத் தளபதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். மற்றும் முப்படைகளின் தளபதிகளும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சுமார் ஐந்து மணிநேரம் நடைபெற்ற இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச சபை பிரதித் தலைவர் அண்ணாமலை சுட்டுக் கொலை

கொழும்பு, மார்ச் 30

மொனறாகலை பிரதேச சபையின் பிரதித்தலைவர் டாக்டர் நாராயணசாமி அண்ணாமலை முத்துலிங்கம் (வயது 61) நேற்று மாலை 6 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மொனறாகலையில் பிரதான வீதியில் உள்ள தமக்குச் சொந்தமான தனியார் மருத்துவ மனையில் அவர் இருந்த போது அங்கு வெள்ளை வானில்வந்தவர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச்சென்றனர்.

படுகாயமடைந்த அவர் மொனறாகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

ஊவா மாகாண பொலிஸ் அத்தியட்சகர் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளார்.

## ‘உதய சூரியன்’ சின்னத்தை தமதாக்கி தேர்தலில் போட்டியிட ஆனந்தசங்கரி முயற்சி

கொழும்பு, மார்ச் 30

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ‘உதய சூரியன்’ சின்னத்தை பயன்படுத்தும் முழு உரிமையையும் கைப்பற்றி அந்தச் சின்னத்தில் - அந்தப் பெயரில் - எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டி இடுவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எத்தனித்து வருகின்றார்.

‘உதயசூரியன்’ சின்னத்தை பயன்படுத்துவதற்கான முழு உரிமை தமக்கு இருப்பதை அங்கீகரிக்கும் படி தேர்தல் ஆணையாளர் நாயகத்தை எழுத்து மூலம் அவர் கோரி இருக்கிறார் என அறியவந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

கொழும்பு, மார்ச் 30

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மாலை வேளையில் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறிப்பாக மேல், வடமத்திய, மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகணங்களில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியைத் திறந்துவிட்டு என்னை கொல்ல அனுமதிக்கச் சொல்கிறீர்களா?

### சிவில் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி சீற்றம்

கொழும்பு, மார்ச் 30

ஏ-9 வீதியைத் திறந்து புலிகள் என்னைக் கொலை செய்வதை அனுமதிக்கச் சொல்கின்றீர்களா?

- இவ்வாறு காட்டமாகக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஏ-9 வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிட அரசு முயற்சிக்க வேண்டும் என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சீற்றம் கொண்டார் என்று அறியவருகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகளைப் பேணுவதற்கு பங்களிப்பு செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளதால் விலகுகிறோம்

### சர்வதேசப் பிரமுகர் குழு உறுப்பினர் தகவல்

கொழும்பு, மார்ச்30

சர்வதேசப் பிரமுகர்கள் குழுவின் பல சிபாரிசுகள் நிராகரிக்கப்பட்டன அல்லது கவனத்தில் எடுக்கப்பட்டாமல் விடப்பட்டன. அதனால் இலங்கையின் மனித உரிமைகளைப் பேணுவதில் எம்மால் பங்களிப்புச் செய்ய முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டது - ஏற் பட்டது. அதனால் நாம் அந்தக் குழுவிலிருந்து ஒட்டுமொத்தமாக விலக அதுவே காரணம்.

அரசாங்க அதிகாரிகள் மனித உரிமைகளை மீறிய சந்தேக நபர்களாக நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில், சர்வதேசப் பிரமுகர்கள் குழுவின் பிரசன்னத்துக்குத் தாழ்ப்பாழ் போடப்

(16ஆம் பக்கம் பார்க்க)

**நம்பிக்கையுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாக மாற்றத்தை தொடர்ந்து. நடைமுறைபடுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் வெற்றிகரமான எதிர்காலத்தை தோற்றுவிக்கும் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நம்புகின்றது.

மேன்மை தங்கிய ஜனதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களில் தனிப்பட்ட முயற்சிகளில். தேசியவிமான சேவையின் வெற்றியும். நாட்டின் அபிவிருத்திக்கு அதன் பங்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளன.

சுயாதீனமாக இயங்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ். நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் சேவையுடன். நாட்டின் அபிவிருத்திக்கு இணைந்து பணியாற்ற. புதிய திட்டங்கள் உருவாக இந்த முயற்சிகள் உறுதுணையாக இருந்துள்ளன.

எதிர்வரும் 2008ம் ஆண்டு ஏப்பிரல் முதலாம் திகதி உத்தியோக பூர்வமாக நிறுவனத்தின் நிர்வாகம் கையேற்கப்படும் பொழுது இந்த புதிய திட்டம் திரு. லலித். டி. சில்வாவை ஆலோசகராக கொண்டு இயங்கும் இயக்குனர் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புதிய நிர்வாக மாற்றத்துடன். புதியதொரு சகாப்தத்தில் ஒளிமயமான எதிர்காலம் நோக்கி பயணிக்கவிருக்கின்றது. புதிய திட்டத்தினால் ஏற்படும் இந்த மாற்றம் எமது விமான சேவைக்கு புதிய உத்வேகத்தை தரவிருக்கின்றது. புதிய சிந்தனைகள். புதிய திட்டங்கள் என்று இயங்கவுள்ள எமது விமான சேவை மற்றைய விமான சேவைகளுக்கு வீரியமான. விறுப்பான போட்டியாக அமையும். மஹிந்த சிந்தனை தந்த உள் க்கத்தின் வெளிப்பாடே இன்று புதிய திட்டத்தில் புதிய வேகத்துடன் நம்மை ஈடுபடுத்தியுள்ளது.

மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தனிப்பட்ட முயற்சிகளாலேயே தேசியவிமான சேவையின் வெற்றி கிடைக்கவுள்ளது. இந்த வெற்றியை நாம் பெறுவதற்கு ஜனாதிபதி அவர்களின் மதிநுட்ப வழிகாட்டலில் நாம் பணிபுரிய முன்வரவேண்டும். சுயாதீனமாக இயங்கும் இந்த நிறுவனம் நாட்டின் அபிவிருத்தியில் தமக்குள்ள பங்கினை மனதில் நிறுத்த வேண்டும்; அதே வேளை வர்த்தக ரீதியில் வளமான நிறுவனமாகவும் செயல்படவேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

நிறுவனத்தின் ஊழியர் அனைவரினதும் கடமையுணர்வும். ஈடுபாடும் இந்த நிறுவனத்தை உயர்ந்த சிகரங்களை நோக்கி அடியெடுத்து வைப்பது மட்டுமல்லாமல் மற்ற விமான சேவைகள் பின்பற்றுவதற்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்கவைக்கும்.

விமான சேவை உள்ளடக்கிய. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய பயணிகள் சேவை. பொதிகள் சேவை. விமான எந்திரயவில், உணவு சேவை. ஸ்ரீலங்கன் சுற்றுலா சேவை. பணத்திற்கு பெறுமதியான பயணிகள் சேவை. விமானவியல் தொழில் பயிற்சிகள் போன்ற பல்சாரப்பட்ட சேவைகளை இந்த புதிய திட்டம் நெறிப்படுத்தும்.

முப்பதாண்டு சேவை அனுபவம் மிக்க இந்த நிறுவனம் துடிப்பான, வளர்ச்சியான முறையில் நமது நாட்டின் இலக்குகளை அடைவதற்கு உதவ வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார். (அ/562003)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடபகுதி இளைஞர்கள் மூவர் மொறட்டுவைப் பகுதியில் மாயம்

கொழும்பு, மார்ச் 30

மொறட்டுவையில் வசித்துவந்த மூன்று வடபகுதி இளைஞர்கள் வெள்ளைவானில், சிவில் உடையில் வந்தோரால் அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும், அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்று அறியமுடியாதுள்ளது எனவும் உறவினர்களும், நண்பர்களும் பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

-இவ்வாறு பிரதியமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்த தகவல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மட்டுவிலைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை கஜன், அளவெட்டியைச் சேர்ந்த கணேசன் செல்வரஞ்சன், வடமராட்சியைச் சேர்ந்த சிவலிங்கம் ஆரூரன் ஆகிய மூன்று பட்டதாரி மாணவர்களே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த வாலிபர்கள் மூவரும் பட்டப்படிப்பை முடித்துவிட்டு வெளிநாடு செல்வதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர் எனவும், கஜன் பட்டயக் கணக்குப் பயிற்சி செய்பவர் என்றும், இரண்டு வாரங்களில் செல்வரஞ்சன் லண்டன் செல்வதற்கு கல்வி விசா பெற்றுள்ளார் எனவும், ஆரூரன் எம்.எஸ்.ஸி. பட்டப்படிப்பு மேற்கொண்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் கைதானார்களா அல்லது கடத்தப்பட்டார்களா என்று அறிய முடியாமல் இருக்கின்றது எனவும் நீண்டகாலமாக இப்பகுதியில் வசித்துவந்ததுடன், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் படித்து வந்தனர் எனவும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இதறகிடையில் பாணந்துறை கெசல்வத்தைப் பகுதியில் தாயுடன் வசித்துவந்த 27 வயது இளைஞரான ராஜேந்திரன் பிரதீப்குமார் கொழும்பு கடற்கரைப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என அவரது தாயாரான ராஜேந்திரன் ராஜேஸ்வரி பிரதியமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மொறட்டுவை மாணவர்கள் தொடர்பாகவும், பாணந்துறை இளைஞர் தொடர்பாகவும் பிரதியமைச்சர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு இயக்குநர் நந்தன முனசிங்கவுக்கும் அறிவித்துள்ளார் எனக் கூறப்பட்டது.

# சுங்க வரியின்றி அரிசியை எவரும் இறக்குமதி செய்வதற்குச் சலுகை

கொழும்பு,மார்ச் 30

அரிசியை வரியின்றி எவரும் இறக்குமதி செய்யலாம். அரிசி இறக்குமதிக்கான சுங்க வரியை அரசு நீக்கியதன்மூலம் இந்தச் சலுகை ஏற்பட்டுள்ளது என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாலைளிகையில் வியாழன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது:

செயற்கை அரிசி விலையேற்றத்தைத் தடுத்து, நுகர்வோருக்கு நிவாரணமளிக்கும் வகையில் அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டு வந்த கிலோவுக்கு 20 ரூபா சுங்கவரியை அரசாங்கம் நீக்கியுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு ஏற்ப, எந்தவொரு தனிநபரும் நிறுவனமும் அரிசி இறக்குமதி செய்யலாம். இதற்கு அரசாங்கம் தற்பொழுது அனுமதியளித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இறக்குமதி மீதான சுங்கவரி அறவிடப்படமாட்டாதெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் செயலாளர் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். (202)

# தமிழக மீனவர் தாக்கப்படும் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு

## சென்னையில் வைத்து ரணில் கருத்து

தமிழக மீனவர் தாக்குதலுக்குள்ளாகும் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கடந்த வியாழக்கிழமை புதுடில்லி சென்றார்.

புதுடில்லி செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ரணில் தமிழக மீனவர்கள் கடற்பரப்பில் தாக்கப்படுகின்றமை தொடர்பான பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண முடியும்.

நான் புதுடில்லியில் நடைபெறும் திருமண வைபவம் ஒன்றில் பங்கு பற்றுவதற்கான தனிப் பட்ட விஜயத்தினை மேற்கொண்டுள்ளேன். இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் எண்ணம் இல்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள ரணில் அங்கு முக்கியஸ்தர்கள் பலரை சந்தித்து பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானிடமிருந்து இலங்கை ஆயுதக் கொள்வனவினை மேற்கொள்வதனை இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணன் கண்டித்துள்ள நிலையில் ரணில் புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

# நல்லெண்ணெய் விலை உயர்வு

நவாலி, மார்ச் 30

குடாநாட்டில் நல்லெண்ணெயின் விலை 460 ரூபாவாக உயர்ந்துள்ளது.

எண்ணை தயாரிப்பதற்கு தேவையான எள்ளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பல எண்ணை உற்பத்தியாளர்கள் தமது தொழிலை கைவிடப் போவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இம்முறை அனைத்து விவசாயிகளும் நெல் அறுவடை முடித்து கையோடு எள் விதைத்திருந்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக ஏற்பட்டுள்ள பெரு மழையினால் வளர்ந்திருந்த எள் செடிகள் முற்றாக அழிந்துள்ளன.

எனவே போதியளவு எள் இறக்குமதி செய்யா விடின் எதிர் காலத்தில் பெரும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

INTER NET சேவை

மிகக்குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்பு E.மெயில் மற்றும் இதர சேவைகளையும் 24 மணிநேர சேவை யில் பெற்றுக்கொள்ளலாம்.

NET CALL - 10/=
இந்தியா - 25/=

யோகாஸ் கொமினிக்கேசன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
E. Mail :- Yogasvad@HotMail.Com

துரித தபால்கள் பொதிகள் சேவை
மறைம் மூக்காண்டை முன்னிட்டு
மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு 10% - 20%
வரையான பொதிகளுக்கு விசேட விலைக் கழிவு
FedEx Express
லண்டனுக்கு அனுப்பப்படும் 5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் விசேட சலுகை
1Kg 900/=
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
திருமுருகன் கொம் நெற்

நன்றி கூறுகிறோம்

இறை இரக்கத் திருவிழாவான இன்று, பெற்ற வரங்களுக்கு நன்றி கூறி இறை இரக்க புகழ் இன்னும் பரவ வேண்டி நன்றி தெரிவிக்கின்றேன்.
(A) ஓர் அடியான்.

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1969 ஆம் ஆண்டு பிறந்த, அத்தம் கன்னிராசி, கிரகபாவம் 34 ¾ உடைய யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றும் மணமகனிற்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு: விளம்பர இல. 5077 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

நீர் இறைக்கும் இயந்திரங்கள்
Robin Ey 15 - 02
Villiers Mr 25 - 02
Villiers Mr 12 - 02
உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: இல.103, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (ICRC அருகில்).

Aero Lanka

யாழ்.-கொழும்பு பொதிகள் சேவையும் பயணிகள் சேவையும்

★ யாழ். - கொழும்பு பயணிகள் சேவையினை நடத்தும் AERO LANKA நிறுவனத்தினர், தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பணிகள் சேவையினை மீண்டும் ஆரம்பித்துள்ளார்கள்.
★ குறைந்த செலவில் நிறைந்த சேவையைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம் AERO LANKA
★ 12 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஒரு வழிப் பயணக் கட்டணம் 9,000/= மட்டும்
இரு வழிப் பயணக்கட்டணம் 18,000/= மட்டும்
★ 02-12 வயதிற்கு இடைப்பட்டோருக்கான ஒருவழிப் பயணக்கட்டணம் 6,150/= மட்டும்
இரு வழிப் பயணக்கட்டணம் 12,300/= மட்டும்
★ 02 வயதிற்கு கீழ்ப்பட்டோருக்கான ஒரு வழி பயணக்கட்டணம் 1,050/= மட்டும்
இரு வழிப் பயணக்கட்டணம் 2,100/= மட்டும்
★ வாடிக்கையாளரின் நலன் கருதி எமது கிளை ஸ்தாபனம் சாவகச்சேரியிலும் இயங்குகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.
★ எனவே விரையுங்கள்....
இல.249 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-222 8700, 021-222 6242
Fax 021-222 5600
தலைமை அலுவலகம்: இல.500, காலி வீதி, கொழும்பு - 6
T.P. 011 250 5633, 011 250 5632, Fax 021-250 0626
இல.11, நவீன சந்தை (மேல்மாடி)
021-222 7079
Fax 021-222 7979

# மகளிர் தினவிழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரதேச மட்ட சர்வதேச மகளிர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ துறைத் தலைவர் திருமதி ... சிவலோகநாதன் கலந்து கொள்வார்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தன் செல்வம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் செல்வம் நேற்று (29.03.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன்-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை, இரத்தினம், செல்லத்துரை, பூபதியம்மா ஆகியோரின் சகோதரரும், பார்வதியின் அன்புக் கணவரும், பேரின்பநாதன் ( தலைவர், யாழ்.போதனா வைத்தியசாலை சொக்கிய சேவை சிக்கன கடன் நிவர்த்திச் சங்கம்), நிர்மலநாதன் (யாழ்.மாநகரசபை), தர்மராஜா (தொல்லிப்பழை வைத்தியசாலை), நேசநாதன் (சுகாதாரத் திணைக்களம்), தயாபரன் (கோப்பாய் வைத்தியசாலை), சந்திரவதனா, சாரதா (லண்டன்), அருணமாறன் (சவுதி), மதிமாறன் (யூனியன் அஸ்சூரன்ஸ், யாழ்.பிராந்திய கிளை P.L.C) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஜெயா (யாழ்.போதனா வைத்தியசாலை), ரோகினி, சசிகலா (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), லிங்கறோஜினி, வசந்தராணி (அச்சுவேலி, சரஸ்வதி வித்தி.), தர்சிகா, சத்தியநேசன், ஸ்ரீபரன் ஆகியோரின் அன்பு மாமனும், கபில், குயால், நிலக்சனா, நிக்ஷபன், லக்சிகா, ஜென்சிகா, ஸ்ரீராம், நிகர்ஷன், நிரோஜன், தனேஷ், பிரவீன், திவ்யாந், கஜானா, ரோபிகன், கோபிராஜ், சபீனா, அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2008) ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைத்தியசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
T.P. 077-711 1666 (72601)

தகவல்: பிள்ளைகள்.

## திருமதி முத்துப்பிள்ளை கந்தையா

மறவன்புலோவை நிரந்தர வதிவிடமாகவும் சுன்னாகம் தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி முத்துப்பிள்ளை கந்தையா நேற்று (29.03.2008) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அமிர்தாம்பிகை மற்றும் சந்திரசேகரம், யோகாம்பிகை, பிறைசூடி, லோகநாதன், நகுலேஸ்வரி, கோமளாதேவி ஆகியோரின் தாயும் செல்லையா, சிவலிங்கம், கைலாயபிள்ளை, துரைராசா, சந்திராதேவி, நாகேஸ்வரி, கனகமணி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.03.2008) சனிக்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம். தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் துடுப்பாட்டம்

Official Media Sponsor
உதயன்

## பெரும் எதிர்பார்ப்புடன் முதல் நாள் மோதல் நேற்று விறு விறுப்பாக ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம், மார்ச் 30

'இந்துக்களின் துடுப்பாட்டம்' என வர்ணிக்கப்படும் யாழ். இந்து - கொக்குவில் இந்து கல்லூரிகளுக்கு இடையிலான மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நேற்றுக் காலை கொக்குவில் இந்து மைதானத்தில் கோலாகாலமாக ஆரம்பமாகியது.

காலை 8 மணிக்கு வைபவம் ஆரம்பமானது. பிரதம விருந்தினராக 'செலிங்கோ இன்சுரன்ஸ்' நிறுவனத்தின் யாழ். பிராந்திய விற்பனை முகாமையாளர் பி. நந்திக்குமரனும், கௌரவ விருந்தினராக ஈ. எஸ். பி. நிறுவனத்தின் உரிமையாளர் எஸ். பி. நாகரட்ணமும் கலந்து கொண்டனர்.

காலை 8 மணிக்கு இரு கல்லூரிகளினதும் 'பாண்ட்' வாத்தியக் குழுவினர் இசை முழுங்க விருந்தினர்கள், கல்லூரி அதிபர்கள், இரு கல்லூரிகளின் அணி வீரர்கள் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு விருந்தினர்கள் மங்கள விளக்கை ஏற்றினார்கள். பின்னர் இரு கல்லூரிகளின் கீதங்களும் இசைக்க அதிபர்கள் பாடசாலைக் கொடிகளை ஏற்றி வைத்தார்கள். மைதானம் இரு கல்லூரிகளினதும் ஆதரவாளர்களால் நிரம்பி வழிந்தது.

பாடசாலை மாணவர்கள் தத்தமது கொடிகளைப் போர்த்தியவாறு மைதானத்துக்கு வெளியே நின்று ஆரவாரம் செய்தனர். பார்க்கும் இடம் எல்லாம் நீலம், சிவப்புக் கொடிகள் பறந்தன.

காலை 10 மணிக்குப் போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரியின் அணித் தலைவர் தி. கௌசிகன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இந்த வேளையில் இரு கல்லூரிகளினதும் ஆதரவாளர்கள் மைதானத்தில் புகுந்து ஆரவாரத்தில் ஈடுபட்டார்கள். அவர்களை மைதானத்திலிருந்து வெளியேற்றப் போட்டி ஏற்பாட்டாளர்கள் கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இரு கல்லூரிகளுக்கும் இடையிலான முதலாவது மிகப் பெரிய துடுப்பாட்டமாக இது இருந்தமையால் பழைய மாணவர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியயோரும் பார்வையாளர் பகுதியில் கூடியிருந்தனர்.


இந் நிலையில் போட்டி ஆரம்பமானது. யாழ்.இந்து அணி களத்தடுப்பில் ஈடுபடவியூகத்தை வகுத்து நின்றது. கொக்குவில் இந்துவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் போட்டியின் ஆரம்பம் முதல் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். யாழ். இந்துவின் வேகப் பந்து வீச்சுக்கு முகம் கொடுத்து நான்கு, ஆறு என ஓட்டங்கள் பறந்தன. எனினும் பின்னர் வந்த யாழ். இந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் க.அஜித் கொக்குவில் இந்துவின் துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக விளங்கினார். இதனால் ஓட்ட எண்ணிக்கையில் சற்று வீழ்ச்சி கண்ட போதும் இடையிடையே கொக்குவில் இந்து வீரர்கள் நான்கு, ஆறு ஓட்டங்களை விளாசினார்கள். இந்தவேளையில் யாழ். இந்துவின் வேகப்பந்து வீச்சாளர் அஜித்தின் வேகத்தில் கொக்குவில் இந்துவின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின. கொக்குவில் இந்துவின் முதல் முக்கிய நான்கு விக்கெட்டுகளையும் அஜித் வீழ்த்தினார். இந்த வேளையில் கொக்குவில் இந்து அணி துடுப்பாட்ட வீரர் விளாசிய பந்து யாழ். இந்து வேகப் பந்து வீச்சாளர் அஜித்தின் காலைப் பதம் பார்த்தது. இதனால் காயம் காரணமாக அவர் மைதானத்தில் இருந்து வெளியேறினார். மதியபோசன இடைவேளையின் போது கொக்குவில் இந்து அணி 22 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களை பெற்றிருந்தது. கொக்குவில் இந்து வின் அதிரடி ஆட்டக்காரரான சி. வல்லவக் குமரன 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் அஜித் தின் பந்து வீச்சில் ஆட் டமிழந்தார். மதிய போசனத்தின் பின் போட்டி தொடா்ந்தது. (50-86)



அழைத்துவரப்படும் விருந்தினர்கள்



அணிவகுத்து நிற்கும் யாழ். இந்து அணி


அணிவகுத்து நிற்கும் கொக்குவில் இந்து அணி


நாணயச் சுழற்சியில் இரு அணித் தலைவர்களும்...


களமிறங்கும் கொக்குவில் இந்துவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள்


பந்தை எதிர் கொள்ள தயாராகும் கொக்குவில் இந்து வீரர்


பந்து வீசும் யாழ். இந்து பந்து வீச்சாளர்


ஆரவாரத்துடன்


விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் யாழ். இந்து வீரர்கள்


அமர்ந்திருக்கும் விருந்தினர்கள்

மைதானத்தில் கொடியுடன் கொக்குவில் இந்துச் சிறுவன்




ஆர்ப்பரிக்கும் ஆதரவாளர்கள்

(படங்கள்: லக்ஷ்மன், நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீன பேராயர்

## அதிவண.கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராஜா அவர்களை

## வரவேற்கும் விழாவும் KARL BORNMANN கட்டடத் திறப்பு விழாவும்

### எம்மை வாழ வைக்கும் தெய்வம்

அறியாமை இருளில் சிக்கித் தவித்த
எம்மை வழிப்படுத்தி ஒளி
மயமான வாழ்க்கைக்கு
இட்டுச் செல்கின்ற எமது
பேராயர் அவர்களை வரவேற்று
நீடூழி வாழ்க! என
இருகரம் கூப்பி வாழ்த்துகின்றோம்.

அருள்மனை இல்லப்பிள்ளைகள்,
பாதுகாவலர்கள்.

### கருணைக் கடலே வாழ்க

வறுமையினால் சிக்கித் தவித்து
வாழும் குடும்பங்களின் பிள்ளைகள்
கல்வியை இழந்து போகாது
நல்வாழ்வளித்து வரும்
பேராயர் அவர்களை
வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

அருள்மனை இல்லப் பிள்ளைகளின்
பெற்றோர்.

### ஏழைமக்களின் ஆயரே வாழ்க! வாழ்க!

ரஞ்சன்ஸ், கட்டடப் பொருள்
விற்பனை நிலையம்,
மானிப்பாய்.



பேராயர் பேரருட் திரு

### வாழ்க புகழ்

எங்களுக்கெல்லாம் குருவாக
இருந்த காலத்தில் வழி நடத்தி
நல்லறிவூட்டிய அதிவண. கலாநிதி
டானியல் எஸ்.தியாகராஜா அவர்கள்
எங்கள் பேராயராக இறையருள்
பெற்றதையிட்டு வாழ்த்தி
வரவேற்கின்றோம்.

பழைய மாணவர்கள்,
அருள்மனை இல்லம்.

### எமக்கோர் வழிகாட்டி

இன்றைய காலகட்டத்தில் பல
சவால்களை எதிர்நோக்கிய
நேரத்திலும் அவற்றுக்கு முகம் கொடுத்து
சகல இல்லங்களையும் நெறிப்படுத்தி
அறிவுரை வழங்கி ஆசீர்வதிக்கின்ற எங்கள்
பேராயர் அவர்களை வாழ்த்தி
வரவேற்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

A.C.பிரான்சிஸ்,
பொதுமுகாமையாளர்,
தென்னிந்தியத் திருச்சபை.

### பேராயரின் சமய சமூகப் பணி ஓங்குக!

சுந்தர்சன், மானிப்பாய்.

**டானியல் செல்வரத்தினம் தியாகராஜா அவர்களே**

**வருக! வளம் தருக! நல்லாசி வழங்க என வாழ்த்தி வரவேற்கின்றோம்.**

பழைய மாணவர் சங்கம்,
யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை.

(சி/552045)


புதுவருடத்தை முன்னிட்டு
மிகக் குறைந்த விலைகளில் கணனிகள்




Intel 1.8 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS




Intel 3.0 GHz 2M Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512 MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
Combo Drive
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

Celeron 1.6 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor




Intel 2.2 GHz Core 2 Duo Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS




PC SOLUTIONS
527/1, Navalar Road, Jaffna.
(TCT Super Market - Upstair)

Scholarship for Tally Training

AAT, CIMA, CMA, IAB, Chartered(SL), HND, HNDA
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், A/L
மாணவர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடையவர்கள்
இத்தேர்வில் பங்குபற்றலாம்.

30 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப்பரீட்சையில் வர்த்தகம் மற்றும் கணக்கியல் சம்பந்தப்பட்ட 30 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். எமது நிலையங்களிலேயே நடைபெறும்.இப்போட்டிப் பரீட்சையில் பங்குபற்றி 60% வரையிலான கட்டணக்கழிவை பெறமுடியும்.

Accountancy Intelligence Test

Win upto 60% Scholarship

Tally Training
AIT 2008
Accountancy Intelligence Test
Super Exclusive Offer
March 5th to April 27th
முன்பு கல்விக்கு ஏற்ற வேலை
இனி வேலைக்கு ஏற்ற கல்வி
REGISTRATION IN PROGRESS

Tally கணக்கியல்
மென்பொருள் கற்கைநெறி
(Certified Computer Accountant)

விரையுங்கள்
வெற்றி பெறுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு

CSC
Computer Software College
(Asian Business College)

101, 2ம் மாடி ஸ்டான்லி வீதி,
(மக்கள் வங்கிக்கு மேல்)
யாழ்ப்பாணம். Phone - 021 -222 8196


### கருத்தரங்கு

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் நடத்தும் மாதாந்த கருத்தரங்குத் தொடரின் 9ஆவது அமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆனைப்பந்தியில் உள்ள ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தில்நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் 'பூதசுத்தி' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ந.பிரசாந்த சர்மா கருத்துரை நிகழ்த்துவார்.(202)

### நாட்டுக் கூத்துப் போட்டிகள்

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை நடத்தும் திறந்த பிரிவுக்கான விசேட கூத்துப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப் போட்டியில் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், வேலணை திருவள்ளுவர் நாடக மன்றம், வேலணை நேதாஜி நாடக மன்றம், கரவெட்டி ம. க ணே ச லி ங் க ம் குழுவினர், உடுவில் பரமேஸ்வரன் குழுவினர், யாழ்.சென். ஜோசப் வித்தியாலயம், யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் ஆகிய நாடகக் குழுக்கள் பங்குபற்றவுள்ளன. (202)

### தவறி வீழ்ந்து வயோதிபப் பெண் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச்30

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்து வயோதிபப் பெண் மரணமானார். இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை கொடிகாமம், கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இரத்த அழுத்தம் அதிகரித்ததால் மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்தபோது தவறி வீழ்ந்தாகத் தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ், கரம்பகத்தைச் சேர்ந்த காசிநாதர் சிவயோகம் (வயது72) என்பவரே மரணமானவராவார்.

கொடிகாமத்திலிருந்து வாகனம் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (202-207)

## 27ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
11 . 10 . 1910



ஆண்டவன் அடியில்
04 . 03 . 2008

## அமரர் செல்லையா சின்னம்மா

எங்கள் அன்பு அம்மாவே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டீர்களே
உங்களைப் பிரிந்து நாங்கள் தனிமரமாய்த் தவிக்கின்றோம்
இனி நாங்கள் உங்களை எங்கே காண்போம்.

இன்று (30.03.2008) நடைபெறும் மோட்ச தீபக் கிரியைகளின் மூலம் உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இராணி வாசம், மல்லாகம். (72534) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருகிச் சிதைவுண்ட "வில்க்கின்ஸ்" பனித்திட்டு 2 தீவுகளுக்கு இடையே நூலில் தொங்குகிறது!



காலநிலை மாற்றங்கள் ஏற்படுத்தி வரும் அழுத்தம் காரணமாக அந்தாட்டிக்கா பிரதேசத்தில் பாரிய பனிக்கட்டிப் பாறைப் படிவம் ஒன்று இளகி உடைந்து கொண்டு சிதறுண்டுபோக ஆரம்பித்துள்ளது. செயற்கைக் கோள் படங்கள் மூலம் இந்தப் பனிப்பாறை உடைப்பெடுப்பதை அவதானித்துள்ளார்கள் விஞ்ஞானிகள்.

கடந்த 30 ஆண்டு காலத்தில் மேற்கு அந்தாட்டிக்காகுடாப்பகுதியில் உடைந்து கடலில் மூழ்கிப் போயுள்ள பனிப்பாறைகளில் இப்பொழுது உடைந்து கொண்டிருக்கும் "வில்க்கின்ஸ்" என்ற பனிப்பாறையும் ஒன்று.

13,680 சதுரகிலோமீற்றர் பரப்பளவு உள்ள பனிப்பாறையிலிருந்து பாரிய பனித் திட்டு ஒன்று பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி சிதைந்து போயிற்று. அதன் தாக்கம் காரணமாக இம் மாதத்திலும் சிதைவுகள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க தேசிய பனி மற்றும் பனிக்கட்டி புள்ளி தரவு மத்திய நிலையத்தின் தகவல்களின்படி 570 சதுர கிலோமீற்றர் அளவு பனிப்பாறை சிதைந்து போயிற்று.

### இரண்டு தீவுகளுக்கிடையே தொங்கிக் கொண்டுள்ள பனிப்பாறை

மிகப் பிந்தி கிடைத்துள்ள செயற்கைக் கோள் படங்களின்படி ஆறு கிலோமீற்றர் சதுர அகலம் கொண்ட பனிப்பாறையானது அந்தாட்டிக்காவின் தென்மேற்கில் இரண்டு தீவுகளுக்கிடையில் தொங்கிக் கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

## கடல்நீர்மட்டம் உடனடியாக உயர்வது நிச்சயமில்லை எனினும் பெரும் பனிப்பாறைச் சிதைவு சாத்தியம்

பனிப்பாறை சிதைவுறுவதை முதலில்அவதானித்தவரானடெட்ஸ்காம்போ என்ற ஆய்வாளர் இது பற்றிக் கூறுகையில் பூமியின் மிக வேகமாக வெப்பமடைந்துவரும் குறிப்பிட்ட ஒரு பகுதியில் இந்தப் பனிப்பாறை சிதைவு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

கடந்த 50 ஆண்டுகாலத்தில் அந்தாட்டிக் குடாப் பகுதியில் வெப்பமானது ஒவ்வொரு புத்தாண்டு காலத்திலும் 0.5 பாகை முதல் 3பாகை அளவுக்கு அதிகரித்து வந்துள்ளது.


'வில்க்கின்ஸ்' பனிப்பாறை சிதைவுறுவதை அவதானித்துவந்த விஞ்ஞானிகள் குழுவில் பிரிட்டிஷ் அந்தாட்டிக்கா ஆய்வாளர்களும் இருந்துள்ளனர். இவர்கள் உடைந்து சிதறிக் கொண்டிருக்கும் பனிப்பாறைப் பகுதியின் மேலாக விமானத்தில் பறந்து கண்காணிக்கவும் ஏற்பாடு செய்திருந்தனர். "பனித்திட்டு நூல் இழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது" என்று பிரிட்டிஷ் விஞ்ஞானியான டேவிட் வாகம் என்பவர் கூறியுள்ளார்.

இது பற்றிய பிந்திய புள்ளிவிவர அட்டவணைகளை ஆராய்ந்த ஆஸ்திரேலிய விஞ்ஞானி டாக்டர் அயான் அவிசன் கூறுகையில் - "துருவப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்கு சீதோஷ்ண நிலைமைகள் உயர்ந்து செல்லும்போது மாற்றங்கள் எவ்வளவு விரைவாக நிகழக்கூடும் என்பதை இது காட்டுகின்றது" என்று கூறினார்.

## தென்துருவப் பகுதியில் வெப்பம் அதிகரிக்கிறது


### வெப்பம் அதிகரிப்பால் துருவ நிலையும் மாறுகிறது

இந்தப் பிரதேசம் துரிதமாக வெப்பமடைவதை காட்டுகிறது. மனிதனால் ஏற்படுத்தப்படும் வெப்பத்தினால் துருவப் பகுதியில் என்ன சம்பவிக்க முடியும் என்பதை இது காட்டுகிறது என்றார் அவர். ஆட்டிக் மற்றும் அந்தாட்டிக் பகுதிகளில் வெப்பத்தின் அளவு பெரும் அளவில் அதிகரிப்பதைக் காணமுடிகிறது என்றும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.




குளிர்காலம் அண்மித்துக் கொண்டிருப்பதால் வில்க்கின்ஸ் தாக்குப்பிடிக்கக்கூடும். ஆனால் அடுத்த ஜனவரியில் மீண்டும் சிதைவுறத் தொடங்கிவிடும். அடுத்த பருவத்தில் பனிப்பாறையின் மூன்றில் ஒரு பகுதி அழிந்துவிடக் கூடும் என்று நினைக்கின்றேன் - என்று கூறினார் டாக்டர் அவிசன்

## அந்தாட்டிக்காவுக்குத் தெற்கே பனிப்பாறை உருகும் வேளையில் கடல் மட்டம் 5 மீற்றர் உயரும்




2002ஆம் ஆண்டில் 30 நாள்களில் 'லார்சன் - பி' என்ற பனிப்பாறை அழிந்து போனதற்குப் பின்னர் அழிந்து போகும் மிகப்பெரிய பனிப்பாறையாக வில்க்கின்ஸ் இருக்கப்போகிறது.

### கடல் மட்டம் உயரும் என்ற அச்சம்

துருவப் பகுதியில் வெப்பம் அதிகரித்து வருவதும் பாரிய பனிப்பாறைக் கட்டிகளும் திட்டுகளும் உருகிச்சிதைந்து வருவதும் பனிப்பாறைகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இதனால் உலகக் கடல் பரப்பின் நீர் மட்டம் உயரக்கூடும் என்று அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

'வில்க்கின்ஸ்' பனிப்பாறை சிதைவுருவதனால் உடனடியாக கடல் மட்டம் உயர்ந்துவிடும் என்று நிச்சயமாகக் கூறிவிட முடியாது என்றாலும், அந்தாட்டிக்காவின் மிகக்குளிரான பகுதிகளிலும் பெரும் அளவில் பனிப்பாறை சிதைவுகள் ஏற்படவாய்ப்பு ஏற்படக் கூடும் என்ற அச்சம் அதிகரித்து வருகின்றது.

### பனிப்பாறைகள் உருகுவதும் தீவிரமடைந்து வருகிறது

மேல் மட்டத்திலுள்ள பனிப்பாறைகள் இவ்வாறு சிதைந்து அழிந்து போகும்போது அடியிலுள்ள பனிப் பாறைகளுக்கு என்ன நேரும் என்பதைப் பற்றி அச்சொட்டாக எதிர்வுகூற முடியாமல் இருக்கிறது என்கிறார் டாக்டர் வில்சன்.

பெரிய பனிப்பாறைகள் அழிந்து போகத் தொடங்கியுள்ளதுடன் பனிப்பாறைகள் உருகுவதும் தீவிரமடைந்துள்ளது. எனவே அடுத்துவரும் நூற்றாண்டுகளில் கடல் மட்டம் அதிகரித்துவிடும் என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

### விழித்துக்கொண்டிருக்கும் பூதம்

அந்தாட்டிக்காவின் தெற்கில் சில பாகை உயரத்தில் பனிப்பாறை காணப்படுகின்றது. கடல் மட்டத்துக்குக் கீழே பாறையின்மீது இந்தப் பனிப்பாறைகளின் பெரும்பகுதி காணப்படுகின்றன.

## பூமிக்குத் தீங்கு செய்வதற்காக — விழித்துக்கொண்டிருக்கிறது ஒரு பூதம்!

பிரிட்டிஷ் அந்தாட்டிக் ஆராய்ச்சிப் பணிப்பாளர் கிறிஸ் ராப்வே இது பற்றிக் கூறுகையில் - இந்தப் பனிப்பாறைகளும் உருகி சிதையுமானால் உலகக் கடல் மட்டத்தை 5 மீற்றர் அளவுக்கு உயர்த்திவிடும் என்றார். மேற்கு அந்தாட்டிக் பனிப்பாறை படிவமானது "விழித்துக் கொண்டிருக்கும் பூதம்" என்று அவர் ஏற்கனவே வர்ணித்துள்ளார்.

வருடம் தோறும் இப்பனிப்பாறைப் படிவம் 132 பில்லியன் தொன் பனிக்கட்டியை இழந்துவருகிறது என்று விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளார்கள்.

—தொகுப்பு: நந்தன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேற்பு நிகழ்வும் கட்டடத் திறப்பும்

தென் இந்தியத் திருச்சபை யாழ்.ஆதீனப் பேராயர் அதி.வண. கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜாவை வரவேற்கும் நிகழ்வும் கட்டடத் திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் அருள்மனை சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.மு.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வினை அருள்மனைக் குடும்பத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். (202)

## ஆறாம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்

தோற்றம் 22 . 02 . 1967



மறைவு 30 . 03 . 2002

### திருமதி றமிலா அரசகேசரி

திதி: 30.03.2008

*ஆறாண்டுகள் ஓடி மறைந்தாலும் என் துயரம்*
*ஆறாது என் மகளே! உன் அன்பு முகம்*
*ஈண்டு நிலைத்திருக்கும் என் நெஞ்சில்.*

"புஸ்பவாசா", உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

அன்பு அம்மா, குடும்பத்தினர். (72435)

## 55ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 ★ 09 ★ 1938



மறைவு 05 ★ 02 ★ 2008

### அமரர் மயில்வாகனம் மகாலிங்கம்

(கார் மகான், குமாரலிங்கம் வீதி, இணுவில்)

நறுமணம் வீசிய உன் வாச மலரான வாழ்வு
இறைவன் பாத மலராகச் சூட்டப்பட்ட வேளை
நீங்கள் எம்மைப் பிரிந்ததில்லை என்ற உணர்வோடு வாழ்கின்றோம்.

*மைத்துனர்மார்:*

செல்வரட்ணம்(மன்னார்), இராசேந்திரம் (இணுவில்), விஜயரட்ணம் (மன்னார்).
செல்வரட்ணம், விஜயரட்ணம் (செல்வம் பிரதர்ஸ்- மன்னார்)

இணுவில் மேற்கு, இணுவில். (72526)


## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக் கோழி, கல்பேட்
உயிர் நிறை 390/=, சுத்தம் செய்தது 590/=
கால்நடைத் தீவனங்களும் புறொயிலர் கோழிக் குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம்.
சிவகுமாரன் பாம்,கல்வியங்காட்டுச் சந்தி.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்றர்
19, முருகேசர் லேன், நல்லூர். (72220)

## மணமக்கள் தேவை

1979 கனடா சிற்றிசன், R.C. வேத மணமகனிற்கு டாக்டர் அல்லது மருத்துவத்துறை சார்ந்த மணமகளும்; 1971 பூரட்டாதி, கிரகபாவம் 22, 2 இல் செவ்வாயுடைய மணமகன்; 1979 மகம், கிரகபாவம் 98, செவ்வாய் தோஷமற்ற மணமகள் ஆகியோருக்குப் பொருத்தமான மணமக்களும் தேவை.
தொடர்பு: விநூஸ் திருமணசேவை.
இல. 44A. புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. 0776146221. (72479)

## மணமகன் தேவை

யாழ்.கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 25 வயதுடைய, டாக்டர் மணமகளுக்கு எஞ்சினியர் அல்லது டாக்டர் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றார்கள். *(வெளிநாட்டில் வேலை செய்வோர் விரும்பத்தக்கது).*
தொடர்பு: வி/இ- 5075,
மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (72419)

## தவறிவிட்டது

மரியநாயகம் சுபாஷினி, 28. கொண்டடி வீதி, குருநகர் என்னும் விலாசமுடைய தே.அ.அ.இல. (845202184V), விசேட அ.அ.இல. (0901023205) சிவப்பு நிற கைப்பையில் மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளைக்கு அருகில் 25.03.2008 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P. 222 3030 (72525)

www.thaalee.com என்கிற website மூலமாக இயங்கும் திருமண சேவையில் வயது, படிப்பு, உத்தியோகம், ஜாதி, சமயம், சொந்த இடம், வாழும் நாடு, ஜாதகம், புகைப்படம், குடும்ப விபரம் போன்ற சகல விபரங்களுடன் 3600 க்கும் மேற்பட்ட மணமக்களுடைய விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மணமக்களைத் தெரிவு செய்வதற்கு, இதைவிட உங்களுக்கு என்னதான் வேண்டும் ? ஒரு Computer இல் www.thaalee.com என்பதன் மூலம் நீங்கள் விரும்பும் மணமக்களைப் புகைப்படம் உட்பட சகல விபரங்களுடன் பார்த்து தெரிவு செய்துவிட்டு உடனே என்னை நாடுங்கள். S.Sarma J.P.
☎: 2523127

## இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் படியுங்கள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.
உயர் தரம் A/L 2 சித்திகளுடன்
பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன
SMS 011 - 4520270 Name & Address for details
Contact: 0777 317043
Company Secretarial Services (Pvt) Ltd.


## ஒன்பதாண்டு நினைவு

பிறந்தது 04 . 09 . 1941



பிரிந்தது 09 . 04 . 1999

### அமரர் சின்னையா மார்க்கண்டு

திதி: அபரபக்க அட்டமி (30.03.2008)

பாசமெனும் மழை பொழிந்து ஆசையாய் எமை வளர்த்தீர்
இடர்பல வந்த போதும் ஏணியாய் ஏற்றி வைத்தீர்
ஆலமரமாய் எங்களுக்கு நிழல் தருவீர் என்றிருக்க
இடைநடுவே துடிக்க வைத்தே ஆண்டுகள் ஒன்பதானதே!

*நி.முகவரி:*
மறவன்புலோ மத்தி.
*த.முகவரி:*
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/552040)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 31 . 03 . 1923



அம்மன் மடியில் 12 . 04 . 2004

### அமரர் பண்டாரி வேலாயுதம்

(வேரற்கேணியடி,மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)

திதி: 30.03.2008

நூறு முறை கூப்பிட்டு நொந்துமே போய் விட்டோம்
ஆறுதல் சொல்ல ஏன் வரவில்லை அப்பா!
தேறுதல் சொல்ல எமக்கென யாருமில்லை
திரும்பியே வாரும் அப்பா! தெருவழியே பார்த்திருப்போம்
நிம்மதியின்றி நித்தமும் அழுகின்றோம் ஆதரவு அற்றுவிட்டோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (72491)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 ★ 06 ★ 1943



மறைவு 25 ★ 03 ★ 2007

### அமரர் சின்னவன் கணபதிப்பிள்ளை (பெரியதம்பி)

திதி: 30.03.2008

**அன்போடு அரவணைத்து- எமை**
**பண்போடு பேணிக்காத்து வளர்த்து**
**ஆறாக வந்த துன்பங்கள் நீறாகிப் போக- உன்தன்**
**உழைப்பதனைச் சாறாகப் பிழிந்து அர்ப்பணித்த- தந்தையே!**
**இதை எவ்வாறு புகழ்ந்து இசைப்போம்?**
**ஓராண்டு அல்ல உயிருள்ளவரை உங்களை நேசிப்போம்.**

குடத்தனை கிழக்கு,
குடத்தனை. (72524)

[illegible] குடும்பத்தினர்.

### பண்ணையாளர்களுக்கு கோழிக்குஞ்சுகள் விநியோகம்


யாழ்ப்பாணம், மார்ச் 30

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அச்சுவேலி பிராந்திய கோழிப்பண்ணையில் இயந்திரத்தின் மூலம் பொரிக்க வைக்கப்பட்டப்பட்ட ஒரு நாள் குஞ்சு 100 ரூபா வீதம் விற்பனை செய்யப்படவுள்ளதாக உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் தங்கள் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களில் [illegible] கேட்டுள்ளார். (202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 08 1931



உதிர்வு 29 02 2008

### அமரர் ஆறுமுகம் செல்லத்துரை (தியாகு)

ஐயா! ஐயா! அன்புத் தெய்வமே!
நெஞ்சம் துடிக்குதையா! நினைவு தடுமாறுதையா!
உம் பிரிவை அறியா எம் மழலைச் செல்வங்கள்
ஐயா வருவார் என்று வாசலில் காத்து நிற்பதைக் காண
பஞ்சினிலே தீ போல் பாழ் வயிறு வேகுதையா!

ஊர் போற்றும் உத்தமராய் நீர் வாழ்ந்து
உற்றாரை உறவை ஊரைப் பேணி- எங்கள்
சொத்தாக இருந்தாய்- நிந்நிலத்தில்
வித்தாகிப் போன பின்பும் எம் மனதில்
விருட்சமாக வாழ்வாய் வேருன்றி!

*29.02.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (30.03.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு, மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

கச்சாய் தெற்கு, கொடிகாமம். (சி/551996) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகநலனிற்காய் சந்தனமாய்க் கரைந்து மறைந்த நாடறிந்த எங்கள் தலைவர் தந்தை அமரர் நந்திக்கு (வாழ் நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்) இன்று அகவை எண்பது. தனது வாழ் நாளின் பெரும் பகுதியை மருத்துவ பீடத் அவற்றைத் தனது அறிவியல் சிந்தனைக்கு உட்படுத்தியமையை அவரது படைப்புகள் மூலம் காணமுடிகிறது. பின்னர் மருத்துவத்துறையில் அவர் ஏற்றுக்கொண்ட சமுதாயமருத்துவம் அவருடைய பன்முக ஆற்றலையும் மனித நேயத்தையும் தன்னுள்ளே பல்துறைசார் ஆளுமைகளைக் கொண்டிருந்தவர். ஒருபுறம் சமுதாய மருத்துவப் பேராசிரியர், மறுபுறம் ஆளுமை மிக்க நிர்வாகி, இன்னொருபுறம் மனிதநேயக் கருத் என்ற வேரில் விருட்சமாகி, கிளை பரப்பி நின்ற சமுதாய மருத்துவத்துறை இன்று பொலிவிழந்து நிற்கிறது. அவரது கனவுகளை நனவாக்கி சமுதாய மருத்துவத்

# பேராசிரியர் நந்தி என்றும் எங்களுடன் இருக்கிறார்; இருப்பார்
# மற்றவர் மறந்ததைப் பதிவு செய்யும் மனத்துணிவு மிக்கவர்

திற்காய் அர்ப்பணித்த அமரர் நந்தி தவமாய் எங்களிடம் வந்தது 30.03.1928. அவரை இந்நாட்டிற்கு கொடுத்ததற்காய் பெருமைப்பட்டவர்கள் நல்லூரைச் சேர்ந்த செல்லத்துரை-செல்லம்மா தம்பதியினர். அவருடன் வாழ்ந்ததால் புண்ணியம் பெற்றவர்கள் மனைவி சாந்தி மற்றும் பிள்ளைகள். அவருடன் 25 ஆண்டுகளுக்கு மேலாக அவருடைய வழி நடத்தலுடன் பணிபுரியக் கிடைத்தனால் பேறு பெற்றவர்கள் சமுதாய மருத்துவத் துறையினர். இன்று அவர் எங்களுடன் இல்லை. ஆயினும் அவருடைய செயற்திறனும் கடமை உணர்வும் மிக்க மாணவர்கள் மூலமும் வெளிப்படுத்த உதவியது.

அவரது மருத்துவப் பணியின் நிமித்தம் மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பின்னர் 1978 களில் தொடங்கி அவரது இறுதிக் காலங்கள் அதாவது 2005 வரை மருத்துவ பீடத்திலும் குறிப்பாகப் துக்களையும் சீர்திருத்த சிந்தனைகளையும் எழுத்துருவில் வழங்கிய படைப்பாளி- பேச்சாளர். மறுபுறம் சுகம் என்பது வெறுமனே உடல், உள, சமூகம் சார்ந்ததல்ல. அதனிலும் மேலாக ஆன்மீகம் சம்பந்தப்பட்டது என்பதை உறுதிசெய்த ஆன்மீக சிந்தனையாளர் எல்லாவற்றிற்கும் மேலாகக் கண்டிப்புக்குள்ளே கருணையை வைத்திருந்த மனிதநேயன்.

**வைத்திய கலாநிதி**
**ந.சிவராஜா,**
**சமுதாய மருத்துவத்துறை,**
**மருத்துவ பீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

நந்தியின் கற்பித்தலிலும் சரி, எழுத்துருக்களிலும் சரி, மேடைப் பேச்சுக்களிலும் சரி, சாதாரண கலந்துரையாடல்களிலும் சரி, எந்தவிதமான சோடனைகளோ சுற்றிவளைப்புகளோ இருந்ததில்லை. அர்த்தமுள்ள சுருக்கமான கருத்துக்கள்,



அமரர் நந்திக்கு இன்று அகவை எண்பது

# அவரது வேரில் விருட்சமாகிய சமுதாய மருத்துவத்துறை இப்போது பொலிவிழந்து நிற்கும் பரிதாபம்!

அவரது அழியாப் புகழ் கொண்ட படைப்புகள் வழியாகவும் என்றும் எங்களுடன் இருக்கிறார்; இருப்பார்.

அமரர் வாழ்நாள் பேராசிரியர் நந்தி அவர்களின் இளமைக் காலத்தின் கணிசமான பகுதி கிராமங்களில் கழிந்ததனால் அவருடைய பணியும் அதனுடன் சார்ந்த வாழ்க்கை முறையும் கிராமிய மக்களையும் அவர் தம் சுகநலன்களையும் ஆழமாக உள் வாங்கி போர்க்கால சூழலிலும் மருத்துவ பீடத்தையும் யாழ். மண்ணையும் மக்களையும் விட்டுப் பிரியாது வாழ்ந்த அர்ப்பணிப்பு, எங்கள் மக்களின் எண்ணங்கள், ஏக்கங்கள், விருப்பங்கள், வெறுப்புகள் எதிர்காலம் என்பன வற்றை அவரது கற்பித்தலிலும் கதைகளிலும் பதிய வைக்க முடிந்தது.

**பல்துறைசார் ஆளுமையாளர்**

எங்கள் சமுதாய மருத்துவத்தின் தந்தை தேவையை ஒட்டிய தேடல்கள், மற்றவர்கள் பார்க்க, பேசமறந்ததைப் பதிவு செய்யும் மனத்துணிவு என்பன காணப்பட்டதை அவருடன் நீண்ட காலம் பணியாற்றியதன் மூலம் எங்களால் உணரமுடிந்தது.

அமரர் நந்தியின் 80 ஆவது பிறந்த நாளில் அவருடைய தன்னலமற்ற சேவையையும் நினைவுகளையும் போற்றுகின்ற வணங்குகின்ற நேரத்தில் அமரர் நந்தி துறையையும் மருத்துவ பீடத்தையும் தாங்கும் தூண்களாக வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் அவரது மருத்துவ மாணவர்களைச் சார்ந்து நிற்கின்றது.

இறுதியாக நந்தியின் நினைவுகள் நானிலமுள நாள்வரையோங்கும் என்ற மருத்துவபீட மாணவர்களின் பொருத்தமான பாடல் வரிகளுடன் வணங்கி வாழ்த்துகிறோம்.

*சூழும் கடலும் சுழலும் புவியும்*
*சுடர்வோன் பரவும் நெடு வானும்*
*வீழும் மழையும் விரவும் காற்றும்*
*விளையும் நெல்லின் மணி தோறும்*
*ஆளும் தமிழின் அணி செய் புலமை*
*அளவில் ஔடத அறிவாற்றல்*
*நாளும் பரவும் 'நந்தி'யர் நாமம்*
*நாநிலமுள நாள் வரையோங்கும்.*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 05

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | | ■ |
| | ■ | | ■ | 5 | | ■ | 6 |
| 7 | 8 | | ■ | | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | 12 | ■ | |
| ■ | 13 | 14 | | ■ | 15 | 16 | |
| 17 | ■ | 18 | | | ■ | | ■ |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| ■ | 22 | | ■ | 23 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:.................................

விலாசம்:.................................

.................................

கையொப்பம்:.................................

**மேலிருந்து கீழ்**

1. தொடர்ந்து வருவது.
2. பழைய காலத்து வீடுகளின் முன் பக்கத்தில் அநேகமாக இது இருக்கும்.
3. வாழ்த்து.
4. குறைத்து விடு.
6. மனநிறைவு.
8. ஒழுங்கு முறையால் உருவாவது.
11. பூவின் ஒரு அங்கம்.
12. தந்தை.
14. முகம்.
16. இரத்தல்.
17. இன்னொருநாட்டுக்குச் செல்வதற்குப் பெறும் அனுமதி.
20. பெருக்கு.
21. தன்னுடைய.

**இடமிருந்து வலம்**

1. மறைந்த உலகப் பெருந் தலைவர் ஒருவரின் சுயசரிதம்
5. சேவை
7. காலஎல்லை
9. உயிரின் முதலாவது உரு
10. மூன்று
11. இராமனுக்கு இலக்குவன்
13. இந்து மதத்தின் ஓர் உட்பிரிவு
15. பங்காளி
18. தவம்
19. கருவியை இப்படியும் சொல்லலாம்.
21. சௌக்கியம்
22. குடி வகை ஒன்று
23. ஒரு வகை சூது விளையாட்டு என்பார்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்*

**சொற்சிலம்பம் போட்டி இல. 05**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (09.04.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப் படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 5 இல் வெற்றிபெற்றோர் விவரம் 13.04.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துக்கொள்ளத் தூண்டுவதே இப்போட்டி நடாத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு, பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பிவருவதால் பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 03 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

இடமிருந்து வலம்
(1) இராமாயணம் (5) வித்தை. (6) காவல்காரன் (9) சரி. (10) சீவ. (11) பத்திரகாளி (13) மந்திரி. (14) சுந்தரி. (15) தரகு. (17) பதம். (18) கரும்பு.

மேலிருந்து கீழ்
(1) இதிகாசம். (2) மாமூல் (3) ரணம். (4) ரத்னாவளி. (7) வரி. (8) காயத்திரி. (10) சீகாமரம். (11) பந்தம். (12)திரி. (13) மந்த. (14) சுப. (15) தரு. (16) குபு.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 03க்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — ஆ.பரமேஸ்வரி, நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

**2 ஆம் பரிசு** — திருமதி ஏ.சர்மிளா, இல.620, நாவலர்றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.


**3 ஆம் பரிசு** — துர்மதா கணேசலிங்கம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்குக் காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

# அன்புக்கு முன்னால் துன்பங்கள் சுமையல்ல சுகமே!

அன்பே கடவுள் அன்பினால்தான் கடவுள் அனைத்தையும் ஆண்டு நடத்துகின்றார். இதை நாம் இயற்கையைக் கூர்ந்து அவதானிப்பதன் மூலமும், எமது அன்றாட அனுபங்களைத் தியானிப்பதன் மூலமும் விளங்கிக் கொள்ளலாம்.

இந்த அழகிய இயற்கை, அதிலுள்ள வசித்திரமான உயிரினங்கள், எல்லாப் படைப்புகளிலும் உன்னத படைப்பாகிய மனிதர்கள் அனைத்தும் இறைவனது அன்பின் வெளிப்பாடாகும். இறைவன் எங்களைப் படைப்பதற்கான எந்தவொரு தேவைப்பாடும் அவருக்கு இருக்கவில்லை. நாங்கள் அனைவரும் அவரது நிரம்பி வழிகின்ற அன்பிலிருந்து சிந்தப்பட்டதுளிகளே.



ஞாயிறு ஒளி (?)

கடவுள் எம்மைப் படைக்கும்போதே எமது இருப்பின் அடி நாதத்திற்குள்ளே அன்பை விதைத்துள்ளார். அது முளைவிட்டு, காய்த்துக், கனிய வேண்டும். அந்தக் கனிகளிலிருந்து பல மரங்கள் உருவாக வேண்டும்.அதனால்தான் இயேசு "அன்பு" என்ற வார்த்தைக்குள் தனது போதனையையும், வாழ்வையும் உள்ளடக்குகிறார். அன்புசெய்து வாழுகின்றபோது எம் மத்தியில் எத்தனை மகிழ்ச்சி! எத்தனை சந்தோஷம்!

அன்பு என்ற ஒளியில் நாம் எமது நிதர்சன வாழ்க்கையின் நியமங்களைப் பார்க்கின்றபோதுதான் அன்பின் மகத்துவத்தைக் கலப்படம் எதுவுமில்லாமல் நாம் அறிந்துகொள்ளலாம். இங்கு அறிந்துகொள்ளலாம் என்பதைவிட அனுபவித்துக் கொள்ளலாம் என்பதே சிறந்தது. அன்பு என்பது அறிவு ரீதியாக அல்ல அனுபவரீதியாக விளங்கிக்கொள்ளப்பட வேண்டும்.

இயேசுவின் மனித அவதாரத்தின் நோக்கம் எமக்கு நிரந்தர அமைதியையும், பேரானந்தத்தையும் தருவதாகும். இதை அவர் தனது போதனையாலும் அடையாளங்களாலும் அவரது இறுதிக் காலத்திலே பாடுகள் மரணம் உயிர்ப்பினாலும் பெற்றுத் தந்தார். எப்பொழுது மனிதர்கள் இயேசுவின் போதனைகளை நடைமுறைப் படுத்துகிறார்களோ, எப்பொழுது இயேசு ஒருவரே மீட்பிற்கான வழியென்றும், அவரே மீட்பென்றும் நம்புகின்றார்களோ அப்பொழுது உண்மையான அமைதியும் சந்தோஷமும் கிட்டும்.

யேசுவின் போதனையென்பது அன்பு. இயேசு என்றாலும்அன்புதான். படைப்பின் போதேகடவுள் எம்மில் விதைத்த அன்புக்குச் செயல் வடிவம் கொடுக்கின்றபொழுது இயேசு தரும் விடுதலை சாத்தியமாகின்றது. ஒரு தாய் தான் உண்ணாமல் உணவு முழுவதையும் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டு பசியோடு இருக்கையில் அவள் துன்பப்படுவதில்லை. மாறாக ஆனந்தப்படுகின்றாள். உடல் ரீதியாக வேதனை இருந்தாலும் அந்தத் துன்பம் அன்பின் மிகுதியால் சுகமாகத்தான் அவளுக்கிருக்கின்றது.

ஆகவே அன்பு செய்வோம் அதனால் ஏற்படுகின்ற துன்பங்கள் சுமையல்ல சுகமே.

அருட்சகோ. தா. ஆ. றெஜிக்குமார் (அ.ம.தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதியற்ற சிறுவருக்கும் வலுவிழந்த முதியோருக்கும் அடைக்கலம் தந்து ஆதரிக்கும் ஒரு தாய்


ஆச்சிரமத்தை நிறுவிய சுவாமி
**பரமானந்தர்**

## வதிரி பரமானந்த ஆச்சிரமமும் அதன் மேலான பணிகளும்

வறுமையில் வாடும் சிறுவர்களையும் பராமரிக்க ஆளின்றித் தவிக்கும் முதியவர்களையும் இரு கரம் நீட்டி வரவேற்று அரவணைத்துக் கொள்ளும் தாயாக - கருணை இல்லமாக விளங்கிவருகின்றது. வடமராட்சியில் ஓர் ஆச்சிரமம்.


வதிரியைச் சேர்ந்த பரமானந்தர் சுவாமிகள் எனும் கருணை உள்ளம் படைத்த பெரியவரால் 1969 ஆம் ஆண்டு இந்த ஆச்சிரமம் தோற்றுவிக்கப்பட்டது. சிறுவர் - முதியோர் பராமரிப்பு இல்லமாக ஆரம்பிக்கப்பட்ட இது சுவாமிகளின் நேரடி கண்காணிப்பில் 12 ஆண்டுகள் பேணப்பட்டது.

ஆரம்பத்தில் வடமராட்சியிலுள்ளவர்களுக்கு மட்டுமே ஆதரவளித்து வந்தது என்றாலும் காலப்போக்கில் தமிழ்ப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகின்ற ஏழைஎளிய சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் ஆதரவு காட்டும் நிறுவனமாக மாறியுள்ளது.

**ஆண் - பெண், சிறுவர் - முதியோருக்கு அடைக்கலம்**

வட இலங்கை ஸ்ரீ பரமானந்த சிறார் - முதியோர் இல்ல ஆச்சிரமம் என்று பதிவு செய்யப்பட்டுள்ள இந் நிறுவனத்தில் தற்பொழுது பெண் சிறார்கள் 13 பேரும் ஆண் சிறார்கள் 20 பேரும் முதியவர்கள் 6 பேரும் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவ்வாச்சிரமத்தில் நிர்வாக அலுவலர் ஒருவரும் எழுதுநர் ஒருவரும் பாதுகாப்பு அலுவலர்கள் இருவரும் ஆண் மேற்பார்வையாளர் ஒருவர், பெண் மேற்பார்வையாளர் ஒருவர், சமயல் ஆள்கள் இருவர், முதியோரைப் பராமரிப்பதற்கு ஒருவர் மற்றும் தற்காலிக ஊழியர்கள் சிலரும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இவர்கள் தவிர இலவச சேவை வழங்கும் மருத்துவர்களும் உள்ளனர் ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை, வைத்தியர் மா.யோகேஸ்வரதேவர் ஆகியவர்கள் ஆச்சிரமத்தின் வைத்தியப் பணிகளைக் கவனித்துவருகின்றனர். இவைதவிர சிறுவர்களின் அறநெறி பாடங்களை தொண்டர் ஆசிரியர் வி.மாலினியும், த.சறோசா என்பவர் ஆங்கில பாடங்களையும் கவனித்துக் கொள்கிறார்கள்.


ஆலய வடிவமைப்பில் அமைந்துள்ள சுவாமி பரமானந்தரின் சமாதி.

**மேலதிகக் கல்வி ஊட்டலுக்கும் ஏற்பாடு**

இங்குள்ள மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை எட்டும் வகையில் அரச பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டு மேலதிகக் கல்வியை ஊட்டுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

மாலுசந்தி சின்னத்தம்பி வித்தியாலயம், வடமராட்சி மகளிர் வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இம்மாணவர்கள் முன்பள்ளி கல்வி முதல் க.பொ.த.உயர்தரம் வரை கல்வி பெற்று வருகிறார்கள். ஒருசில மாணவர்கள் பல்கலைக் கழகம் வரை சென்று உயர்நிலையடைந்திருப்பதாக அறிய முடிகிறது.

மாணவர், மாணவியர் 18 வயது வரை மட்டுமே ஆச்சிரமத்தில் வைத்துக் கொள்ளப்படுகின்றனர். அதன் பின் பெற்றோரிடம் அல்லது உறவினரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

**தொழில்கல்வி அளிக்கவும் முயற்சி**

இந்த வயதுக்குள் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கல்வியிலும் வாழ்க்கை நெறிமுறைகளிலும் பயிற்சி பெற்றுவிடும் இளம் வயதினர் பொதுவாழ்வில் இறங்கி வெற்றிகரமாக வாழ்க்கையை ஆரம்பிக்க முடியும். என்றாலும் ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் காலத்திலேயே தொழில் கல்வி ஏதாவதிலும் ஒன்றில் அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. இங்கிருந்து வெளியேறும் இளைஞர்கள், பொதுவாழ்வில் உறவினருக்குப் பாரமாக அமைந்து விடாமல் தமது சொந்தக் கால்களிலேயே நிற்கும் விதத்தில் ஆச்சிரமத்தில் இருக்கும் காலத்திலேயே தொழில் சார் பயிற்சிகளை அளிப்பது தொடர்பாக தற்போதைய நிர்வாகிகள் ஆலோசித்து வருகின்றனர்.


கடந்த 20 வருடங்களாக ஆச்சிரமத்தில் தங்கியுள்ள 80 வயதான வி. பத்மநாதன்.

ஆச்சிரமத்தில் தங்கியுள்ள பெண்களில் ஒருவரான திருமதி ஞானசௌந்தரி.

வயோதிபர்களைப் பொறுத்த வரை அவர்களுக்கு ஏற்ற உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களை அன்புடன் பராமரிக்கும் வகையில் உதவியாளர்கள் அமர்த்தப்படுகின்றனர்.

இவர்களின் பராமரிப்புக்கு வெளியில் இருந்து நலன்விரும்பிகளும் கருணை உள்ளம் படைத்தவர்களும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர். சில முதியோரின் வெளிநாட்டில் வதியும் பிள்ளைகள் அவ்வப்போது நிதி உதவிகள் அளித்து வருகின்றனர்.

**முதியோர் பெறும் அன்பும் ஆதரவும்**

உறவினர்களுக்குப் பாரமாக இருக்க விரும்பாத காரணத்தினாலேயே இவ் ஆச்சிரமத்துக்கு வந்து தங்கியிருப்பதாக முதியவர்கள் சிலர் கூறினார்கள். தமது சொந்த வீடுகளில் கிடைக்காத அளவு அன்பும் ஆதரவும் ஆச்சிரமத்தில் கிடைப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆதரவற்ற அநாதைகளான முதியோர்களை ஆச்சிரமத் தினரே பராமரித்து வருவதுடன் அவர் களின் இறுதிச்சடங்கினையும் அவர் களே மேற்கொள்வது குறிப்பிடத்தக் கது.

முற்றிலும் சைவசமய ஆச்சிரமம் என் பதால் மாணவ மாணவியர் சைவ ஆசாரங்களை முறைப்படி கடைப் பிடிக்க ஆதரவளிக்கப்படுகின்றது. அங்குள்ள முருகன் ஆலயத்தில் மூன்று வேளையும் பூசைகள் நடைபெறுகின் றன. இப்பூசை வழிபாடுகளில் சிறுவர் களும் முதியவர்களும் பக்தி சிரத்தையுடன் கலந்து கொள்கின்றனர்.

வதிரி பரிபூரணானந்த சுவாமிகள் 1987 ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அவரது இயற்பெயர் திருக்கேதீஸ்வரர் என்பதாகும். அவருடைய திருவுடல் சமாதிவைக்கப் பட்ட இடத்தில் மண்டபம் எழுப்பப்பட்டு பூசைகள் நடத்தப்படுகின்றன.

**வல்லழகனார்**

சுவாமிகள் சமாதியடைவதற்கு முன்பே ஆச்சிரமத்தையும் அதன் உடைமைகளையும் தர்மசாதனமாக எழுதி வைத்ததோடு அதனை நிர்வகிப்பதற்கான நிர்வாக சபை ஒன்றையும் ஏற்படுத்தினார். அச் சபையும் காலத்துக்கு காலம் மாற்றங்களுடன்செயற்பட்டுவருகின்றது.

ஆசிரி மவாசிகளால் பெண்களுக்கும் ஆண்களுக்குமான தனியான அறைகள் படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.


ஆச்சிரமத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள்.

ஆச்சிரமத்தின் செலவினங்களுக்கென மாதம் மூன்று லட்சம் ரூபாய் வரைத் தேவைப்படுவதாகவும் இதில் 75 வீதம் மட்டுமே வெளியிலிருந்து கிடைப்பதாகவும் அறியமுடிந்தது.

**ரூ. 28 லட்சம் செலவில் நவீன கட்டடம்**

தற்போது முதியோர் பராமரிப்புக்கென தனித்தனி அறைகள் கொண்ட நவீன வசதிகளுடனான கட்டடம் ஒன்று 28 லட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. வசதிபடைத்த முதியோர்கள் இவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆசிரமத்திற்கு மேலதிக வருமானம் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆச்சிரமத்திற்கு நூலகம் ஒன்று இல்லாமை பெரும் குறையாகக் கருதப்படுகிறது. அதேபோல் தொழில் பயிற்சிக்கான மண்டபமும் தேவையாக உள்ளது. இதற்கான நிதியுதவிகளை நலன் விரும்பிகளும் ஆதரவாளர்களும் வழங்கி உதவுவார்கள் என்று நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆரம்ப காலத்தில் இப்பராமரிப்பு இல்லத்தினை ஆரம்பித்து நிர்வகிப்பதில் சுவாமிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார். எனத் தெரிகின்றது. இவரது பரோபகார சிந்தனையும் கருணை உள்ளமும் வறிய சிறுவர்களுக்கும் ஆதரவற்ற முதியவர்களுக்கும் அவர் அடைக்கலம் தந்து பணியாற்றுவதைக் கண்ட உறவினர்களும் நண்பர்களும் உதவிகள் புரிந்துள்ளனர். ஆனால் அதற்கு மேலும் சுவாமிகள் தாமே தமது உடல் உழைப்பை நல்கி உழைத்தமை தெரிய வருகிறது. வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று நெல்லும் நிதியும் பெற்று வந்து ஆச்சிரமத்து வாசிகளை போஷித்தார் என்பதை அறிய மெய் சிலிர்க்கின்றது.

இன்று தர்மகர்த்தாக்களும் நிர்வாகிகளும் இணைந்து ஆச்சிரமத்தை தர்மசாலையாக மாற்றி நிர்வகித்து வருகின்றார்கள்.

**சுவாமிகளின் பூர்வீகம்**

சுவாமி பரமானந்தர் சிறுவயதிலிருந்தே ஆன்மீகப் பற்றுடையவராகக் காணப்பட்டுள்ளார். வதிரி செல்லையா பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட அவர் பின்னர் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில்தொடர்ந்து படித்துள்ளார். அதன்பின் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் உயர் கல்வியைப் பெற்றுள்ளார்.

கரணவாய்ப் பகுதியைச் சேர்ந்த செல்லாச்சிப்பிள்ளை என்பவரைத் திருமணம் முடித்து இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்த இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் 3 ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.

எழுதுவினைஞராக அரச சேவையில் இருந்துள்ள அவர் 55 வயதில் யாழ்ப்பாணம் கச்சேரியில் இருந்து ஓய்வுபெற்றார்.

குடும்ப வாழ்வில் தொடர்ந்து இருக்க மனமில்லாத நிலையில் சமயப் பணிகளிலும் தொண்டுகளிலும் ஈடுபட்டார்.

**குருவின் தரிசனம்**

1965 ஆம் ஆண்டு இந்தியாவுக்குத் தல யாத்திரை புறப்பட்ட பரமானந்தர்வட இந்தியாவில்'கணேஸ் புரி' என்ற ஆச்சிரமத்தை அடைந்து அதன் ஸ்தாபகர் முத்தா னந்தாவை குருவாகஏற்றுக்கொண்டு அங்கேயே தங்கியிருக்க விரும்பினார். முத்தானந்தா அதை ஏற்றுக் கொள்ளாமல் அவரை யாழ்ப்பாணம் திரும்பி அங்கே ஆச்சிரமம் அமைத்துஅநாதைகளுக்கு தொண்டு புரியுமாறு பணித்தார். அதற்கேற்ப தீட்சையளித்து பரமானந்தர் என்ற பெயரும் சூட்டி அனுப்பிவைத்தார்.

அதன்படி யாழ்ப்பாணம் திரும்பிய பரமானந்தர் தமது பூர்வீக வயற்காணியில் முதியோருக்கும் அநாதைச் சிறுவர்களுக்குமான ஆச்சிரமத்தை அமைத்து தொண்டு புரிவதில் ஈடுபடலானார். ✱

# யாழ்ப்பாணத்துக்கான தபாற்சேவை 1,128 வருடங்களுக்கு முந்தியது அது

### ஆசைப்பிள்ளை வன்னியார் சொந்தத்திலும் நடத்தினார்

**1880 ஏப்ரல்**

1880 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தளை வரையிலான தபால் வண்டிச்சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆரம்பத்தில் கதிரை கள் பூட்டப்பட்ட வண்டியிலேயே தபால்கள் எடுத் துச்செல்லப்பட்டன. இவை மெயில் கோச் (Mall Coach) என அழைக்கப்பட்டன. இலங்கையில் ரயில் சேவை அறிமுகமாகும்வரை குதிரை வண்டிகளிலேயே தபால்கள் எடுத்துச்செல்லப்பட்டன.



குதிரை வண்டி என்றால் சாதாரண குதிரை வண்டி அல்ல. நான்கு புறமும் மூடப்பட்டு மழை வெயில் என்பன படாதவாறு பாதுகாப்பான சதுரப் பெட்டிகளிலேயே தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன. தொடக்கத்தில் வெள்ளைக்காரர்களே தபால்களை எடுத்துச் சென்றனர்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் உயர் கல்விமான்கள் பலருக்கு முதலியார் பட்டம் வழங் கப்பட்டது.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

தெரிந்ததே. முதலியார் பட்டம் போன்று வன்னி யைச் சேர்ந்த இவருக்கு வன்னியனார் பட்டமும் பிரித்தானியரால் வழங்கப்படிருந்தது.

ஆசைப்பிள்ளை என்ற வன்னியனார் பிரிட்டிஷாரிடம் மிகுந்த செல் வாக்குள்ளவராக விளங்கினார். வன்னியின் அபிவிருத்திப்பணியில் பெரும் பங்காற்றிய இவர் யாழ்ப்பாணத்திற்கும் மாத்தளைக்குமிடையேயான மெயில் கோச் சேவையையும் தானே எடுத்து நடத்தினார். பிரிட்டிஷ் ஆட்சியாளரிடம் இவருக்கு இருந்த செல்வாக்கைப்பற்றிக் கூறுவதாயின் அப்போது ஆளுநராக இருந்த சேர் ஜோன். அண்டர்[illegible] வாழ்த்துத் தெரிவிக்குமளவு செல்வாக்குப் பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் நில அபிவிருத்தி மிக அவசியம்

அம்பாறை மாவட்டம் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் மூலம் பெரும் பலனைப் பெற்றுள்ளதுபோல் மகாவலித் திட்டம் C ஒழுங்கு மூலமும் இம் மாவட்டத்தின் விந்தனைப் பகுதி அதிக பலனைப் பெற்றுள்ளது. C ஒழுங்கில் (அம்பாறை, பதுளை, மொனராகலை உட்பட) 28,120 ஹெக்டேயர் நிலப்பரப்பு விவசாயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு பெரும் எண்ணிக்கையான குடியானவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். C ஒழுங்கை உள்ளடக்கிய தெகியத் கண்டிய பிரிவு 2001 இல் 62,612 பேரைக் கொண்டிருந்தது. முன்பு ஒருசில சிறிய புராதன கிராமங்களைத் தவிர குடித்தொகை குறைந்த வனப் பிரதேசமாக இருந்த இப் பகுதியில் குடியேற்றத்தால் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையினர் காணப்படுகின்றனர். இவர்கள் பிற மாவட்டங்களிலிருந்து இங்கு குடியேற்றப்பட்டனர். இதனால் அம்பாறை மாவட்டத்தின் இன்றைய குடிசனத்தொகையில் சிங்கள மக்களின் விகிதாசாரம் 40 வீதத்திற்கு மேற்பட்டு இருக்கிறது. 1981 இல் இம் மாவட்டத்தின் மொத்த குடிசனத் தொகையில் சிங்கள மக்கள் 37.8 வீதமாகவும் இருந்தனர். இதற்கு மாறாகத் தமிழர்களின் விதாசாரம் படிப்படியாகக் குறைவடைந்து 15 வீதம் வரையிலேயே காணப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் மகாவலித் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட

நிக்கவேவா போன்ற குடியிருப்புக்கள் வளர்ச்சி பெற்று வருவதாகத் தெரிகிறது. மேலும் இப் பிரதேசம் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குள் இருந்தும் இம் மாவட்ட அரசாங்க அதிபர்களினால் நிர்வகிக்கப்படுவதில்லை. அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபராலேயே நிர்வகிக்கப் படுவதாகத் தெரிகிறது. தேர்தல் அடிப்படையில் இது வன்னி தேர்தல் மாவட்டப் பகுதியாக இருப்பதால் தேர்தல் விடயங்கள் மாத்திரம் வவுனியாவால் நிர்வகிக்கப்படுகிறது.

வெலி ஓயாப் பகுதியில் நில அபிவிருத்தி

இல் காட்டப் பட்டுள்ளன. அட்ட வணை XIV இல் வடமாகாணத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் மாதுறு ஓயாத் திட்டத்தின் கீழ் B ஒழுங்கின் வலது கால்வாயின் கீழ் 25000 ஹெக்டர் நிலப் பரப்பும், திரு கோணமலை மாவட்டத்தின் A ஒழுங்கின் கீழ் 36,200 ஹெக்டர் நிலப்பரப்பும், DI ஒழுங்கின் கீழ் கந்தளாய், வெந்திரன் குளத் திட்டங்களும் முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்களின் கீழ்வரும் L ஒழுங்கில்

தம், இன முரண்பாடு, பாதுகாப்பு இன்மை, வாழ்வாதார இழப்புகளால் புதிய நிலப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. குறிப்பாகத் தனியார் உறுதிக்காணிகள் சம்மந்தமானவை இவை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*முன்னாள் துணைவேந்தர்*

பின்வரும் காரணிகளால் ஏற்பட்டுள்ளன.

(I) உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டதாலும் பாதுகாப்புப்பகுதிகள் பெரிதாக்கப்பட்டதாலும்.

(II) எல்லைப்பகதிகள், வளங்குறைந்த பகுதிகளில் வாழ்வாதார இழப்பு, பாதுகாப்பின்மை.

(III) பாதுகாப்பு இன்மையால் பல்வேறு சமூகத்தவரின் இடப்பெயர்வால்.

(IV) வட பகுதி முஸ்லிம்களின் இடப் பெயர்வு.

வட மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் காணப்படும் நிலப்பிரச்சிகைகள் சில பின்வருமாறு:

(அ) 1984 ஆம் ஆண்டிலிருந்து தென்னமரவாடி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றார்கள். இருபத்திநான்கு

## அரச நிலங்களின் உரிமை, பயன்பாடு மாகாண நிர்வாகத்திடம் வரவேண்டும்

நடைபெறுகின்ற வேளையில் 1984 இல் தென்னமரவாடியிலிருந்து நாயாறு வரையிலுள்ள கரையோரத் தமிழ்க் கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் இன்னும் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை. கடந்த 24 வருடங்களாக தென்னை மர வாடி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி மற்றும் பல சிறிய குடியிருப்புக்களைச் சேர்ந்த தமிழ்மக்கள் இன்

39,000 ஹெக்டர் நிலப்பரப்பும், பறங்கியாற்று மேற்பகுதியின் கீழ் வரும் 22,600 ஹெக்டர் நிலப்பரப்பும், கனகராயன் மேற்குப் பகுதியின் கீழ் வரும் K ஒழுங்கில் 8100 ஹெக் டர் நிலப் பரப்பும் அபிவிருத்தி செய்ய அடையாளம் காணப்பட்டுள்ளன. மகாவலி I ஒழுங்கின் கீழ் புதிதாக 35,000 ஹெக்டர் நிலப்பரப்பு அபிவிருத்தி செய்ய வாய்ப்புள்ளது. இதில் குறிப்பிடத்தக்க பரப்பளவு வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்குள் வருகின்றது. இதனைத் தவிர சிறிய ஆற்று வடிநிலங்கள் பல நில அபிவிருத்திக்குப் பொருத்தமாகவுள்ளன.

மேலும் தரைக்கீழ் நீர்வளத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக வடபகுதியில் நிலக்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு வாய்ப்புக்கள் நிறையவுள்ளன. உதாரணமாக முழங்காவில், வெள்ளாங்குளம் தரைக் கீழ் நீர்வளம் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை. இதுவரை காலமும் ஏற்பட்ட நிலக் குடியேற்ற நடவடிக்கையில் இப்பகுதி போதியளவு இடத்தைப் பெறவில்லை. குறிப்பாக 1970களின் பின்னர் நிலக் குடியேற்றங்களின் மூலம் அம்பாறைக் கரையோரப் பிரதேசம் திருகோணமலை நகரப் பகுதி ஆகிய பரப்புக்களில் நெருக்கமாக வாழும் மக்களின் வாழ்க்கையை மேம் படுத்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடித்தொகையும், நிலக்குடியேற்றங்களும் பாகம் 5

வருடங்கள் கழிந்தும் இன்றும் தங்கள் கிராமங்களுக்குத் திரும்ப முடியாது இருக்கிறார்கள்.

(ஆ) மேற்குறிப்பிட்ட கிராமங்களை அண்டிய பகுதிகளை மகாவலி "L" ஒழுங்கு என வரையறுத்து, இப்பகுதிகளில் புதிய சிங்களக்குடியேற்றம் செய்யப்பட்டது.

1980 களுக்கு முன்னர் இப்பகுதியில் மிகவும் குறைவான மக்களே வாழ்ந்தனர். இந்த இரு சிங்கள குடியிருப்புகள் இருக்கவில்லை - இப்பகுதியில் டொலர்பண்ணை, கென்பண்ணை, வசவிளான் பண்ணை

| | |
|---|---|
| J | Vavanikulam Area (Mulaitivu District) |
| K | Kanagarayan Area (Mulaitivu and Vavuniya District ) |
| L | Tannimuripu area(Mullaitivu District) |
| M | Yan Oya Area (Anuradhapura & Trincomalee District) |

அட்டவணை XIV

வடமாகாணத்தின் பெரிய நீர்ப்பாசனக்குளங்கள்

| மாவட்டம் | குளத்தின் பெயர் | (கொள்வனவு ஏக்கர் அடியில்) | நீர்ப்பாய்ச்சக்கூடியது(கெக்டர்) |
|---|---|---|---|
| கிளிநொச்சி | இரணமடு | 106,500 | 8897 |
| | அக்கராயன்குளம் | 21,200 | 1235 |
| | வன்னேரியன் குளம் | 1,713 | 136 |
| | கல்மடுகுளம் | 9,152 | 182 |
| | பெரியகுளம் | 850 | 1214 |
| | புதுமுறிப்புக்குளம் | 908 | 398 |
| | கனகாம்பிகைக்குளம் | 1,221 | 105 |
| | பிரமாத்தலாறுக்களம் | 3,128 | 243 |
| | கரியாலை நாகபடுவான்குளம் | 12,037 | 608 |
| முல்லைத்தீவு | முத்தையன் கட்டுக்குளம் | 41,00 | 2518 |
| | வவுனிக்குளம் | 35,000 | 2768 |
| | அம்பலம் பெருமாள்குளம் | 3,061 | 252 |
| | தன்னிமுறிப்புக்குளம் | 15,000 | 955 |
| | தென்னியன்குளம் | 4,375 | 344 |
| | உடையார்கட்டுக்குளம் | 6,505 | 486 |
| | விசுவமடுகுளம் | 3,020 | 327 |
| | கணுக்கேணி | 2,100 | 102 |
| | மடவலசிங்கன் குளம் | 4,080 | 260 |
| | கோட்டைகட்டினகுளம் | 1,882 | 164 |
| | முருகண்டிக்குளம் | 1,780 | 144 |
| | மருதன்குளம் | 1,700 | 182 |
| | கொல்லிவிளாங்குளம் | 787 | 106 |
| | தரால்கண்டலகுளம் | 1,250 | 102 |
| | மல்லாவிக்குளம் | 740 | 96 |
| | பளங்காமன்குளம் | 725 | 117 |
| | ஐயன் குளம் | 3,950 | 305 |

அட்டவணை XIV இன் தொடர்ச்சியை 14 ஆம் பக்கம் பார்க்க...

## பாதுகாப்புத் தேவைக்காகப் பெறப்பட்ட காணிகளின் உறுதிகளைத் தனியாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை தேவை

தக்கூடிய முறையில் நில அபிவிருத்தி குடியேற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகளில் மக்கள் விரும்பிக் குடியேறமாட்டார்கள். இதனால் வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பொருத்தமான நிலக் குடியேற்றம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மேலும் அரச காணிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் வடக்கு, கிழக்கு நிர்வாகம் நில அபிவிருத்தி நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது இருக்கின்றதுடன் மத்திய அரசின் நிலக்குடியேற்ற நடவடிக்கைகளைத் தெளிவாக அறிய முடியாதுள்ளது. நிலம், நிலவுடைமை, குடி யேற்றம் தொடர்பாகக் காணப்படும் சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட வேண்டும். அரச நிலங் களின் உரிமை, பயன் பாடு போன்றன மாகாண நிர்வாகத்திடம் கொடுக்கப் பட வேண்டும். இதன் மூலமே தமிழ் மக்கள் தங்க ளது நிலத்தை தமது தேவைகளுக்கு ஏற்றமுறையில் பயன்படுத்த முடியும். வடக்கு, கிழக்கு மாகாணங் களில் பாதுகாப்புச் செயற் பாட்டிற்காக எடுக்கப்பட்டி ருக்கும் தனியாரின் உறு திக் காணிகள் அவரவர்களிடம் காலதாமதமின்றி கொடுக்கப்படவேண்டும். இச்செயற்பாடு மீளக்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதுடன் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை வளப்படுத்த வழி பிறக்கும்.

### யுத்தம் இன வன்செயல்களால் புதிய நிலப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன

முன்னர் அரச காணி கள், புதிய நில அபிவி ருத்தி திட்டங்களில் தமிழர் தரப்பினருக்குரிய பங்கு கிடைக்கவில்லை எனக் கவலைப்பட்டனர். தற்பொழுது யுத்

போன்ற பண்ணைகளே இருந்தன.

1984 இற்குப் பின்னர் அரசாங்கம் இங்கு சிங்களக் குடியிருப்புகளை ஏற்படுத்தியது. இக்குடியிருப்புகள் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் சிங்களப் பகுதியில் உருவாக்கி பாதுகாப்பை பலப்படுத்தி வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே போக்குவரத்தைக் கட்டுப்படுத்த முனைந்தனர். இச் செயற்பாட்டின் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலம் பறிமுதலாகியது. வடமாகணத்தில் முதன்முறையாகச் சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டது. இதற்கு முதல் வடமாகாணத்தில் சிங்கள குடியேற்றம் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*(முற்றும்)*

அட்டவணை XIII

The Mahaveli Ganga Development, Project

Net irrigation area per system (in bectares)

| System | Completed or Consideration | New | Existing | Total | Grand Total |
|---|---|---|---|---|---|
| A | 0 | 30,500 | 5,700+ | 36,200 | 36,200 |
| B | 0 | 47,800 | 2,700+ | 50,500 | 50,500 |
| C | 0 | 21,400 | 0 | 21,400 | 21,400 |
| D1 | 25,500 | 11,300 | 0 | 11,300 | 36.800 |
| D2 | 7,700 | 3,700 | 0 | 3,700 | 11,400 |
| E | 6,100 | 0 | 0 | 0 | 6,100 |
| F | 0 | 3,300 | 200 | 3,500 | 3,500 |
| G | 1,900 | 2,600 | 0 | 2,600 | 4,500 |
| H | 41,500 | 0 | 0 | 0 | 41,500 |
| I | 3,700 | 35,500 | 17,400 | 52,900 | 56,600 |
| J | 0 | 19,900 | 2.900 | 22,800 | 22,800 |
| K | 0 | 7,900 | 200 | 8,100 | 8.100 |
| L | 0 | 30,900 | 8,100+ | 39,000 | 39,000 |
| M | 3,200 | 10,100 | 1,200 | 11,300 | 14,500 |
| | 89,600 | 224,900 | 38,400 | 263,300 | |

Source : NEDCO, Mahaveli ganga Development Programme Implementation Strategy Study, Vol, I (main report)

| System | Area |
|---|---|
| A | Teincomalee District |
| B | Left Bank Polannaruwa District – Right Bank Batticaloa district |
| C | Badulla & Amparai District |
| D1 | Minneriya, Kandulla, Giritalle in Polanaruwa Disrict and Kantalai and Vendarasam in Trincomalee |
| D2 | Parakrama Samudra in Polanaruwa District |
| E | Heen Ganga Reservoir and Hasalaka Oya area (Matale District) |
| F | Elanara (Polanaruwa Matale District) |
| G | Elanara Minneri Goda Ela area (Matale Polanaruva District) |
| H | Kala Oya Basin (Anuradhapura, Kurunakala, District) |
| I | Malwata Oya Basin (Anuradhapura, Mannar) |

குடியேற்றத் திட்டங்களினால் தமிழர்கள் யாதொரு பலனையும் பெறவில்லை. மட்டக்களப்பு மாவட்டம் அண்மித்து இருந்தும் இன்றும் மகாவலியால் பலன் ஏதும் கிட்டவில்லை.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 1982 இல் இருந்து சிங்களக் குடியேற்றம் என்பது முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது. 1982இல் கொக்கொச்சான்குளம் விருத்தியாக்கப்பட்டு சிங்கள மக்களைக் குடியேற்ற முற்பட்டதிலிருந்து இப்பிரச்சினை வளரலாயிற்று. கிழக்கு மாகாணத்தில் 1940 களிலிருந்து ஏற்பட்ட குடியேற்றப் பிரச்சினை 1980 களில் வடபகுதிக்கும் பரவியுள்ளது. 1984 இற்குப் பின்னர் மகாவலித் திட்டத்தின் கீழ் உள்ள பிரதேசமான மணலாற்றை வெலி ஓயா பிரதேசமென வரையறை செய்து அங்கு குடியேற்ற நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. 2002 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு இப்பகுதியிலிருந்து முன்னர் இடம் பெயர்ந்த சிங்களக் குடியேற்றவாசிகள் மீளக் குடியேறினர் எனத் தெரிகிறது. மணலாறு வெலி ஓயாவில் கலியான்புர, ஜனகபுர,

றும் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மணலாறு, கரிக்கட்டு மூலை தெற்குப் பகு திகளில் ஏற்பட்டுவரும் குடியேற்றங்கள் தமிழ் மக்களின் மீளக் குடியேற்றப் பிரச்சினை அவர்களின் நிலங்கள் போன்றன பெரிய பிரச்சினையாக உருவெடுத்தும் தீர்வுகாணப்படாத நிலையில் உள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நில அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான நிலப்பரப்பு பெருமளவில் காணப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் குடிசன அடர்த்தி குறைந்தனவும் கூடிய காட்டுப்பரப்புகளைக் கொண்டனவுமாக உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத் தின் மொத்த நிலப்பரப்பில் 75 வீதம் காடாகவுள்ளது. மன்னார், வவுனியா மாவட்டங்களின் காட்டு நிலப்பரப்பு 45 வீதத்திற்கு மேலுள்ளது. இதனால் நில அபிவிருத்திக்கு நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன. வடக்கு, கிழக்கு மகாணத்துக்குள் மகாவலி அபிவிருத்தி [illegible] அபிவிருத்தி [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மையத்து

**அபுதாலிப் அப்துல் லத்தீப்**

அவளுக்கென்று ஒரு பெயரும் தனித்துவமும் இருக்கத்தான் செய்தது. அது மாத்திரம் போதுமா? சமூகத்தின் அங்கீகார ஊர்ஜிதமும் வேண்டுமே! அசையாத ஈமான் பெற்ற விசுவாசிகளான அக்கரைப் பகுதி முஸ்லிம் பெருமக்கள் அவள்மீது அவளுடைய இனத்தின் பொதுப் பெயரைக் குத்தி, வெறுமனே நிர்வாணமாக 'சிங்களத்தி' என்று அழைப்பதுதான் சம்பிரதாயம். இதில் மறைமுகமான இனத் திமிரும், மத ஆணவமும் பத்தினி தர்மாவேசமும் கைகோர்த்துத் தலைவிரி கோலமாய் காட்சியளித்தன.

இதற்கெல்லாம் காரணம் அவள் ஒரு வைப்பாட்டியாம். கழுத்தில் 'கருசமணி' ஏற்றிச் சம்பிரதாய பத்தினி ஜாபிதாவில் இடம் ரிஸர்வ் செய்து கொண்டதாகக் கற்பித்துக்கொள்ளும் அந்தப் பகுதிப் பெண்மணிகளின் கண்ணில், பாத்துமா நாயகியின் ஷபாஅத்து- கடாட்சத்துக்கு அருகதையற்றதீண்டாதாள் அவள்.

அவள் நாட்டாமை மஜீத் நானாவின் வைப்பாட்டி; அது வாஸ்தவம், அந்த ஜீவனைத் தவிர வேறு எவனையும் அகத்தாலும் புறத்தாலும் ஸ்பரிக்காத வைப்பாட்டி அவள். அந்தச் சுமை தாங்கி மஜீத் நானா அவளை மதமாற்றம் செய்து, நிக்காஹ் நடத்தி, சமுதாயப் பிரவேசம் செய்யவில்லை. அந்தப் பாதுகாப்பைத் தேடிக் கொடுக்கும்படி அவரை அவள் பல தடவைகள் தூண்டியதுண்டு. மஜீத் நானா அதற்குச் செவிசாய்த்திருந்தால்தானே! அவள் சொன்னதை அவர் கேட்டிருந்தால்......

''கத்தீபு லெப்பை காதுக்குள்ள ஊதி உடுடதா சொல்லிட்டு ஒன்ட கழுத்துல கர்ச மணியப் பெலமாப் போட்டுட்டா எல்லாம் சரியாக்கும். இல்லாட்டி அந்தச் சாட்டில அட்டியல் கிட்டியல் செஞ்சி கழுத்துல மாட்டிக் கொள்ள ஆசையாக்கும்! சும்மா போ. நான் ஒனக்கு மாறுபாடு செஞ்சிட மாட்டன்.......'' என்று அவர் தட்டிக் கழித்து, சமுதாய வரம்புக்கு அப்பால் நின்று கொண்டதையெல்லாம் நினைக்க, இரண்டு நாள்களாகக் கண்ணீரும் கம்பலையுமாகக் கிடந்து குரலையே இழந்து அவள், மின்சார சாட்டையால் தாக்குண்டவள்போல வேதனைப்பட்டாள். இந்த இரண்டு நாள்களும் எத்தனையோ படிப்பினைகளையும் அனுபவங்களையும் பிழிந்து அளித்திருந்தன. அதிர்ச்சிகள் தான் எத்தனை!

மஜீத் நானாவுடைய றூஹ் பிரிந்த சமயத்தில் கணவனை இழந்து அநாதரவாய் விட்ட ஒரு பெண்பிறவியின் இயற்கையான வருத்தமும் துயரமும் அவளைச் சித்திரவதை செய்தன. பிரபஞ்சமே இருண்டு அஸ்தமித்து விட்ட விரக்தி. உறவினர் நண்பர்களின் அனுதாப வார்த்தைகளும் மூன்றாம் கத்த சாப்பாடும் இறப்புத் தோற்றுவிக்கும் குலைவைச் சமப்படுத்தி நிலைமையை ஒழுங்குபடுத்தியிருக்கும். ஆனால் இரண்டு நாள்களாகியும் மையத்தை அடக்கம் செய்ய விடாது கத்தீபு மீதும் கபுறுஸ்தான் மீதும் தடை உத்தரவு செய்த ஊர்ப் பள்ளிவாசல் மத்திஸம்-தர்மகர்த்தாக்கள் சபையின் நடவடிக்கையும் ஊர் மக்களின் சமயாவேசமும் எல்லாமாக அந்த ஆரம்ப வேதனையை எங்கோ துரத்தித் தேசப் பிரதிஷ்டம் செய்துவிட்டது. மடிந்துவிட்ட புருஷனின் எலும்புக்கூடு நிம்மதியாய் படுத்துக் கிடக்க ஒரு எட்டு சாண் கபுறு நிலப் பிரச்சினை தான் வேதனையாக விஸ்வரூபமெடுத்து நின்றது அவள் உள்ளத்தில்.

வெளியே, அந்த ஓலைக் குடிசையின் முற்றத்தில்ஏழெட்டுக்குரல்கள். ஏககாலத்தில்பேசும்குரல்களின் அரட்டை ஓய்ந்து அரவமற்ற நிலைமை தன்னில் தானாய் தன்னையே மறந்து தனித்துக் கிடந்த அவள் மனதில் ''இன்னும்எத்தனை நாளைக்குத்தான்'' என்ற எண்ணம், அந்தத் திசையில் எண்ணச் சக்கரம் ஓடுவதை அவள் விரும்பவில்லை. பயங்கரமாக அந்தத் திசையைத்தான் தாவிப் பாய்ந்தது மனக் குதிரை. இன்னும் சில விநாடிகளில் மனம் வேறு திசையில் தாவியது.

''நான் சொன்னதை அப்போ கேட்டிரிந்தாராக்கா நிக்கா....'' என்று தடம் பிறழாத பம்பரம் மாதிரி உதிரியான சிந்தனைகள், ஹேஷ்யங்கள் சுற்றிவலம் வந்து மையத்துக்குப் பக்கத்தில் கூனிக் குறுகிக்கிடக்கும் அவளுடைய காதுகளில் கோஷித்தன. கண்கள் வெள்ளைப் போர்வையால் மூடிக் கிடந்த மையத்தின் மீது ஊர்ந்தன.

காற்றோட்டமற்ற அந்த ஓலைக் குடிசையைக் கவ்விக் கொண்டிருந்த துர்க்கந்தத்தைப் பெயர்த்தெறிய ஊதுபத்தி, சாம்பிராணி, அத்தர் முதலிய வாசனைத் திரவியங்கள் கூட்டு முன்னணி நிறுவி நடத்திய போட்டியும் நிசப்தமும் பிரேதத்தின் துர்நாற்றத்துக்கு ஓர் அமானுஷ்ய தன்மையைப் பாய்ச்சின. காதற்ற ஊசியும் உடன் செல்லாத கடை வழியாத்திரைக்கு மஜீத் நானாவுடைய மையத்து, கபன் உடுத்தி சந்தக்கு ஏறி தயாராவதற்கு முன்னரே மையத்தைப் 'பார்க்க' வந்தவர்கள் துர்நாற்றத்தால் சாடப்பட்டு விலகி லேஞ்சிகளால் மூக்கை மூடிய வண்ணம் வெளியே சென்று வம்பளந்து கொண்டிருந்தார்கள்.

சாம்பிராணிச் சட்டியிலிருந்து எழும்பிய புகை மூட்டம், குத்து விளக்கு வீசிய வெளுத்து மங்கிய ஒளி, அழுதழுது சோர்வடைந்து விக்கலாகவும் முனகலாகவும் குமைந்துவிட்ட குரல் அத்தனையும் சோகத்தைச் சிறைப் பிடித்து சூனியமான அத்துவானப் பகைப் புலனில் நிறுத்திச் சட்டமிட்டுக் கொண்டிருந்தன. மரித்துவிட்ட அந்த உழைப்பாளி ஜீவனின் சடலத்தின் அணுச் சேர்க்கைகள் தீவிரமாகச் சிதைவுப் பாய்ச்சல் போட்டுக்கொண்டிருந்தன. மையத்துப் போர்வை, தலைக் கோடியில் அங்குமிங்குமாகக் கசிய ஆரம்பித்தது. அவள் போர்வையைப் பவ்வியமாக முகத் தண்டையில் நீக்கி, அத்தர் தோய்த்த பஞ்சு உருண்டையால் மையத்தின் நெற்றியைத் தடவினாள். இதயக் குருதியில் பஞ்சைத் தோய்த்திருந்தால்கூட அவளுடைய மயிர்க் கால்கள் அப்படியாகப் புல்லரித்து நிமிர்ந்திருக்க முடியாது.

தாங்கமுடியாத வேதனைப் பாரம் அவளுடைய சுவாச இயக்கத்தை அமுத்தித் தடை செய்தது. கண்களில் வெடித்த கண்ணீர்த் துளிகள், பூகோள விஸ்தாரணப் படத்தில் ரேகை விரித்தோடும் கோடுகளைப் போல, வாய்க் கால் விழுந்து கிடந்த கன்னத்தின் வழியாக வடிந்து மையத்தின் நெற்றியில் விழுந்து உருண்டன. போர்வைக்குள்ளும் சிக்கித் தலையிட்டுக் கிடந்த துர்வாசம் குப்பென்று அவளுடைய நாசித் துவாரங்களுக்குள் ஊடுருவியது. தலை கிறுகிறுத்தது. ஆனால் மரத்துவிட்ட அவளுடைய நுகர்ச்சிப் புலனை துர்வாசம் அவ்வளவு உறுத்தியாக இல்லை. இன்னுமொரு முறை அத்தர் பஞ்சு உருண்டையால் மையத்தின் நெற்றியைத் தடவினாள். மையத்தின் நாசித் துவாரங்களையும், வாயையும் காதையும் அடைத்துச் சொருகியிருந்த பஞ்சு ஊறிக் கசிந்து ஏதோ வழுவழுப்பான நீரை கக்கிக் கொண்டிருந்தது.

பருத்து நீலம் பாரித்துவிட்ட முகத்தில் ஜீவ களை போய் பிரேதக்களை மீது பேய்க்களை படர்ந்து கொண்டிருந்தது. வீங்கிப் பிதுங்கி, பிய்ந்து பாய்ந்திடும் நிலையிலிருந்த கண்கள் பிரேதத்தின் தோற்றத்தை விகாரமாக்கி என்றோ கண்ட கனவில் உலாவிய பேயின் குரூர தரிசனமாய்க் காட்டியது.

அன்பும் கனிவும் ததும்பிய மஜீதின் முகம் அங்கே இல்லை. அதை அவள் எதிர்பார்க்கவுமில்லை. போர்வையால் முகத்தை மறுபடியும் மூடினாள்.

''அவருக்குக் கரச்சல் கொடுக்க வாணாமாம். மத்திஸம் மார்கிட்ட துண்டு கொண்டு வந்தாத்தான் வருவாராம்'' என்று வெளியே சொல்வது கேட்டது.

''நான் சொன்னதையெல்லாம் சொன்னியா?'' மஜீத் நானாவின் காக்காவுடைய குரல்.

''ஓம் ஊரு ஜமாத்துக்கு அவரு வெலகி நலவு பொல்லாப்புக்கு இல்லாம இருந்தது குத்தம். நிக்கா செய்யாம இருந்தது ஹறாம். அந்தக் குத்தங்களுக்கு ரெண்டு நாளா, மவுத் தான பொறகு துன்யாவுலேயே அதாபு பட்டுட்டாரு, மையத்து ஆண்டவன்ட அமல். மையத்த அடக்கிப் போட்டு இனியுள்ளத ஆண்டவனுக்கு ஒப்படிச்சிடோனும். சுருக்க அடக்காட்டி மையத்து புழு வச்சிடும் என்டெல்லாம் சொல்லத்தான் செஞ்சேன்.''

''அதுக்குப் பொறகுமா வர ஏலாதாம்.''

''மத்திஸம்மார்ட ஓடர் இல்லாம கபன்கூட பொருத்தவர ஏலாதாம்''

அவர் ஆத்திரத்தோடு இடை மறித்துப் பேசினார். ''கபன்பொருத்த முந்தி அவிஞ்சி கொண்டு வர்ர மையத்தப் பொருத்த அவன்கள் படிச்சிக் கொள்ளவரும். கபன் பொருத்த போரான்களாம் கபன்''

''அது என்னா இவன்கள்ட சப ஏறாத பேச்சி! ஊருல மஜீத் மாத்திரம் தானா பெழ செஞ்சவன்? என்ன பெழயதான் செஞ்சானோ! போன நோம்பில இவன்கள் எல்லாரும் தானே கூடி ராவுராவா அபுசாலிட மகன்ட ஹறாங் குட்டிய 'நல்லடக்கம்' செய்தான்கள். அவனப் போல பொண்டாட்டி உசுரோட இரிக்கிக் கொள்ள மச்சிக் காரியோடயா மஜீத் ஹறாத்துல இருந்தான்?'' என்று மஜீத் நானாவுடைய கூட்டாளி நாட்டாண்மை அப்துல் காதர் தன் ஆத்திரத்தைக் கொட்டிவிட்டார்.

''மஜீது கூலி வேலக் காரன் தானே'' என்று மஜீத் நானாவுடைய காக்கா தத்துவ விசாரம் செய்தார். படிப்படியாகப் பேச்சின் பாணியில் ஒரு வேகம் தலைப்பட்டது.

''ஆஹா பேசிராதங்கோ, மத்திஸம்மார்ட சமசெகோட் மாத்துரம் சுண்ணா அடிச்ச மாதிரி துப்பரவா வெள்ள வெளேரண்டு இரிக்கிதாக்கும். அத்துர் ரஹிம் மத்துஸத்துக்கு ஊர்ல எத்தன ஹறாங் குட்டிகள் பெறந்து கெடக்குது என்டது ஆட்டுப் பட்டிக்கிப் போனாத் தெரியும். அவரு றோட்டுல போகக்கொல றோட்டு வழிய பிள்ளைகள் ''வாப்பா! வாப்பா! என்று கூப்பிடுதாம்.'' என்று அவருக்குத் தெரிந்த விவகாரங்களையெல்லாம் அள்ளிக் கொட்டுவதற்கு பக்கத்துவீட்டு ''ஊருபலாய்'' ஸாலிஹ் காக்கா தயாரானார்.

''இவன்கள் ஆயிரம் பேர் என்னா சட்டம் தான் போட்டாலும் மையத்த அங்கதான் அடக்குறது. லெப்பயும் வாணாம், மோதினும் வாணாம். ஒத்துணுமே வாணாம். மஜீது என்னா அவ்வளவு பெரிய மன்னிக்க முடியாத குத்தம் செஞ்சிட்டான்? சிங்களத்திய தான் அவன் எடுத்தான். அவள பொண்ஜாதியா நடத்த இல்லியா? இல்லாட்டி வேசு வொள்ளாட்டியாத் தான் வச்சிரிந்தானா? இல்லாட்டி அவள் தான் பொழையா நடந்துட்டாளா? ஊரு நலவு பொல்லாப்புக்குப் போக இல்ல. நிக்காஹ் செஞ்சி கலியாணம் முடிக்க இல்ல என்ற குத்தம் மவுத்தாகியும் மன்னிக்க முடியாதது. மையத்து அவிஞ்சி புழு வைக்கோணும். இது தானே ஊரு பெரிய மனுசர் வைச்ச நீதி. பாப்போம் ஒரு கை'' என்ற ஆத்திரத்தால் திருகி விடப்பட்டு இல்லாத நபர்களையெல்லாம் நினைத்து கேள்விச்சரங்களைத் தொடுத்து விட்டு, ஆவேசப்பட்டவராய் மஜீத் நானாவுடைய காக்கா நடந்தார்.

இவர்களுடைய சம்பாஷணையை அவதானித்துக் கொண்டு பேசா மடந்தையாக இருந்த அப்துர் ரஸ்ஸாக் ஆலிம்ஸா, மஜீத் நானாவுடைய காக்காவை வழிமறித்து தடுத்துக் கொண்டே 'சபூர் வாப்பா' என்று சமாதானப் படுத்தினர்.

''சும்மா அவசரப் பட்டுட்டா ஒன்றும் நடந்துடாது. பொறுமையா இரிக்கோணும் புள்ளைகள். என்னதோ ஆண்டவன்ட வல்வினைப் படிதான் எல்லாம் நடக்கும். அவசரப்படாதங்கோ. மத்திஸம்மார் தான் என்னா செய்ய! நேத்து ராவு அபூபக்கர் மத்திஸத்த புடிச்சி பீடாக்டர் மவன் பழீது புச்சர் அடிச்சிப் போடப் போனானாம் மையத்த அடக்க விடாம தடை செய்து கொண்டிருக்கிறது பாவம் எண்டு சொன்ன குத்தத்துக்கு. அடக்க வருரவன்கள் கிட்ட உசுரு பலி எடுக்கப் போறானாம் அவன்... ''

''அந்தக் குடிகார மட்டயா அப்படி பேசிச்சுது? ரவிண்ட் றோட்டுள தமுழச்சிய வைச்சி இரிக்கிறானே! அத யாருக்கிட்ட சொல்றது?'' என்று காதர் ஒரு இடைச் செருகல் செய்தார்.

''அவன் இவன்ட பேச்சுக்கள் எங்களுக்கு வாணாம் புள்ளகள். மஜீது நல்லவன். அது ஹக்கான விஷயம். ஆனா அவன் ஊர் ஜமாத்துக்குக் கட்டுப்படாமதன்ட ஹறாலுல நடந்திட்டான். சிங்களப்பிள்ளய எடுத்து பெழயில்லாம குடும்பம் நடத்தத்தான் செய்தான். ஏனோ நிக்காஹ் செய்துட தவறிட்டான். அதெல்லாம் நடந்துட்ட விஷயம். அதப் பத்தி பேசி இப்ப என்னா பயன்? அவன்... இன்னக்கி மையத்தை எப்படியாவது அடக்கிப் போடுற விஷயத்துல கவனத்த செலுத்த வோணும்'' என்று ஏதோ வெறிபிடித்த ஒரு கூட்டத்துக்கு மஜீத் நானாவுடைய கட்சியை எடுத்துக் கூறி நியாயம் கோரும் ரீதியில் மனதில் உள்ளதை ரஸ்ஸாக் ஆலிம்ஸா கொட்டினார்.

சூழ்நிலையை மறந்து விட்டவர் சடுதியாக சூழ்நிலையைப் பற்றிய உணர்வு பெற்று விட்டது போன்ற உணர்ச்சியில், 'நீங்கோ எல்லாரும் இங்கேயே இரிங்கோ. நான் அஸருக்கு மையத்தை எடுத்து போறதுக்கான எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு லேஸ்தியா வாறேன்'' என்று கூறிய வண்ணம் ரஸ்ஸாக் ஆலிம்ஸா அவ்விடத்திலிருந்து பெயர்ந்தார்.

அவள் இதையெல்லாம் அட்சரம் பிசகாது காதில் போட்டுக் கொண்டிருந்தாள். தன் புருஷன் இறந்தும் சமூகப் பிரதிஷ்டத்துக்கு இலக்காகி இருப்பதற்குத் தான் தான் ஜவாப்தாரி என்ற எண்ணம் அவளை முற்றுகையிட்டது.

அஸருக்கு மையத்தை நல்லடக்கம் செய்வது பற்றி அவளுக்கு நம்பிக்கை இல்லை. இது மாதிரி எத்தனை அஸர் வேளைகள் பிரசவித்தும் இறந்தும் விட்டன. ஆனால் தன் கணவன் இறந்து இரண்டு நாள்கள் ஓடி ஓய்ந்து உறைவிடம் சென்று விட்டனவென்றாலும், அவருக்கு இறுதி உறைவிடமின்றித் தன் கண் முன் நாறி அழுகிக் கொண்டிருக்கிறாரே என்று நினைத்தவளாய் அழுதாள். இப்படி இன்னும் சில அஸர் வேளைகள் கழிந்துவிட்டால், அவர் புழுக்களின் போஜனமாக, மேய் நிலமாக மாறிவிடுவாரே என்ற எண்ணம் தோன்ற யதார்த்த சூழ்நிலையைப் பற்றிய ஸ்மரணை உதித்தது. துர்க்கந்தத்தின் ஆதி பத்தியம் விஸ்தாரணமும் தீவிரமும் பெற்றுவிட்ட உணர்ச்சி.

ரஸ்ஸாக் ஆலிம்ஸாவின் பேச்சு அவளுக்கு ஒரு புதிய தெம்பையும் விசுவாசத்தையும் கொடுக்காமலும் இல்லை. மரத்துவிட்ட நரம்பு நாளங்களில் ஒரு புதிய ஜீவ ஓட்டம்.

காவற் காரன் கறோலிஸின் மகளாக இருந்த தன்னை வாலிபத்தின் முறுக்கேறிய பருவத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க...)

ஏ.ஏ.லத்தீப் என்று தமிழ் இலக்கிய உலகில் அறியப்பட்டவர் அபுதாலிப் அப்துல் லத்தீப் ஆவார். மாத்தளையைச் சேர்ந்தவர். கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் பயின்றவர். அக் கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமை ஆற்றியவர். அதன் பின்னர் மிக நீண்ட காலமாக கொழும்பில் உள்ள சோவியத் தூதரகத்தில் தகவல் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். ஐம்பதுகளின் இறுதியில் எழுதத் தொடங்கியவர். பல விடயங்களில் நிறையவே எழுதியவர். இன்ஸான் என்ற வார இதழ் ஒன்றையும் ஆசிரியராக இருந்து நடத்திவந்தார்.

முஸ்லிம் மக்களின் பேச்சுத் தமிழ் இக்கதையில் பல இடங்களில் கையாளப் பட்டுள்ளது.

முற்போக்காளரான இவர் அந்தத் துறைசார்ந்து எழுதுவதற்குப் பல இளைஞர்களை ஊக்குவித்து வளர்த்து விட்டவர். பழகுவதற்கு மிகவும் இனியவர்; எளிமையானவர். நகைச் சுவையோடு தான் சொல்ல வந்தவற்றை நாசூக்காகப் பதித்துவிடுவார்.

சமாதானம், சகவாழ்வு என்பனவற்றுக்காக அயராது உழைத்ததற்காகச் சோவியத் அரசாங்கத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

---

# நக்குண்டார் 'நா' இழப்பாரா, 'நா' காப்பாரா!?

## இலக்கியப் பொழில்

நக்குதல், சூப்புதல், பருகுதல், தின்னுதல், உண்ணுதல் என உணவு உட்கொள்ளும் முறைகள் பல. *'அறுகாற் சிறுபறவை பூ நக்கி'* என்பதில் அறுகாற் சிறுபறவை பூநக்கி என்பன வண்டைக் குறிக்குஞ் சொற்களாகும். வண்டு தேனை நக்குகின்றது. தேன் தொட்டார் கை நக்கார். இவற்றில் வரும் நக்குதல் என்பது தேனைச் சுவைப்பதற்குரிய வினை. சூப்புதல் என்பது றம்புட்டாம்பழம் போன்ற பொருள்களைச் சுவைப்பதற்குரிய வினை. பருகுதல் என்பது தேநீர் போன்ற நீராகாரங்களைச் சுவைப்பதற்குரிய வினை. தின்னுதல் என்பது கறி, மாங்காய்போன்ற பொருள்களைச் சுவைப்பதற்குரிய வினை. உண்ணுதல் என்பது சோறு போன்ற பொருள்களைச் சுவைப்பதற்குரிய வினை. எனவே, ஒவ்வொரு உணவுப் பண்டங்களையும் சுவைப்பதற்கமைந்த சிறப்பு வினைகளைக் கொண்டு நோக்குகையில்

*'நக்குண்டார் நா விழந்தார்'* என்ற தொடரிலும் 'நக்கல்' கிண்டல் மொழியாகத் தோன்றினாலும் நல்ல செந்தமிழ்ச் சொல்லாகும். இதே போன்றே தின்னல் சூப்புதல் என்பனவும்,

சுவைத்தலுக்குத் துணையாக நிற்கும் 'நா' தனித்து நின்று சுவையை உணர்த்துவதில்லை. பல், உமிழ் நீர் ஆகியவையும் துணை செய்கின்றன. எனினும் சுவைத்தற்குரியதாக 'நா' மட்டுமே பேசப்படுகின்றது. 'நா' ஒரு கருவி. நக்குண்டார் நா விழந்தார் என்பதில் நா இழந்தார் என்றால், நாவுக்குரியவரால் கட்டுப்படுத்த முடியாத அந் நா தன் சுயத்தை இழத்தல் ஆகும். 'நா' தானாக இயங்குவதல்ல- இயக்கப்படுவது.

ஐம்பொறிகளும் பிரதான தொழிலையும் துணைத் தொழிலையும் உடையன. உணவு கொள்வதும் பேசுவதும் வாயின் தொழில். உடலின் சமநிலையைப் பேணுவதும் கேட்பதுவும் செவியின் செயல். இது போலவே ஏனையவையும் செயற்படும்.

'வீட்டுக்கு வீடு நக்கி' என்ற ஊர்வழக்கும் ''கருக்குக யார் மாட்டும் உண்டி'' என்ற நான் மணிக்கடிகையின் செந்தமிழ் வழக்கும் எண்ணுதற்குரியது.

**நடுவு நிலையா அது?**

அறியாத வீட்டுக்கு வீடு சென்றோ அல்லது அன்பர்கள், நண்பர்கள் அழைப்போர் வீடுகளுக்குச் சென்றோ உணவு கொள்வதால் நாவை இழக்க நேர்கின்றது-நடுவுநிலை பிறழ நேர்கின்றது.எவ்வாறெனில், உணவு தந்தவன் வீட்டுக்குத் துன்பஞ்செய்தல் ஆகாது. ''உண்ட வீட்டுக்கு இரண்டகஞ்செய்யவோ நினைக்கவோ கூடாது'' ஆதலால், உணவு கொடுத்தவரைப் பிறர் தூற்றி [illegible] போது உண்டவர் பார்த்துக் கொண்டோ பழியைக் கேட்டுக் கொண்டோ இருப்பாராயின் [illegible] ஆவி விடுவார். எனவே சும்மா மௌனமாக இருத்தல் முடியாது. சாதகமாகவே பேசவேண்டி வரும். பாதகமாகப் பேச மனமும் இடம் தராது. சாதகமாகப் பேசுதல், சார்ந்திருத்தல் நடுவுநிலையா?

*''நெஞ்சின் மிக்கது வாய் சோர்ந்து சொல் நிகழும்''* என்பதால் மனத்தின் வழியது தான் 'நா' ஆக, காக்க வேண்டிய நாவைக் காக்க முடியாது போக-மனத்தின் இயல்பால் அது தன் இயல்பிற் பேசிவிடும்.

''காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுதல் நேரிடும்'' என்பது

*''யாகாவாராயினும் நாகாக்க....''* என்ற குறளின் பொருள்.

புற அழுத்தங்களால் மனதின் செம்மை சிதைவுபடாமல் சிந்தையுஞ் செயலும் சீராக இருப்பின் காக்கப்படவேண்டிய நாவைக் காத்தல் இயலும்.

**காப்பியதாசன்**

உண்மை தவறிப் பக்கஞ்சார்ந்து நடுவுநிலை நீங்கிப் பேசினான் ஆகில் பழிச் சொல்லுக்கு ஆட்படுவான். 'நா' காத்தல் நிகழாது. பழிவந்து சேரும்.

நக்குண்டால் புற சீரற்ற அழுத்தங்கள் வந்து விடும். குற்றங்காக்கும் அறிவுக்கும் இடமில்லை. அந்த அறிவுங்கூட நன்றியுணர்ச்சியால் [illegible] உண்ட வீட்டுக்கு இரண்டகம் (பாதகஞ்) செய்யாது தடுத்துவிடும்.

**வார்த்தைகளை மீளப் பெறமுடியாதே!**

'நா' காத்தல் என்பது சிந்தித்துச் செய்படுதல் ஆகும். மனந்தூய்மையற்று அதன் ஆழத்திற் புகுந்தவை தவறி வார்த்தைகளாக வந்து விட்டால் கூறிய வார்த்தைகள் அவர் தம்மை ஆட்சி செய்யும். பிறர்பழி தூற்ற அச்சொற்கள் போதும். கூறிய வார்த்தைகள் மீளப்பெறமுடியாததாகித் துன்பந்தரும். ஆக, உண்ணக் கூடாத இடத்தில் - உறவு வைக்கக் கூடாத இடத்தில் உண்ணும் பழக்கம் முற்றாகக் கைவிடப்படுதல் வழுவாடியல்லாத நல்லோனுக்கு நலந்தரும்.

'உண்ணாத வீட்டில் உறவில்லை' என்பதால் உறவினர் வீட்டிலும் உற்றார் வீட்டிலும் நல்லோர் வீட்டிலும் உண்ணல் தகும். நட்பாலும் திருமணம் முதலியவற்றாலும் உறவாவது உற்றார் உறவு. இரத்த பந்தம் தருவது உறவினருறவு. இவ்விடங்களிலும்கூட உணவுப் பழக்கம் அளவாக அமைதல் நலந்தரும்.

நல்லோர் உறவுந் தீயோர் உறவுங்கூட உணவுப் பழக்கத்தால் வந்துசேரும். ஆக, விருந்தாகிய உயரிய அறத்தை விலையாக்குவார்க்கு நாம் துணை போகக்கூடாது.

கெட்டவர்களால் விலை பேசப்படும் விருந்தைத் தவிர்த்து நடந்தால் நா இழத்தல் இல்லை. உள்ளன்போடு நல்லோர் செய்யும் உபசாரம், பூர்வீகம் அறிந்து பெறும் உபசாரம் நா காக்க வகை செய்யுமன்றோ!

*''பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்*
*தருக்குக வொட்டாரை கால மறிந்தாங்*
*கருக்குக யார்மாட்டும் உண்டி-சுருக்குக*
*செல்லா விடத்துச் சினம்'' என்றும்*
*''குற்றம் தமரல்லார் கையகத் தூண்''என்றும்*
*நான்மணிக் கடிகை பேசும்* .-எனவே சுவைத்தற்கும் பேசுவதற்கும்- இரு திறத்ததாய்த் துணை செய்யும் 'நா' நலங்காத்தல் நன்றே! *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ முகாம்கள் மக்களுக்கு உரிய பயன்தர வேண்டும்; நோயாளர் குளிக்கப்போய் சேறு பூசும் நிலைக்கு ஆளாகக்கூடாது

தொண்டு நிறுவனங்களினதும், சமூக சேவை அமைப்புகளினதும் செயற்திட்டங்களில் 'மருத்துவ முகாம்' (medical camp) முன்னிலையில் நிற்கிறது. பெரும்பாலும் நகரப் புறங்களில் இருந்து தொலை தூரத்தில் உள்ள கிராமங்கள் அல்லது குடியேற்றத் திட்டங்களில் வசிப்போர் இதனால் பெரும்பயன் அடைகின்றனர். அது மட்டுமன்றி திடீரெனப் பரவும் சில நோய்களில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் மருத்துவ முகாம்கள் பெரிதும் உதவுகின்றன.

ஆனால், மருந்து வழங்குவதால் மட்டும் மருத்துவ முகாம் நன்றாகிவிடாது. நோயாளிகளை இனங்காணுவதும் ஆலோசனை வழங்குவதும் அங்கு முக்கியமாகின்றன. இதனை முதன்மைப்படுத்தி நோக்கும்போது குடாநாட்டின் பல இடங்களிலும் மருத்துவ முகாம்கள் உரிய பயன் தருகின்றனவா என்பது நோக்கற்பாலது.

★ **இடம் தெரிவு செய்தல்**

குறிப்பிட்ட நோய் பெருமளவானோரைத் தாக்கியுள்ள பிரதேசத்தைத் தெரிவு செய்வதில் கூடிய கவனம் செலுத்துவது நல்லது. ஒரு சில நோயாளிகளுக்குப் பெருமளவு ஆளணியும், மருந்துகளும் கொண்டு சென்று பலமணி நேரத்தைச் செலவிடுவது வீண் விரயமே. பிரதேசத்தைத் தெரிவு செய்யும்போது அப்பகுதியில் என்னென்ன வகையான நோய்கள் பரவி உள்ளன?, எத்தனை நோயாளர்கள் அந்தந்த நோய்களால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்? என்பன போன்ற தகவல் திரட்டப்பட்டால் மட்டுமே அதற்குரிய ஆயத்தங்களுடன் செல்லலாம். இருமல் நோயாளிக்குத் தடிமன் மருந்துடன் மட்டும் சென்று மருத்துவ முகாம் நடத்துவதால் உரிய பயன் கிடைக்குமா என்பது சிந்திக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

★ **நோய்க்கான காரணம்**

தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் பரவி உள்ள நோய் எவ்வாறு உண்டானது என்று அறியும்போது அதனை மேலும் பரவாது தடுக்க முடியும். இதுவே மருத்துவ முகாமின் பிரதான வெற்றி. அது பற்றி விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தக் கூடிய விளக்கங்களும் கலந்துரையாடல்கள் மூலமான ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். இதனை ஆற்றக்கூடிய குழு ஒன்று தயாப்படுத்தலுடன் செல்லவேண்டும். அதுபற்றி நோயாளர்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு விவரணப்படங்கள் (நிழற்படம், ஒளிநாடா/ ஒலிநாடா, இறுவட்டு), குறும்நாடகங்கள் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

★ **சுத்தம் பற்றிய விளக்கம்**

பெரும்பாலான பின்தங்கிய கிராமங்களில் ''சுத்தம்''/ ''சுகாதாரம்'' கேள்விக் குறியாகவே காணப்படும். எனவே சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பற்றிய கருத்துக்களையும் விளக்கங்களையும், சுகாதாரச் சீர்கேட்டால் பரவக்கூடிய நோய்கள் பற்றியும் மருத்துவ முகாமில் எடுத்துக் கூறவேண்டும். அதன் மூலமே நோய்கள் தொற்றுவதையும் பரவுவதையும் தவிர்க்க - தடுக்க முடியும்.

★ **நோய்க்குறைபாடு**

சில பிரதேசங்களில் ''போசாக்கின்மை'' காரணமாக பலர் நோய்வாய்ப்பட்டிருக்கக் கூடும். அவர்களுக்கு மருந்து வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாது வேண்டிய சத்துணவுகளை வழங்கலாம். குறைபாட்டு நோய்கள் பற்றியும், அவற்றின் தாக்கம் பற்றியும், எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றிய கருத்துக்களை விளக்கி விழிப்புணர்வை உண்டாக்கலாம்.

**லோ.துஷிகரன்**

★ **நோயாளர் பராமரிப்பு**

நோயாளர்களை எவ்வாறு பராமரிப்பது என்பது பலருக்குத் தெரியாத விடயம். இது பற்றிய விளக்கங்களை நோயாளர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு விளங்கப் படுத்தலாம். முதலுதவிப் பயிற்சிகளையும் அது பற்றிய பயன்களையும் கூறலாம்.

★ **மருந்துகள் பற்றிய விளக்கம்**

மருந்துகள் வழங்கும்போது அவை பற்றிய பூரண விளக்கம் வழங்கப்பட வேண்டும். பாவனை முறை, பக்க விளைவுகள் போன்றவற்றையும் அறிவுறுத்தல் வேண்டும். உதாரணமாக சில இனிப்புச் சுவை உடைய பாணி மருந்துகளைச் சிறுபிள்ளைகள் விரும்பி அருந்துவதால் அளவுக்கு அதிகமாக எடுத்து விடலாம் அல்லவா. சிறுவர்களின் கைகளுக்கு எட்டாதபடி வைப்பதற்கும், வெளிப்பூச்சு மருந்துகளைத் தவறுதலாக உள்ளெடுக்காதவாறும் விளக்க மளிக்கவேண்டும்.

## அவை உரிய திட்டமிடலுடன் நடைபெறுகின்றனவா?

**கூர்நோக்கு**

★ **மருத்துவ முகாம் குழுவின் அங்கத்தவர்கள்**

1) வைத்தியர் - நோய்களின் தன்மைக்கு ஏற்ப அந்தந்தத் துறைசார் மருத்துவர்கள்.

2) மருந்தாளர் - மருந்துகள் பற்றிய விளக்கக் குறிப்புகள் வழங்குதல்.

3) மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் - மருத்துவ ஆய்வு மேற்கொள்ளல்.

4) பொதுச் சுகாதார உத்தியோகத்தர் - சுத்தம்/சுகாதாரம் பற்றிய கருத்துரைகளை வழங்கல்.

5) மருத்துவ மாது

6) கண் சிகிச்சையாளர்

7) பற்சிகிச்சையாளர்

8) இயன் மருத்துவர் மற்றும் வேண்டியவர்கள்.

இவர்களை உள்ளடக்கிய மருத்துவக் குழு நடத்தும் மருத்துவமுகாம்களே நோயாளருக்கு அதிகம் பயனைத்தரும்.

மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவர்கள் கொண்ட குழுவைக் கொண்ட மருத்துவ முகாம் பூரண வெற்றியடையும் என்பது நிச்சயம். செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக '' மருத்துவ முகாம்'' நடத்துவதால் எதிர்பார்க்கப்படும் பயன்களை நோயாளர்கள் பெறுவார்களா என்பது விவாதத்துக்கு உரியதே. ''மருத்துவ முகாம்'' குழுவில் தகுதிவாய்ந்த அங்கத்தவர் எவரேனும் இல்லாமல் இருப்பின் அதன் விளைவுகள் சாதாரண மக்களையே நோயாளியாக்கும். பூரண பயிற்சி பெறாத (போலி) வைத்திய ஆளணியினரை இணைத்துச் செயற்பட்ட மருத்துவ முகாம்களால் மக்கள் வேண்டாத நோய்களை ''வாங்க'' வேண்டியதாகும். சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்களும்




வைத்தியத்துறையினரும் மருத்துவமுகாம் ஏற்பாட்டாளர்களும் இதனைக் கருத் தில் கொள்வார்களா? மக்கள் நோயாளர் களாக மாறாமல் பார்த்துக் கொள்வதில் எல்லோருக்கும் பொறுப்புண்டு. 'குளிக்கப் போய் சேறு பூசும் நிலைமை வேண்டாமே!' ★

# செல்போன் குளியல்



குளிக்கும்போது பாடுபவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஜப்பானிலோ குளிக்கும்போது செல்போன் களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஜப்பானில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 41 சதவீதம்பேர் குளிக்கச்செல்லும்போது கையில் செல்போனையும் எடுத்துச் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் இளம்வயதினர் என்றும், மின்னஞ்சல் அனுப்புவதற்காகக் குளியல் அறைக்குச் செல்போனை அதிக அளவில் எடுத்துச் சென்று பயன்படுத்துகின்றனர் என்றும் ஆய்வுமுடிவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கு அடுத்தபடியாகப் பாட்டுகேட்பதற்காகச் செல்போனைப் பலர் எடுத்துச் செல்கின்றனர். இந்த ஆய்வைத் தொடர்ந்து பல்வேறு நிறுவனங்கள் தங்களது செல்போன்கள் குளியலின் போது பயன்படுத்த ஏற்றது என்று விளம்பரம் செய்யத் தொடங்கி விட்டன.

# தபாலில் வரும் சாப்பாடு



கணனி, செல்போன் என்று தகவல் தொடர்பு சாதனங்கள் அதிகரித்துவிட்டதால் வேலை இல்லாமல் இருக்கும் தபால் துறை ஊழியர்களுக்கு வேலை கொடுக்க தாய்லாந்து நாட்டின் தபால் துறை புதிய சேவை ஒன்றைத் தொடங்கி இருக்கிறது.

தொலைபேசி மூலமாகவோ இணையத்தளம் மூலமாகவோ நாட்டின் எந்த மூலையில் உள்ள ஹோட்டலுக்கும் சாப்பாடு கேட்டுத் தொடர்பு கொண்டால் உடனே அதை வீட்டிற்கே சென்று விநியோகம் செய்யும் புதிய திட்டத்தை அது அறிமுகப்படுத்துகிறது.

மக்கள் தங்களுக்கு விருப்பமான உணவைச் சாப்பிட உதவுவதுடன் தபால் துறைக்கு வருமானம் கிடைக்கவும் இத் திட்டம் வகை செய்கிறது என்கிறார் தாய்லாந்து தபால்துறையின் உயர் அதிகாரி.

# அறிவாளிகள் பிறப்பது குறைகிறதா?



உலகில் அறிவுத்திறன் அதிகரித்து வருகிறது. அதுவும் கடந்த எழுபது ஆண்டுகளாக அதேநேரத்தில் அடுத்த முப்பது முதல் நூறாண்டுகளுக்கு அறிவுத்திறன் 'விவேகம்' கூர்மதி உள்ளவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் தான் இருப்பார்களாம்!

காரணம் என்ன? 1998 ஆம் ஆண்டு நடந்த பிரிட்டிஷ் மனோதத்துவக் கழகத்தின் வருடாந்தக் கூட்டத்தில் வடக்கு அயர்லாந்தின் உல்ஸ்டர் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரிச்சாட் லைன் என்பவர் இந்த விவரங்களைத் தந்துள்ளார் தன்னுடைய ஆய்வில்.

மேம்பாடான அறிவுத்திறன் உள்ளவர்களின் மரபு வழிப் பண்பியல் சார்ந்த ஆக்கக்கூறுகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள குழந்தைகளுக்கே தொடர்ந்து செல்கின்றது. இது வேறு ஒன்றுமில்லை. அதாவது விஞ்ஞானிகள், சாதனையாளர்கள் ஒன்றிரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக் கொள்கிறார்கள்! இதனால் அறிவாளிகளின் மரபணுக்கள் உள்ள வம்சாவழியினர் குறைவாகவே உள்ளனர்.

இந்த இரு குழந்தைகளிலும் ஒரு குழந்தைக்குச் சுற்றுப்புறமும் சத்துணவுக் கட்டுப்பாட்டுடன் வளர்ப்பும் சரியாகக் கிடைக்காவிடில் ஒரு குழந்தைதான் அறிவாளியாக வளரும். 1930 முதல் 1998 வரை பத்து ஆண்டுகளுக்கு மூன்றுபுள்ளிகள் விதம் அறிவுத்திறன் அதிகரித்துள்ளது. இந்த வகையில் தாத்தாவைவிட பேரன்கள் இரண்டு மடங்கோ மூன்று மடங்கோ அதிக அறிவுத் திறனுடன் இன்று திகழ்கிறார்கள்.

இன்றைய குழந்தைகள் 7 1/2 புள்ளிகளுடன் உள்ளனர். இவர்களின் குழந்தைகளோ 15 புள்ளிகள் அறிவுத்திறனுடன் திகழ்வார்கள். அப்படிப் படிப்பில், வருமானத்தில் சுமாராக இருந்தாலும் மகன் அறிவுத்திறனுடன் திகழ நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தால் மரபுவழிப் பண்பியல் சார்ந்த ஆக்கக் கூறுகளைவிட இந்தக் குழந்தைகளும் நல்ல கூரறிவு படைத்தவர்களாக உருவாக வாய்ப்பு உண்டாம். எனவே இப்போது பள்ளிக் கல்லூரிகளில் நன்கு படிக்கும் குழந்தைகள் குறிப்பாக வளரும் நாடுகளிலுள்ள குழந்தைகள் பிற்காலத்தில் மூன்று, நான்கு குழந்தைகள் பெற்றுக்கொண்டால்தான் அறிவாளியாக அடுத்த தலைமுறையும் இருக்கு மாம்! அதேநேரத்தில் வளரும் நாடுகளில் உள்ள குழந்தைகள் அனைவரும் சரியான சத்துணவு, நல்ல சூழ்நிலையில் வளர்தல், படித்தல் போன்றவை இருந்தால்தான் இந்நிலையை எட்ட முடியுமாம்.

# கருக் கலைப்புச் செய்வதால் மனநலத்துக்குப் பாதிப்பு....!



கருக்கலைப்புக் காரணமாக இளம் பெண்களுக்கு மனநல பாதிப்பு ஏற்படுவதற்கு அதிக அளவில் வாய்ப்புள்ளதாக மருத்துவ ஆய்வு ஒன்று எச்சரிக்கின்றது. இங்கிலாந்தில் ஆண்டொன்றுக்கு 2லட்சம் பெண்கள் கருக்கலைப்புச்செய்து கொள்கின்றனர். இதனால், உளவியல் ரீதியான பாதிப்புகள் ஏதும் உண்டாவதற்கு வாய்ப்புகள் உள்ளதா என்பது குறித்து லண்டனிலுள்ள றோயல் உளவியல் கல்லூரி மருத்துவர்கள் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

இதில், கருக்கலைப்பு செய்துகொண்ட பெண்கள் பலருக்கும், பிற்காலத்தில் மனநல பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பது தெரியவந்தது. மேலும், கருக்கலைப்பு செய்ய விரும்பும் பெண்களுக்கு உரிய வழிகாட்டுதல்களைத் தரவேண்டும் என்று மருத்துவர்களுக்கும் அந்த ஆய்வு வலியுறுத்துகின்றது.

இந்த உளவியல் ஆய்வை உறுதி செய்யும் விதமாக அண்மையில் இங்கிலாந்தில் கலைத்துறையைச் சேர்ந்த பெண் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். தனது வயிற்றில் உருவான இரட்டைக் கருவைக் கலைத்துவிட்டதால் உண்டான குற்ற உணர்ச்சிதான் அப்பெண் தனது உயிரை மாய்த்துக் கொண்டதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக் குண்டுதாரிகளை சரணடையக் கோரி ஒட்டப்பட்ட சுவரொட்டிகளின் சூத்திரதாரிகள் யார்?

## தலையைப் பிய்த்துக் கொள்கிறது படைத்தரப்பு

கொழும்பு, மார்ச் 30

விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகளை அவர்களது நோக்கத்தைக் கைவிடுமாறு கோரும் விதத்தில் கொழும் பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறிப்பிட்ட மஞ்சள், சிவப்பு சுவரொட்டிகளில், சரணடைய விரும்புபவர்கள் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கமும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இவ்வாறு சரணடைபவர்களுக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்படுவதுடன் அவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுவார்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இச்சுவரொட்டிகள் காணப்படு கின்றன.

எனினும், இராணுவம் தனக்கும் இந்தச் சுவரொட்டிகளுக்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்துள்ளது.

தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் காணப்படும் இந்தச் சுவரொட்டிகள் குறித் துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர் என ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்கு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித் துள் ளார்.

அரசுக்கு இதில் எந்தவித தொடர்பு மில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர் மேற்படி சுவரொட்டியில் குறிப்பிடப் பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளத் தாமே முயற்சித்தார் எனவும், எனினும் எவரும் பதிலளிக்க வில்லை என வும் தெரிவித்துள்ளார். இது ஏமாற்று நடவடிக்கையாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் 'ரோய்ட்டர்' செய்திச் சேவையைச் சேர்ந்தவர்கள் தொடர்பு கொள்ள முயற்சித்தனர் எனவும், எனினும் எவரும் பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பின் பல பகுதிகளில் பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களும் இந்த சுவரொட்டிகள் குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது எனக் குறிப் பிட்டுள்ளனர்.

சுவரொட்டிக்குப் பின்னால் உள்ள சூத்திரதாரிகள் யார் எனத் தெரியாதென வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் ஏனையவர்களைத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளுமாறு கோருவதற்கு முன்னர் தனது மகனைத் தியாகம் செய்ய முன்வர வேண்டுமென அந்தச் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்கொலைக் குண்டுதாரியின் துண்டிக்கப்பட்ட தலையின் படத்துடன் காணப்படும் இந்த சுவரொட்டிகள், "நீங்கள் வாழப் பிறந்தவர்கள், ஏன் குண்டுகளைச் சுமக்கிறீர்கள்?", "சிதறிய உடலுடன் ஏன் நீங்கள் இறக்கவேண்டும்?" - என்பனபோன்ற வாசகங்களைக் கொண்டுள்ளன. (உ)

## நன்றி செலுத்தும் ஆராதனை

**தந்தை S.J.V.செல்வநாயகம்** அவர்களின்

*வாழ்க்கைக்கும் பணிக்கும் இறைவனுக்கு*
*நன்றி செலுத்தும் வழிபாடு*

காலம்: **31.03.2008 திங்கட்கிழமை**

நேரம்: **பிற்பகல் 4.30 மணி**

இடம்: **புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

அருளுரை: பேராயர் அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன்
(முன்னாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாணம்)

அனைவரையும் இவ்வழிபாட்டில்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்,**
*யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், யாழ்ப்பாணம்.*

(72532)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் நடராசா தங்கராசா J.P.U.M**
(சட்டத்தரணியும், பதில் நீதிவானும்)

அன்னை மடியில்
25*08*1947

இறைவன் அடியில்
29*02*2008

**இடை நோகப் பெற்றெடுத்தேன் மகனே உன்னை**
**இடையினிலே இழப்பதற்கோ வளர்த்தேன் ஐயா!**
**நடை தளர்ந்து நான் படுக்கையாகும் நாளில்**
**நீ தானே பார்த்தெடுப்பாய் என்றிருந்தேன்**
**விடை எனக்குச் சொல்லாமல் போனது என்னவோ**
**விடைதர நான் மறுப்பேன் என்று எண்ணினாயோ**
**உன் பிரிவை என்றுதான் மறப்பேனோ**
**தாங்காது என் இதயம் வாடா மகனே.**

பாசமிகு அண்ணாவே ஆறாது எம் துயர்
பாசமிகு மைத்துனரே என்று தான் நான் மறப்பேனோ
பாசமிகு கொழும்பு மாமாவே இனி எப்போ நான் காண்பேன்.

*உன் பிரிவால் துயருறும்:*
அன்புத் தாயார் - நடராசா தங்கம்மா,
சின்னத்தங்கை- மங்கையர்க்கரசி,
வன்னேரி மைத்துனர் - தங்கராசா,
மருமகன் ஆசிரியர் - நிமலன்.

பருத்தித்துறை.

(அ/552043)

## மையத்து.....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிணமாகிவிட்ட மஜீத் நானா முதன்முறை யாகச் சந்தித்து, இரு தரப்பிலும் வெடித்த பெருத்த எதிர்ப்புகளையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்து விட்டு கணவன் மனைவி என்ற உறவை எய்தியது, முஸ்லிம்கள் வாழும் பகுதியில் வீடு வாடகைக்கு அமர்த்திக் குடித்தனம் ஆரம்பித்தது, தன்னை விட்டுவிடும்படி ரஸ்ஸாக் ஆலிம்ஸா தன் கணவனுக்கு உபதேசித்தது முதலிய சென்ற காலச் சம்பவங்களின் நிழல் அவளுடைய நினைவுத் திரையில் சலனமிட ஆரம்பித்தன.

ரஸ்ஸாக் ஆலிம்ஸாவின் உபதேசத்துக்கு தன் கணவன் அளித்த பதில் "அவள் சிங்களத் தி தான் ஆலிம்ஸா. இப்போது அவள் என்ட பொண் ஜாதியாச்சே. அவள கைவுட்டுட்டா பொண் பாவம் என்னச் சூழுமே. அது ஆண்டவனுக்கு பொருத்தமாய் இருக்குமா?" என்ற தன் கணவனின் பதிலும் அதைத் தொடர்ந்து உருவான சிநேக உறவும் மனத் திரையில் நீண்ட நிழலிட்டு ஓடின.

வெளியேறிய ரஸ்ஸாக் ஆலிம்ஸா அபூபக்கர் மத்திஸம் வீட்டை நோக்கி நடந்தார். மையத்துப் பிட்டிக்கு அலுவலாகச் சென்றுவிட்டார் என்று வீட்டிலுள்ளவர்கள் சொல்ல, மையத்துப்பிட்டி நோக்கி நடைபோட்டார்.

மையத்துப்பிட்டி ஜங்ஷன் ஏக அமர்க்களமாய் இருந்தது. பரீது புச்சர், அபின் வியாபாரி மீருஷா, புஹாரி டெயிலர் போன்ற சமய 'வழி காட்டிகள்' ஒரு 'தம்' கஞ்சாவுக்குத் தொண்டு செய்யும் ...ஹாபாக்களின் ஜிஹாத் படை புடை சூழ்ந்து நிற்க ஷரீஅத் ஞானோபதேசம் செய்யும் கர்ஜனை சுற்று வட்டாரங்களில் உள்ள வர்களுக்கு அழைப்புக்குரல் கொடுப்பதாக இருந்தது. ஆரோகண அவரோகண ஸ்தாயியில் 'குர்ஆன் ஆயத்துக் களை' பட்டை தீட்டிக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

இதற்கு மத்தியில் அபூபக்கர் மத்திஸம் நின்றார். அவர் கூறும் காரண காரியங்களை ஏற்க மறுத்தவராகப் பரீது புச்சர், "அந்த மசுர எல்லாம் சொல்ல வாணாம். அந்தக் காபிர் படு வாட மையத்த இங்கே அடக்க ஏலாது. கொண்டு போங்கோ அந்த சிங்களவன்ட பொணத்த கெரக் கோப்புக்கு. அதுதான் சரியான இடம்" என்று ஆணித்தரமான வியாக்கியானம் செய்து கொண்டிருந்தார். ஏதோ வஹி கிடைத்து விட்டவர் போல சடுதியாகச் சாரத்தைத் தொடைப் பிரதேசத்துக்கு இரண்டு மூன்று அங்குலம் உயர்த்திக் கட்டிக் கொண்டு 'கபூர்' என்று அழைத்து கையாலும் சமிக்ஞை செய்தார். "இந்தப் பூட்டைப் போட்டு கேட்டை நல்லா அடடா. இவன்கள் பகா கிகா எடுத்துக்கொண்டு அந்தப் பொணத்தப் பொதைக்கப் பாப்பான்கள்" என்று ஒரு யேல்லொக்கை நீட்டினார்.

இதற்குள் இவர்கள் மத்தியில் தோன்றி விட்ட ரஸ்ஸாக் ஆலிம்ஸா நிதானமான குரலில் "ஸபூர் வாப்பா ஸபூர்" என்று அமைதியை நிலைநாட்ட வாயைத் திறந்தது தான் தாமதம். "இந்த ஜூப்பா உடுத்த சிங்களத்தி புருஷனையும் கெரப்கோப்புள தான்பொதைக்கணும்" என்ற பரீது புச்சரின் தொண்டர் படை ஒரே குரலில் ஆரவாரித்தது. "மஜீது செஞ்சது பெரிய பெழ தான். இனிமேல் அவனைத் தண்டிக்கின்ற வேலய ஆண்டவன் கிட்ட உட்டுருங்க. மையத்த அதாபுபடுத்த எங்களுக்கு உரும இல்ல. அதை அடக்கி போடோனும்..." என்று அவர் மன்றாடிக் கேட்டதெல்லாம் 'ஹூய்' போட்டும் சீல்க்காய் அடித்தும் நிராகரித்த அக்கூட்டத்தின் பேரொலியில் அடங்கிக் குமைந்து குற்றுயிரானது.

அஸர் வேளைக்கு ரஸ்ஸாக் ஆலிம்ஸா மையத்து வீட்டுக்குத் திரும்பினார். அடிபட்ட குழந்தை வீம்பு செய்து, அழுது சோர்வடைந்து விட்ட குரலில் அவளுடைய விக்கலும் முனகலும் ஒலித்துக் கொண்டிருந்தன. குடிசைக்கு வெளியில் சிதறிக் கிடந்த ஏழெட்டுப் பேர் களையும் கூட்டி, "மையத்து அடக்க லேஸ்தியாகுங்கோ. என்ட தென்னங்காணியில் கவுறு வெட்டச்சொல்லியிருக்கிறேன்" என்றார்.

"அப்போ..." என்று மஜீத் நானாவுடைய காக்கா எழுப்ப முனைந்த பிரச்சினையைக் கருவிலேயே சிதைத்து, "அப்போ, இப்போ ஒண்டும் வாணாம். அவனுக்குக் கபனும் வாணாம், பண்ணீரும் வாணாம், சந்தக்கும் வாணாம், ஒரு மண்ணாங்கட்டியும் வாணாம். அது ஏன்ட மையத்து. ஆண்டவனுக்கு நான் தான் ஜவாப் தாரி" என்று கேள்விக்கிடமின்றி திசை திருப்பி விட்டார்.

ஒரு வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட மையத்து ஒரு பாயில் சுற்றப்பட்டு, தோள் களில் உயர்த்தப்பட்டது. "இன்னா லில்லாஹி வ இன்னா இலை ஹி ராஜி ஊன ஷஹாதா..." என்று ரஸ்ஸாக் ஆலிம்ஸா தனிக் குரலில் முணு முணுத்தவாறு சென்றார். உயர்ந்தோங்கி வளர்ந்த தென்னம் பிள்ளையின் நிழலில் கபுறு - குழி வெட்டப் பட்டிருந்தது. மையத்துப் பவ்வியமாக குழிக்குள் இறங்கியது. குர்ஆன் திரு வாக்கியங்களை கபுறு மருங்கில் குந்தி ஓதிக் கொண்டிருந்த ரஸ்ஸாக் ஆலிம்ஸாவின் கண்கள் உகுத்திய ஒரு சொட்டுக் கண்ணீர் நரைத்து விட்ட தாடியால் வடிகட்டப் பட்டு மையத்தின் மீது விழுந்தது. தென்னந் தோட்டத்தின் அமைதியைப் பிளந்து கொண்டு வந்த அவளுடைய ஒப்பாரிக் குரல் தென்னை களின் ஊடாக எதிரொலித்து கபுறை மூடும் மண் வெட்டிகளின் கரடு முரடான சப்தத்துடன் சங்கமித்தது. ரஸ்ஸாக் ஆலிம்ஸா ... கைக் ... யால் ... சிங்களத்தியை நோக்கி நடந்தார். (நன்றி: உழைக்கப்பிறந்தவர் கள்).

மகா கணபதி துணை
கொழும்புத்துறை மேற்கு

## ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகப் பெருமான் ஆலயம்
## சித்திரத்தேர் திருப்பணி

*யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதரிபீட விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேரும், தேர் முட்டியும் உருவாகி வருகின்றன. இந்தப் பாரிய திருப்பணிகளை நிறைவுசெய்ய, விநாயகப் பெருமானின் அடியார்கள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும் என விரும்புகிறோம்.*

*இந்த பாரிய பணிகள் நிறைவேறவும், சிவயோக சுவாமிகள் நடந்துலாவிய புனிதமான மண்ணில் விரைவாக சித்திரத்தேர் ஊர்ந்து செல்லவும் உங்கள் அனைவரதும் பங்களிப்புப் பெரிதும் விரும்பத்தக்கது.*

*யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி*
*வர்த்தக வங்கியின்*
*கணக்கிலக்கம்: 8600929859*

**ஆலய நிர்வாகம்.**

(72506)

உ

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடர்

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி
**பிரம்மஸ்ரீ ஜம்பு மகேஸ்வர சிவாச்சாரியார்**
அவர்களின் நல்லாசியுடன் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடரின் ஒன்பதாவது நிகழ்வு ஆனைப்பந்தியில் உள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

*காலம்:* **இன்று (30.03.2008) ஞாயிற்றுக்கிழமை**
*இடம்:* **தலைமைச் செயலகம்**
*நேரம்:* **பி.ப 1.30 மணிக்கு**
*தலைமையுரை:* **கணேச சபாபதிக்குருக்கள்** *(சுன்னாகம்)*
*கருத்துரை:* **ந.பிரசாந்தசர்மா** *(வட்டுக்கோட்டை)*
*விடயம்:* **'பூதசுத்தி'**
*நன்றியுரை*

*இந்நிகழ்வுக்கு அந்தண சிவாச்சாரியார்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்,
*ஆனைப்பந்தி.*

(72529)

கருத்தரங்கு அனுசரணை: **சி.சிவசாமி ஐயா,**
*துளாய் பிள்ளையார் ஆதீன கர்த்தா, அல்வாய், திக்கம்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
21 - 03 - 1937



மறைவு
29 - 02 - 2008

**திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி**

கடந்த 29.02.2008 வெள்ளிக்கிழமை எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.03.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*காங்கேசன்துறை வீதி,*
*முதலியார் வளவு,*
*சுன்னாகம்.*
நி.மு: அல்லின் வீதி,
காரைநகர்.

*பிரிவால் துயருறும்:*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-552042)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்
**பொன்னையா இராமுப்பிள்ளை**
(பிரபல புகையிலை வர்த்தகர்)

மண் மகிழ 25-06-1929
மண் நெகிழ 29-02-2008

அன்பின் பிறப்பிடமே பண்பின் இலக்கணமே
பாசத்தின் அற்புதமே அமைதியின் சிகரமே
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே - எங்கள்
அப்பப்பா எம்மை வாழ வைத்த ஒளி விளக்கே!
மலர்ந்த முகத்துடன் மாசற்ற நெஞ்சுடன்
பாசத்தின் உறைவிடமாய் எம்மை வளர்த்தீர்கள்
திடீர் என்று வேத விநாயகர் எங்கு கொண்டு
சென்றார்

எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (30.03.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

*உங்கள் நினைவுடன்:*
**குடும்பத்தினர்.**

(72527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் தேவையை உணர்த்தி சமூகத்துக்கு விழிப்புணர்வு ஊட்டும் குறுந்திரைப்படம் 'வாழும்போதே'

காலத்தேவையைக் கவினுறப் புலப்படுத்துவது ''வாழும்போதே'' குறுந்திரைப்படம். மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பொருத்தமான சாதனம் இன்று திரைப்படமே. திரைப்படங்களையே முன் மாதிரிகளாக்கி வாழும் சமுதாயச் சூழலை வழிப்படுத்தப் பொருத்தமாகத் தயாரிக்கப் பட்ட குறுந்திரைப்படம் ''வாழும்போதே''.

கல்வியே இன்று உலகப் பொருளாதாரத்தின் மூலதனமாக விளங்கும்போது நம்மவர் இன்னமும் கல்வியின் அதி முக்கியத்துவத்தை உணராது வாழ்வது மிக வேதனைக்குரிய விடயம். கல்வியின் தேவையை உணர்ந்துகொள்ளாத, உணர வாய்ப்பற்ற மக்கள் சமூகம் இன்றும் நம் மத்தியில் உள்ளது. அந்தச் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மட்டும் இத் திரைப்படம் தயாரிக்கப்படவில்லை. விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடுடையவர்கள் யாவர் என்று எம்மவர் கடமைகளையும் கூடவே புலப்படுத்தும் உள்நோக்கும் படமாகி ஒரு பாடமும் ஆகிறது.

இலவசக் கல்வி அறிமுகமாகி 63 ஆண்டுகள் நிறைவாகும்போதும் எழுத்தறிவற்ற குழந்தைகள் நடமாடுவது நம் கல்வியுலகின் கடமைக்குச் சவாலே! இச்சவாலை எதிர்கொண்டு உள்ளுணர்வுடன் தயாரிக்கப்பட்ட நல்ல நோக்குடைய குறுந்திரைப் படம் நெடும் பயன் தரவல்லது. இத்திரைப் படத்தை உரிய இடத்தில் காட்சிப்படுத்தும் கடப்பாடும் மிக முக்கியம். நல்வித்து விளைந்து அறுவடை காணவேண்டும்.

## சிறப்பு மிளிரும் இம்முயற்சிக்கு கல்வி உலகம் நன்றி கூறவேண்டும்

### பாத்திரங்களின் சிறப்பான நடிப்பு

உயர்ந்த நோக்கில் சிறுசிறு இலகு வசனங்களுடன் தயாரிக்கப்பட்ட திரைப்படம். எவரும் புரிந்துகொள்ளத்தக்க மொழிநடை. பொருத்தமான பாத்திரப் படைப்புகள். கல்வியின் அவசியம் பற்றி கல்வி வாய்ப் பிழந்து தவிக்கும் சிறுவர்கள் உரையாடும் காட்சி உருக்கமானது. பாடசாலை செல்லும் மாணவர்களின் உற்சாகமான, உல்லாசமான நடையை ஏக்கத்துடன் பார்க்கும் துணி தோய்க்கும் சிறுமியின் முகபாவம் மிக உச்சமான நடிப்பு. தும்பி பிடிக்கும் சிறுவர்களின் துடிப்பும் பொருத்தமாக அமைந்தது. 'ரீச்சர்' பாத்திரம் கல்வி விளக்கமற்ற தந்தையை வழிப்படுத்த முயன்றபோதும் முடியவில்லை. 'ரீச்சர்' பொருத்தமாக அமைந்தபோதும் அவரது அறிவுரைகளின் அழுத்தம் போதாதது என்றே சொல்லலாம். மனதுக்குப்படுகின்ற அவரது சொந்தக் கதை காட்சிப்படுத்தப்பட்டதால் ஆசிரியரின் வார்த்தைகளில் போதிய அழுத்தம் இருக்கவில்லை. காசை பெரிதாக மதித்து கல்வியைத் தூசாக நினைக்கும் தந்தையின் நடிப்புப் பிரமாதம். எனினும் படிப்பறிவு குறைந்தவர் பாத்திரத்தை இயல்பாக நடிப்பவர் இயல்பாகக் கதைப் பதில் சிரமப்படுகிறார். நல்ல தமிழில் நாளும் விரிவுரைகள், ஆய்வுரைகள் நடத்திப் பழக்கப்பட்டவரால் பேச்சுத் தமிழில் இயல்பாகக் கதைக்க முடியவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. மாவிடிக்கும் மங்கை அமைதியான பொருத்தமான நடிப்பு. வீட்டு எஜமானின் இரக்கம் உதவும் மனப்பாங்கு உத்தமம். மா இடிக்கும் இடத்தில் முழுநேரமும் அவர் இருக்காது தற்செயலாக வருவதுபோல் இருந்தால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்.

### கவனத்தை ஈர்க்கவல்ல காட்சிகள்

குழந்தைகளின் கல்விக்காகக் காலிழந்தவர் கஷ்டப்பட்டு உழைக்கும் காட்சி கவனத்தை ஈர்க்கவல்லது. ஏற்றுக்கொண்ட பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்தார் விறகு வெட்டி. தன் பிள்ளையைப் படிப்பிக்கத் தவறிய தந்தை அந்தத் தவறை இன்னொருவர் செய்யவிடாது தடுப்பது சிறப்பாக அமைந்தது. நடிப்பும் இயல்பாக இருந்தது.

உழைக்கும் வர்க்கம் ஒன்றுகூடி கல்விக்காய் வாதாடுவது வரவேற்கத்தக்க காட்சி. கல்வியின் தேவையை ஆசிரியர், மா இடிக்கும் மங்கை, மீன்பிடிக்கும் சிறுவன், துணி தோய்க்கும் சிறுமி, விறகு வெட்டி ஏனைய கூலித்தொழிலாளர் யாவருமே உணர்ந்து கொண்டு ஊருக்கு உணர்த்த விளைவது சிறப்பான அம்சம்.

அறியாதார்க்கு அறிவிக்கும் கடமை அறிந்தோர் அனைவருக்கும் உண்டு என்பதினை அழகாகப் படம் பிடித்துள்ளனர்.

மிகப்பொருத்தமான காட்சிகள் மாணவ சமுதாயம் மகிழ்வுடன் பங்குபற்றும் பல் வேறு நிகழ்ச்சிகளும் பொருத்தமான இடத்தில் சிறந்த பாடலுடன் காட்சிப் படுத்தப்படுகின்றது. அர்த்தமுள்ள பாடல்கள், கனிவான குரல்களால் இனிமையாக இசைக்கப் பட்டமை போற்றத்தக்க விதமாக அமைந் துள்ளது.

சிறந்த தயாரிப்பு. இந்தவகையில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அருணேஸ்வரி வேதநாயகத்தின் தூரநோக்கும் எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள அக்கறையும் புலப் படுகின்றன. நெறியாள்கையும் கச்சிதமாக அமைந்தது. தேர்ச்சிபெற்ற திரைப்பட ஒளிப் பதிவாளரால் படமாக்கப்பட்டது போன்று சிறப்பாக அமைந்த படக்காட்சிகள். நெறியாள்கை செய்த தேசிய கல்வியியல் கல்லூரி கல்லூரியாளரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். மெச்சத்தக்க ஒலி, ஒளி அமைப்புகள். மொத்தத்தில் நற்பயன் தரவல்ல நலிந்தோரை 'வாழ்விக்கவல்ல நன்முயற்சியாக இக்குறுந்திரைப்படம் அமைந்துள்ளது. இத்தைகய முயற்சிகள் மேலும் தொடரவும் பயனளிக்கவும் படைப்பாளிகளுக்கு அனைவரும் உதவி, உற்சாகமூட்டுவோமாக. உன்னத சேவையில் இணைந்த உயர்ந்த உள்ளங்களை உளமார நன்றியோடு பாராட்டு கிறோம். தயாரிப்பாளரின் தனித்துவமான சிறப்பான முயற்சிக்குக் கல்வியுலகம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது. ★

திருமதி கு.விஜயரகுநாதன்
(முதுகலைமாணி),
நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

# இந்த வாரத்துக்கு உங்கள் கால பலன் எப்படி? (30.03.2008 - 05.04.2008)

## மேடம்



*(அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் வரை)*

காரியங்களில் தீவிரம் காட்டலாம். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சுபகாரியம் கூடி வரும். குடும்பத்தில் அமைதி, நிம்மதி நிலவும்.

அலுவலகத்தில் சாதக சூழல் காணப்படும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். திடீர் திருப்பத்தை எதிர்பார்க்கலாம். பொருளாதார ரீதியாகப் பலம் பெறுவீர்கள்.

## இடபம்



*(கார்த்திகை 2ஆம் பாதம் முதல் ரோகிணி, மிருகசிரீடம் 2ஆம் பாதம் வரை)*

நன்மைகள் அதிகம் உண்டாகும். மனக்குறை தீரும். கவலைகள் பறக்கும். பணவரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும். முக்கிய காரியமாக அலைச் சல் அதிகரிக்கும். தள்ளிப்போன காரியம் கை கூடிவரும். பண விவகாரத்தில் கூடுதல் கவனம் தேவை. அலைச்சலைக் குறைக் கவும் செலவுகள் மட்டுப்படும் சிலருக்கு வெளி நாட்டு வேலை வாய்ப்புத்தேடிவரும். முக்கிய முடிவுகளை எடுக்கச் சிறந்தவாரம்.

## மிதுனம்



*(மிருகசிரீடம் 3 ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3ஆம் பாதம் வரை)*

புதிய முயற்சிகளை மேற கொள்ளும்போது சற்றே கூடுதல் கவனம் தேவை. பணவரவு குறித்துக் கவலை வேண்டாம்.

பணப் பிரச்சினை படிப்படியாகக் குறையும். அலுவலகத்தில விசேஷமாக எதுவும் இருக்காது. இருப் பினும் உங்களுக்கு சாதகமான நிலைகாணப்படும். முக்கிய முடிவுகளில் வேகம் காட்டலாம். சக ஊழியர் களிடம் கூடுதல் கவனம் காட்டவும்.

## கடகம்



*(புனர்பூசம் 4ஆம் பாதம் முதல பூசம், ஆயில்யம் வரை)*

பணவரவு அபரிமிதமாக இருக்கும். பண வரவு சிறப்பாக இருக்கும. முக்கிய விருந்தினர வருகையால் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி வந்துசேரும்.

குடும்ப வாழ்க்கையில் நிமமதி கூடும். திருமணப் பேச்சு சுப திசையில் செல்லும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. எதிர்பார்த்த இடமாற்றம் விரைவில் வந்து சேரும். சிலருக்கு பதவி உயர்வு தேடிவரும்.

## சிம்மம்



*(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் வரை)*

எதிலும் நன்கு யோசித்து இறங்கவும். வாகன யோகம் உண்டு. சொத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வுவரும். பணப் பிரச்சினை குறையும். முக்கிய காரியங்களில் தைரியமாக இறங்கலாம். அலுவலக சூழல் சாதகமாக இருக்கும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு படிப்படியாக சரியாகும் சிலருக்கு கூடுதல் வேலைப்பளு ஏற்பட்டு மனதை வருத்தலாம்.

## கன்னி



*(உத்திரம் 2ஆம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் வரை)*

நிதானத்துடன் எதிலும் செயற்படவும். பொறுமை மிகமிக அவசியம் பண வரவு மகிழ்ச்சிதரும்

அலைச்சல் குறையும். உடல் நலனில் சற்று அக்கறை. எதிர்பார்த்த உதவி சரியான நேரத்தில் வந்து அமையும். அலைச்சலைக் குறைக்கவும். சிலருக்கு மனதில் குழப்பம் ஏற்படலாம். வேலைப்பளுகூடும். நிதானத்துடன் எதிலும் ஈடுபடவும். ஊதிய உயர்வை கேட்டுப் பெற முயறசிக்கவும்.

## துலாம்



*(சித்திரை 3ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் வரை)*

எதிலும் வெற்றி கிடைக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் காரியங்கள நடக்கும் நண்பர்கள், உறவினர்களால நல்லது நடக்கும் மொத்தத்தில் சிறப்பானவாரம் ஆன மீகப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு வரும் வேலையில் சந்தோசமாக இருப்பீகள். திருப்பத்தை எதிர்பார்க்கலாம்.

## விருச்சிகம்



*(விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம். கேட்டை வரை)*

நிதானத்துடனும், பொறுமையுடனும் எதையும் அணுகவும். பகுறிய காரியம் சிதறும். சம்பந்தம் இல்லாதவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்க்கவும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உற்சாகம கூடும், கன்னிப் பெண்களுக்குச் சுபகாரியம் கூடிவரும். காதலில் திருப்பத்தை எதிர்பார்க்கலாம்.

வேலையில் திருப்திகரமாக இருப்பீகள். சக ஊழியர்களால் பிரச்சினை ஏற்படாது.

## தனுசு



*தனுசு (மூலம் பூராடம் உத்திராடம் முதல் பாதம் வரை)*

சில காரியத் தடைகள் வந்து மனதைக் கவலைப் படுத்தும். பொருளாதாரம் சிறப்பான நிலையை நோக்கி நகரும் குடும்பத்தில் பொதுவாக அமைதி நிலவும். வெளியூர் பயணத்தால் வீண் செலவுகள் ஏற்படும் சிலருக்குத் தொலை தூரததிலிருந்து சந்தோஷமான செய்தி வந்து சேரும். அலுவலக சூழல் சிறப்பாக இருககாது. புதிய திருப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பீர்கள். நிதானத்துடனும், புத்தி சாலித்தனத்துடனும் நடந்துகொண்டால் கவலைகளைக் குறைக்கலாம்.

## மகரம்



*(உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம் அவிட்டம் 2ஆம் பாதம் வரை)*

தன்னம்பிக்கை அதிகரிக கும். தைரியத்துடன் எதிலும் இறங்குவீர் கள். உத் வேகத்துடன் செயல்படுவீர்கள். உற்சாகமாக காரியங்களை ஆற்றுவீர்கள். நினைத்தது நடக்கும் வேண்டியது கிடைக்கும் பொருளாதாரம் மேம்படும். குடும்பத்தில் நிம மதி நிலவும் சிறுசிறு தொல்லைகள் வந்து சரியாகும் புதிய முயற்சிகள் பலன்தர ஆரம்பிக கும்.

## கும்பம்



*(அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் வரை)*

எதற்கெடுத்தாலும் தடங்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும் பண விரயத்திற்கு வாய்ப்புண்டு. நிதானம், பொறுமை மிக அவசியம். பொருளா தாரம் கெட்டியாக இருக்கும் சேமிப்பு அதி கரிககும். பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும கூடுதல் கவனம்தேவை.

## மீனம்



*(பூரட்டாதி 4ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி வரை)*

உடல் ஆரோக்கியம் மேம் படும் பொருளாதாரமும் தெம பாகவே இருக்கும். பதவி உயர்வை எதிர்பார்க்கலாம். கருத்து வேறு பாடுகள் சரியாகும் செலவுகள் குறையும் வரு வாய் அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் ஊதிய உயர்வை எதிர பார்க்கலாம் புதிய வேலைக்கான முயற்சிகளையும் முடுக்கிவிடலாம்.

# பல்வகை ஆளுமை நிறைந்தவர்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி யியல் முது தத்துவமாணிப் பட்டத்தை ஆசிரியை திரும இரஞ்சிதமலர் அருளானந்தன் பெற்றுள்ளார். இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவியும் கல்லூரியின் முன்னாள் நூலகரும் ஆசிரியரும் சாரணீய வழிகாட்டி பொறுப் பாசிரியரும் ஆவார். இவர் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் இளங்கலை மாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா (விசேடசித்தி) பட்டக்கல்வியை பெற்றுள்ளதோடு இலங்கை நூலக சங்கத்தின் நூலகரும் தகவல் விஞ்ஞான மும் டிப்ளோமா தகைமையும் பெற்றுள்ளார். கோப்பாய் கொத்தணியில் 1991 ஆம் அண்டின் நல்லாசிரியர் கௌரவத்தையும் பெற்றவர்.

தற்போது நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்து வரும் இவர், தமது பாடசாலைக் காலத்தில் இசை, நடனம், நாடகம், பேச்சு, விவாதம், விளையாட்டுத் துறைகளில் முதன்மை மாணவியாகவும் பாடசாலை மாணவ முதல்வியாகவும் இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்பு அவையின் கோப்பாய் கிளையின் தொண்டராகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**மக்கள் மகிமை**

மேலும் இவர் ஈழநாடு வாரமலர், வீரகேசரி வாரமலர் பதிப்பிலும் சிறு கதை, கட்டுரை, கவிதை ஆகியனவும் எழுதியுள்ளார். பொல்கொல கூட்டுறவுக் கல்லூரியின் கூட்டுறவுக் கல்வி பரீட்சையில் சித்தி பெற்றுள்ள இவர் தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கை அம்மன் தேவஸ்தானம் பற்றிய நூல் விவரப் பட்டியல், புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை பற்றிய ஆய்வடங்கல் ஆகிய ஆய்வு வழிகாட்டிகளை யும் ஆக்கியவராவார். பாடசாலை மாணவருக்கான 'சைவநெறி' ஒளிப்பதிவு நாடாவைத் தொகுத்து வெளியிட்டுள்ளதோடு நாடகங்களையும் ஆக்கி நெறிப் படுத்தியும் உள்ளார். -இ.சற்குருநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாக்கப் பொருள்களின் கண்காட்சிக்கு ஏற்பாடு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட புத்தாக்கப் பொருள்களின் பாடசாலை மட்ட கண்காட்சியினை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். பொருள்களை காட்சிப்படுத்தும் தினத்தை மூன்று நாள்களுக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அறிவிக்குமாறுகூறப்பட்டுள்ளது. காட்சிப்படுத்தலில் தெரிவு செய்யப்படும் மூன்று பொருள்கள் வலய மட்ட கண்காட்சியில் வைக்கப்படுமெனவும் வலயமட்ட கண்காட்சி ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில்இடம்பெறுமெனவும்அவர்தெரிவித்துள்ளார். (202-207)

## வடக்கிலும் கிழக்கிலும்...

[09 ஆம் பக்கத்தில் வெளியான அட்டவணை XIV இன் தொடர்ச்சி.....]

| | | | |
|---|---|---|---|
| வவுனியா | பாவற்குளம் | 27,000 | 1763 |
| | வவுனியாக்குளம் | 1,617 | 173 |
| | சேமமடுக்குளம் | 2,560 | 243 |
| | மகாரம்பைக்குளம் | 643 | 87 |
| | நாம்பள்குளம் | 767 | 104 |
| | கல்மடுக்குளம் | 1,037 | 162 |
| | பம்பைமடு | 875 | 105 |
| | இராசேந்திரன்குளம் | 532 | 119 |
| | அலியாமருதமடு | 404 | 92 |
| | மல்லிகைக்குளம் | 815 | 121 |
| | கொம்புவைத்தகுளம் | 524 | 89 |
| | வேலன்குளம் | 735 | 90 |
| | நையினமடு | 325 | 87 |
| | மாமடுவ | 3,030 | 267 |
| | மடுகந்த | 1,400 | 162 |
| | ஈறப்பெரியகுளம் | 3,534 | 209 |
| | மருதமடுக்குளம் | 1,500 | 177 |
| | ஈரப்பொத்தான | 650 | 96 |
| | மகாச்சிக்கொடிய | 760 | 104 |
| | பெரியதம்பானைக்குளம் | 1,095 | 138 |
| | முகத்தான்குளம் | 2,400 | 313 |
| | கனகராயன்குளம் | 1,120 | 94 |
| | கொக்கச்சான்குளம் | 1,054 | 89 |
| மன்னார் | தெட்சனாமருதமடு | 1,141 | 215 |
| | அடம்பன்குளம் | 710 | 162 |
| | பெரியபண்டிவிரிச்சான் | 2,816 | 244 |
| | பெரியமடுக்குளம் | 4,478 | 307 |
| | கூறைக்குளம் | 1,600 | 219 |
| | சோலைமண்டலக்குளம் | 918 | 142 |
| | கட்டுக்கரைக்குளம் | 31,500 | 9894 |
| | அகத்திமுரிப்புக்குளம் | 6,948 | 2522 |
| | வியாட்டிக்குளம் | 840 | 466 |
| | குள்ளக்குளம் | 125 | 152 |
| | பண்டிவிரிச்சான்குளம் | 202 | 245 |

## லிபியாவில் இலங்கைக்கான தூதரகம்: உடனடி நடவடிக்கைக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மார்ச்.30

லிபியாவில் இலங்கைக்கான தூதரகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இத் தகவலை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

லிபியாவுக்கு நான் விஜயம் மேற்கொண்டிருந்த போது லிபிய பிரதமர் கலாநிதிமதூக்கை சந்தித்து பேசினேன். இச் சந்திப்பின் போதுலிபியப் பிரதமர் இலங்கையின்தூதரகம்ஒன்றை நிறுவ வேண்டும் என்ற கோரிக் கையை என்னிடம் முன் வைத்தார்.

லிபியப் பிரதமரின் கோரிக்கையை நான் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். அதன் போதே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்தார். இதன் போது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோரும் இருந்தனர்-என்றார். (202)

### முதுமாணிப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் கல்வித்துறையில் நடைபெற்ற கல்வி முதுமாணி பட்ட கற்கை நெறியின் இறுதிப்பரீட்சை முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. பரீட்சையில் சித்தி பெற்றோர் விவரங்கள் பட்டப் படிப்புகள் பீடத்தின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இப் பரீட்சையில் யாழ். பல்கலையில் பயின்றோரில் தமிழ் மொழி மூலத்தில் 49 பேரும் ஆங்கிலமொழிமூலத்தில் 49 பேரும் வவுனியா வளாகத்தில் பயின்றோரில் 50 பேரும் சித்தி பெற்றுள்ளனர். (1)


நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய
வருடாந்த மகோற்சவ
விஞ்ஞாபனம்- 2008

31.03.2008 திங்கட்கிழமை -கொடியேற்றம்
05.04.2008 சனிக்கிழமை -வசந்த உற்சவம்
06.04.2008 ஞாயிற்றுக்கிழமை -மாம்பழத் திருவிழா
07.04.2008 திங்கட்கிழமை -வேட்டைத் திருவிழா
08.04.2008 செவ்வாய்க்கிழமை -சம்பறத் திருவிழா
09.04.2008 புதன்கிழமை -தேர்த் திருவிழா
10.04.2008 வியாழக்கிழமை -தீர்த்தத் திருவிழா
10.04.2008 அன்று ஊர்மக்களால் அன்னதானம் வழங்கப்படும்.
11.04.2008 வெள்ளிக்கிழமை -பூங்காவனம்.

ஆலய பரிபாலன சபையினர்.
(சி/552048)



கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர்
திரு கா.இராஜதுரையின் அன்புத் தாய்
திருமதி காசிநாதர் சிவயோகம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.
(72543)



நினைவலைகள்
ஓராண்டு ஐந்தாண்டு




அமரர் கந்தையா குருநாதன் திருமதி குருநாதன் இரத்தினம்மா
28★10★1925 பிறப்பு 08★10★1928
11★04★2007 இறப்பு 29★11★2002

ஐயா, அப்பம்மா என்று அன்புடனே அழைக்க இவ்வுலகில் இனி நமக்கு யார்? நீண்ட தூரம் எமை விட்டுப்பிரிந்தாலும் நீங்காது உங்கள் நினைவுகள். நிஜமாக நீங்கள் வாழ்ந்து என்னை வளர்த்த நாள்கள் நிழலாகிப் போனாலும் ஆறாது என்றும் எம்மனம். எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது.

பேரன், பேர்த்தி,
திரு.திருமதி இந்திரகுமார்
(கந்தசாமி அன் சன்ஸ்)
சிலம்புப் புளியடி வீதி,
சங்கானை.
(72545)



நன்றி நவில்கின்றேன்



எனது தந்தையார்
வண.டி.ஆர்.அம்பலவாணர்
B.D.,M.A.
மரணம் அடைந்த செய்தியை கேள்வியுற்று தொலைபேசியிலும், நேரடியாகவும் கலந்து எனக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையம் வைத்தவர்கள், இரவு, பகலாக வந்து பாடல்களைப் பாடியவர்கள், அப்பாவை வைத்து பராமரித்தவர்கள் யாவருக்கும் எனது நன்றிகள் பல.
அத்தோடு இறுதிக்கிரிகைகளில் கலந்து கொண்ட குருமார்கள், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், சுண்டுக்குளி அதிபர், ஆசிரியர்கள், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் இல்லப் பிள்ளைகள், அரச/திணைக்கள உத்தியோகத்தர்கள், புங்குடுதீவு வாழ்மக்கள், கிராம அலுவலர்கள், அதிபர்கள், அத்தோடு தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதி.வண.கலாநிதி டி.எஸ்.தியாகராஜா அவர்களுக்கும் எனது பேராயத்திற்கும் நன்றிகளை கூறுவதுடன் பிற இடங்களில் இருந்து வந்து இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.
நிமால் அம்பலவாணர்
ஊழியர், வேலணை - புங்குடுதீவு தென்னிந்தியத் திருச்சபை.
(72542)



CCHS
(CATHOLIC COLLEGE OF HIGHER STUDIES)
ENGLISH COURSE LEADING TO DIPLOMA.
A NEW BATCH TO FOLLOW LEVEL III (INTERMEDIATE) BEGINS SHORTLY.
MINIMUM QUALIFICATION-PASS IN O/L ENGLISH.
CLASSES ON WEEKDAYS FROM 3.30-5.30 FOR 6 MONTHS
APPLY BEFORE 15.04.08.
FORMS AVAILABLE AT CCHS OFFICE, AHAVOLI, JAFFNA
CONTACT ON WEEKDAYS BETWEEN 3.30-5.30
SELECTION BY ADMISSION TEST ON 20.04.08 AT 10.00AM
-REGISTRAR.



இணுவில் பொதுநூலகம் சனசமூகநிலையம்
புனருத்தாரண ஆறாவது ஆண்டு நிறைவு விழா
பரிசில் வழங்கும் வைபவம்

இடம்: இணுவில் பொதுநூலக கலாசாரமண்டபம் மானிப்பாய் வீதி, இணுவில்.
காலம்: 30.03.2008 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30
தலைவர்: திரு.நி.கஜேந்திரன் (இ.பொ.நூலகம்)
பிரதம விருந்தினர்: உயர்திரு. வசந்தசேனன். (மேலதிக மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஆ.சி.நடராசா (முகாமையாளர் - தினக்குரல்)
திரு.என். விஜயசுந்தரம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
கௌரவ விருந்தினர்கள்: திரு எஸ் சதானந்தன் (அதிபர், இணுவில் மத்தியகல்லூரி)
திரு இ.பாலச்சந்திரன் (அதிபர், எவரெஸ்ட் கல்வி நிலையம்.)
வரவேற்புரை: திரு ம.ஜெயகாந்தன் (பொருளாளர் இ.பொ.நூ)
ஆசியுரை: சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தக்குருக்கள் (இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்)
தலைமையுரை
தொடக்கவுரை: திரு க.தேவராசா. (போசகர் இ.பொ.நூ) (பீடாதிபதி, வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.)
சிறப்பு விருந்தினர் உரை
பிரதம விருந்தினர் உரை
பரிசில் வழங்கல்: பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள். கிரிக்கெட் மற்றும் சதுரங்கம் போட்டிகளில் வெற்றிபெற்றோர்
கலை நிகழ்வுகள்:
நன்றியுரை: திரு.ந.நாதரூபன் (செயலாளர் இ.பொ.நூ)

Web: www.inuvilinfo.com.email: info @ inuvilinfo.com
உங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றார்கள் நூலக அங்கத்தவர்கள்.



விற்பனைக்குண்டு
SHARP போட்டோ பிரதி மிசின் (SF- 1118),
SUNTEL TELEPHONE,
(HERO HONDA) CD - DOWN,
LAMINATING Machine
தொடர்புகளுக்கு-222 2193
P.T. ராஜலிங்கம் கோப்பாய்சந்தி, கோப்பாய்.



விற்பனைக்கு
இரண்டு அச்சுகள் கொண்ட கொங்கிறீற் Block கல்லு அடிக்கும் மிசின் புதியது உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : மு.தேவராசா,
17/6, மகளிர் கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.
T.P. 222 3420
(72525)



காணி விற்பனைக்கு
மல்லாகத்தில் கே.கே.எஸ். வீதியில் 2½ பரப்புக் காணி (சந்திக்கு சற்று அண்மையில்) விற்பனைக் குண்டு.
தொடர்பு: சே.ஆனந்தசபாபதி (கண்ணன்)
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.
(அழகொல்லைப் பிள்ளையார் கோயிலுக்கு சற்று அருகில்)
T.P. 0777 242198
(72516)



தேவை
வெற்றுப் பால்மா பைக்கற்றுகள் தேவை.
ரூ. 1.50 படி கொள்வனவு செய்யப்படும்.
பூங்கனிச்சோலை
இராமலிங்கம் வீதி, முடமாவடி. (72533)



மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம், 1978இல் பிறந்த, மூல நட்சத்திரம், 4 ஆம் பாதம் U.Kயில் பணி புரியும் மணமகனிற்கு மணமகள் தேவை. பொருத் தமான சாதகம், படம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமில்லாதவை திருப்பி அனுப்பப்படும்.
விளம்பர இல:- 3075
மே/பா: உதயன்.
(72536)



வீடு வாடகைக்கு
இராஜ வீதி, கோப்பாய் தெற்கு, திருநெல்வேலி பால்பண்ணைச்சந்திக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. அரச ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தொடர்பு:- இ. சிவலிங்கம்
0777 119555
(72540)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியாவின் போக்குக் குறித்து ஈழத் தமிழர்களின் மனக்குறை

''எப்போதெல்லாம் ஈழ மக்கள் மீது கொடூரமான போர் திணிக்கப்படுகின்றதோ அப்போதெல்லாம் இந்திய அரசு கொடுக்கின்ற ஆயுதங்களை வைத்துத்தான் தமிழ் மக்களைக் கொல்கின்றது அரசு.''

-இப்படி ஒரு குற்றச்சாட்டை இந்தியத் தரப்பு மீது சுமத்தியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசன்.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் அமைதித் தீர்வு காணும் எண்ணம் இலங்கை அரசுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. படை நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளை அழிக்கும் இராணுவ வழித் தீர்வில் மட்டுமே கொழும்பு அரசு முனைப்பாக ஈடுபட்டுள்ளது''- என்று புதுடில்லி அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனே பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும் அதேசமயத்திலேயே இலங்கைக்கான இந்திய இராணுவ உதவியும் தொடர்கின்றது.

பேரழிவு ஏற்படுத்தாத ஆயுதங்கள் என்ற பெயரில் இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு இந்தியா வழங்குகின்றது; 'ராடர்' போன்ற இராணுவச் செயற்பாடுகளுக்குத் தேவைப்படும் வான்வழிப் பாதுகாப்புக் கருவிகளை இந்தியா கொடுத்து உதவுகின்றது; இலங்கையுடன் கூட்டுக் கடல்ரோந்திலும் கண்காணிப்பிலும் ஈடுபடுகின்றது. இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் விசேட பயிற்சி வசதிகள் வழங்கப்படுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் தமிழர் தரப்புக்கு எதிரான கொடூர யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இலங்கை இராணுவத்தைப் போற்றித் துதிப்பது போல அதன் இராணுவத் தளபதியை வரவேற்று விசேட கௌரவமளிக்கின்றது இந்தியா. அவருக்கு அணி நடை மரியாதைகள், குதூகல வரவேற்பு என்று தூள் கிளப்புகிறது புதுடில்லி.

அவரது வருகையை ஒட்டி இந்தியாவில் தகவல் வெளியிட்ட இந்தியப் படைகளின் மூத்த அதிகாரி ஒருவர் ''புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவத்தின் கைகள் நலிவடைவதை இந்தியா விரும்பவில்லை''- என்பதைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம் இவ்விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டைப் பட்டவர்த்தனமாகப் போட்டுடைத்திருக்கின்றார்.

இவ்வாறு யுத்த வெறித் தீவிரத்தோடு இராணுவ வழித் தீர்வில் முனைப்புக் கொண்டு நிற்கும் கொழும்புக்கு 'வீடு எரிக்கும் ராஜாவுக்குக் கொள்ளிக்கட்டை தூக்கிக் கொடுக்கும் மந்திரி போல' இந்தியா செயற்படுகின்ற பின்னணியில், நடேசனின் குற்றச்சாட்டு மிக அர்த்தமுள்ளதாகவே படுகின்றது.

இந்தச் சமயத்தில் ஈழத் தமிழர் தரப்பில் ஒரு முக்கிய விடயத்தை இந்திய ஆளும் தரப்புக்கு இங்கு நினைவூட்டி சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

ஈழத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் இந்திய உயர்மட்டத் தலைவர்களை 2006 டிசெம்பர் 22 ஆம் திகதி புதுடில்லியில் சந்தித்திருந்தனர். தமிழர்கள் தரப்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோரும் இந்திய அரச உயர் பீடத்தின் சார்பில் பிரதமர் மன்மோன்சிங், வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் போன்றோரும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்புக்குச் சற்றுக்காலம் முன்னர்தான் பொது நல அமைப்பு நாடுகளின் கம்பாலா மாநாட்டுக்குச் சென்றிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் இலங்கை இனப்பிரச்சினை குறித்து அங்கு விரிவாக உரையாடியிருந்தனர்.

அந்தச் சந்திப்பின் பெறுபேறுகளும் ஈழத் தமிழர்களின் தலைவர்கள் - பிரதமர் மன்மோகன் சந்திப்பின்போது ஆராயப்பட்டன.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்குக் கொழும்பு அரசு கங்கணம் கட்டி நிற்பதை இந்தச் சந்திப்பின்போது முறைப்பாடாகத் தமிழர் தலைவர்கள் முன்வைத்தனர்.

'இது குறித்துக் கொழும்புடன் பேசியிருக்கின்றோம். வடக்கு - கிழக்கு பிரிக்கப்படமாட்டாது என எமக்கு உறுதி தந்திருக்கின்றார்கள். வடக்கு - கிழக்கு ஒன்றணைந்திருப்ப தன் முக்கியத்துவத்தைக் கொழும்புக்கு விளக்கி, அதனை அவர்கள் ஏற்கச் செய்திருக்கின்றோம்.' என்ற சாரப்பட இந்தியத் தலைவர்கள் குறிப்பிட்டனர். அதற்கு ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் தெளிவாகப் பதில் தந்தனர்.

'கொழும்பின் உறுதி மொழிகளில் எமக்கு நம்பிக்கையில்லை. அதுதான் எமது அனுபவப் பாடம்; பட்டறிவு. வழமையான தனது பாணியில் தன்னுடைய இந்த வாக்குறுதியையும் கொழும்பு தவறவிட்டு - காற்றில் பறக்கவிட்டு - ஏமாற்றி, வடக்குக் கிழக்கைப் பிரிக்க முயன்றால் என்ன செய்வீர்கள்?'- என்று தமிழ்த் தலைவர்கள் கேட்டார்கள்.

'எங்களுக்கு எல்லா வழிமுறைகளும் திறந்தே - வாய்ப்பாகவே - உள்ளன.'(All the options are open for us!) என்று இந்திய ஆளும் வர்க்கம் அப்போது உறுதியாகப் பதில் சொன்னது.

ஆனால் இப்போது என்ன நடக்கின்றது? வடக்கு - கிழக்கைத் தனித்தனியாகப் பிரித்து, அதை உறுதிப்படுத்துவதற்காகக் கிழக்கிற்கு தனியாக மாகாண சபைத் தேர்தலை அவசர அவசரமாக நடத்தி முடிக்கத் துடிக்கிறது இலங்கை. அதற்கான நடவடிக்கைகளை விழுந்தடித்து வேகமாக எடுக்கின்றது.

ஆனால், 'எமக்கு எல்லா வழிகளும் திறந்தே இருக்கின்றன!'- என்று அப்போது தமிழ்த்தலைவர்களிடமே நேரில் மார்தட்டிய இந்தியத் தலைமை, கொழும்பு அரசின் தற்போதைய காய்நகர்த்தலை எப்படிச் சமாளிப்பது என்பது தெரியாமல் முழுசிக் கொண்டு அந்தரிக்கின்றது.

கொடுத்த வாக்குறுதியையும் கோட்டை விட்டுவிட்டு எதையும் செய்ய முடியாது கையைப் பிசைகிறது புதுடில்லி.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்கள் பெரும்பான்மையினரான சிங்களவரால் பலமுறை வாக்குறுதி கொடுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர். இந்த ஏமாற்றுதல் புராணத்தை இப்போது கொழும்பிடமிருந்து புதுடில்லியும் கற்றுக்கொண்டு இறக்குமதி செய்திருக்கிறது போலும்.

ஏற்கனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முதல்நாள் இரவு புலிகளின் தலைவர் பிரபாகரனை அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்து நீண்ட நேரம் பேசியபோது, எழுதப்படாத கனவான் ஒப்பந்தம் ஒன்றுக்கு உடன்பட்டு பல வாக்குறுதிகளை வழங்கினார் இந்தியப் பிரதமர். ஆனால் பின்னர் அவை காற்றில் பறக்க விடப்பட்டன. இதன் பெறுபேறாகவே திலீபனின் உண்ணாவிரதமும், மரணமும், இந்தியப் படைகள் - புலிகள் யுத்தமும் நேர்ந்தன என்பது சரித்திரம்.

அதுபோலவே, வடக்கு-கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்த எல்லாவிதமான வழிகளும் தங்களுக்குத் திறந்திருக்கின்றன என்று ஈழத் தமிழர்களுக்கு உறுதியளித்த இந்தியத் தலைவர், இப்போது வடக்கு-கிழக்குப் பிரிப்பு உறுதிப்படும்போது வாக்குறுதியை மறந்து வாளாவிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர், சுமத்தும் குற்றச்சாட்டும் புதுடில்லி குறித்து ஆழமான சந்தேகங்களையே தமிழருக்கு எழுப்புகின்றன.

# இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் வெளியாரின் தப்புக்கணக்கு



ஜெகான் பெரேரா

*இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் வெளிச்சக்திகள் இரட்டைவேடம் போடுகின்றன.*

*இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள், வெளியரசு அழுத்தம் ஆகியனவற்றால் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்கிறார் சமாதானப் பேரவையின் இயக்குநர் நாயகம் ஜெகான் பெரேரா.*

*கொழும்பிலிருந்து வெளிவரும் ''டெய்லிமிரர்'' ஆங்கில நாளேட்டின் 25.03.2008ஆம் திகதிய இதழில் அவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.*

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசாங்கம் ஒரே கருத்தையே ஆழமாக வலியுறுத்தி வருகினறது. இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணப்படமுடியாது என்பதே அந்தக் கருத்தாகும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் இந்தக் கருத்தையே முன்வைத்தார். இந்தியப் பாதுகாப்பு அமைச்சும் அண்மையில் இந்தக் கருத்தையே எடுத்தியம்பியிருந்தது.

தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் ரீதியான தீர்வின் மூலம் சமாதான முன்னெடுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தச் செய்தி யாருக்கு சென்றடைய வேண்டுமோ அவர்களுக்கு அது சேர்ந்ததாக விளங்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தமிழ்நாட்டு அரசியல் தலைவர் ஒருவருக்கு பிரதமர் மன்மோகன் சிங் எழுதிய கடிதத்தில் "ஒரே இலங்கைக்குள் அனைத்து சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்" என தெரிவித்திருந்தார்.

மேலும், "இராணுவ ரீதியில் தீர்வு காணப்படமுடியாது என்பதை நாங்கள் மிகவும் உறுதியாக நம்புகின்றோம்" என நாடாளுமன்ற ஆண்டறிக்கையில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

**மறுபுறத்தில் இராணுவ உதவி**

ஐக்கிய இலங்கைக்குள் அரசியல், அரசியல் சாசன மற்றும் ஏனைய விடயங்களுக்கும் அனைத்து இன மக்களும் குறிப்பாக சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படவேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில், இந்திய அரசாங்கம் சிறிலங்காவுக்கு இராணுவத் தளபாடங்கள், பாதுகாப்பு ஆலோசனை மற்றும் இராணுவப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

அண்மையில் சிறிலங்கா இராணுவத் தளபதிக்கு இந்திய அரசாங்கம் அழைப்பு விடுத்து, சிறந்த வரவேற்பளித்திருந்தது. இந்தச் செயலை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்திருந்தனர். மீண்டும் ஒரு வரலாற்று தவறிழைக்க இந்திய அரசாங்கம் விளைகிறது என அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

**அமெரிக்காவும் இரட்டைச் செய்தி**

இதேபோன்றதொரு இரட்டைச் செய்தியையே அமெரிக்கா, சிறிலங்காவிற்கு விடுக்கிறது.

ஒரு புறத்தில் சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகளை மீறிவருவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாரியளவு கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள் இலங்கையில் நடைபெற்று வருவதாகவும், இதற்கு எதிராக உரிய தண்டனைகள் வழங்கப்படுவதில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுபுறத்தில், இந்தியாவைப் போன்றே அமெரிக்காவும், இராணுவத் தளபாடங்கள், போர்த் தந்திரோபாய ஆலோசனைகள் மற்றும் இராணுவப் பயிற்சிகளை சிறிலங்காவிற்கு வழங்கி வருகிறது.

## இந்தியா, அமெரிக்கா மற்றும் தரப்புகள் இரட்டைச் செய்தி விடுக்கும் போக்கு

இந்த மாறுபட்ட செய்திகளிலிருந்து எது உண்மை என்பதை விளங்கிக் கொள்வது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

அரசியல் தீர்வு மற்றும் அரசியல் செயற்பாடுகள் குறித்து ஓர் அக்கறை காணப்படும் அதேவேளை, ஒரு தரப்பின் இராணுவ பலத்தை வலுப்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகிறது.



எனவே இதற்குப் பதிலளிக்கும் போது மூன்று காரணிகள் குறித்து அவதானிக்கப்படவேண்டும். அதாவது, இலங்கையின் நிலத்துவ எல்லைகளை பாதுகாத்தல், தமிழீழ விடுதலைப் புலிகளின் நெகிழ்வுத் தன்மை பற்ற போக்கு, இராணுவத் தீர்வுகளில் காணப்படும் நடைமுறைச் சாத்தியப்பாடற்ற தன்மை என்பவை குறித்து ஆராயப்படவேண்டும்.

## இராணுவ அழுத்தங்கள் மூலம் தீர்வு காணமுடியாது

ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கும் அநேகமான நாடுகள் அரசாங்கத்தை விட தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்காமல் இருப்பதனை உறுதிப்படுததுகின்றன.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் தீர்வு பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கருதுவதாகவே இந்த நாடுகள் குறிப்பிடுகின்றன.

உலகின் பலம் பொருந்திய இராணுவச் சக்திகளான அமெரிக்கா, இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் மறைமுகமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் போருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

**அரசு நடத்தும் போருக்கு ஒத்துழைப்பு**

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போராட்டத்தில் உலகின் பலம் வாய்ந்த அநேக நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கே ஆதரவளித்து வருகின்றன.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், பிரச்சினைக்குத் தீர்வு காணபதற்கும் இந்த ஒத்துழைப்பு போதுமானதாக அமையும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அரசாங்கம் மற்றும் அதனுடன் இணைந்து போராட்டத்தை மேற்கொளளும் அனைத்து சக்திகளும் இங்கேதான் தப்புக்கணக்கு போடுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்ச்சக்தி அதிகரிக்காமல் இருப்பதற்காகவே அநேகமான அனைத்துலக சக்திகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. இதன் மூலம், இராணுவ ரீதியில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொள்ள முடியாது என்ற அழுத்தமான செய்தியை புலிகளுக்கு உணர்த்த முயற்சித்துள்ளன.

எனினும், மனித உரிமைகள் மீறப்படக்கூடாது என்பதிலும், குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதிலும் அனைத்துலக சமூகம் உறுதியான நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றது.

மேலும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வின் மூலம் முடிவு எட்டப்பட முடியாது என்பதே அநேகமான அனைத்துலக நாடுகளின் ஏகோபித்த கருத்தாக அமைந்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகள், அழுத்தங்கள் மூலம் இனப்பிரச்சினையை தீர்க்கமுடியாது.

இராணுவ நடவடிக்கைகளோ அல்லது அழுத்தங்கள் மூலமாகவோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொள்ளமுடியாது என்பதனையே அனைத்துலகத்தில் நடைபெறும் போராட்டங்களின் மூலம் தெளிவாகியுள்ளது.

இராணுவ ரீதியிலான தீர்வை நோக்கி முன்நகரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இந்த யதார்த்தத்தையே எடுத்துரைக்கவே அனைத்துலகம் வலிந்து செயற்படுகிறது.

சில விதி விலக்குகளைத் தவிர, அநேகமான சந்தர்ப்பங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் குழுக்களுடன் அரசாங்கமே சமாதான முன்னெடுப்புக்களை ஏற்படுத்தவேண்டும்.

சிலவேளையில் இலங்கையில் பல சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்துள்ள போதிலும், இலங்கை இந்த விதிவிலக்கு நாடுகளில் உள்ளடங்காது.

அரசாங்கம் எவ்வளவு துரிதமாக சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அவதானம் செலுத்துகிறதோ அவ்வளவு சீக்கிரம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். ✱

## நாளை

| | |
|---|---|
| பங்குனி - 18 | 31.03.2008 திங்கட்கிழமை |
| திதி: நவமி | பி.இ. 02.23 |
| நட்சத்திரம் : | உத்தராடம் மு.இ.11.40 வரை |
| சுபநேரம் : | 12.11 - 01.41 |
| இராகுகாலம் : | 07.41 - 09.11 |




யாழ்ப்பாணம்,மார்ச்30

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக 1008 சங்காபிஷேகம் நாளை திங்கட் கிழமை காலை நடைபெறவுள்ளது. (202)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,மார்ச்22

மீசாலை மேற்கு இலந்தைக்கூடல் கங்காணியார் கந்தசாமி ஆலய சப்த தின லட்சார்ச்சனையும் ஸ்கந்த ஹோமமும் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (202)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,மார்ச்22

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ் செல்வி செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி நலம்பெற வேண்டி ஏழாலை அம்பலவாணேசுரர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனையும் விசேட பூசை வழிபாடும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மணிக்கு நடைபெறவுள்ளன. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்து இரட்டைச் சதத்தைத் தொட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 30

இந்துக்களின் துடுப்பாட்டத்தில் நேற்று கொக்குவில் இந்து அணி, தனது முதல் இன்னிங்ஸில் 200 ஓட்டங்களை விளாசியது. கொக்குவில் இந்து, 60.5 ஓவர்களில் அனைத்து விக்கட்டுகளையும் இழந்தது இரட்டைச் சதத்தை தொட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மதிய போசன இடைவேளையின் போது 7 விக்கெட் இழப்புக்கு 79 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மதிய போசன இடைவேளையின் பின் கொக்குவில் இந்து வீரர்கள் சற்று நிதானமாக ஆட்டத்தை தொடர்ந்தனர். 8ஆவது விக்கட்டுக்கு இணைந்தவர்கள் 42 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில் 126 ஓட்டங்களுக்கு 8 ஆவது விக்கட்டும் இழக்கப்பட்டது.

மேலும் 7 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்த நிலையில் 9 வது விக்கட் இழக்கப்பட்டது. 10வது விக்கட்டுக்காக இணைந்து றேகனும், நிதர்ஷனும் மிக நிதானமாக துடுப்பெடுத்தாடி கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓட்ட எண்ணிக்கையை 200 ஆக உயர்த்தினர். இந்நிலையில் பிரியதர்ஷனின் வேகத்தில் நிதர்ஷன் 41 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். றேகன் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

யாழ் இந்துக் கல்லூரி சார்பில் அஜித் 4 விக்கட்டுகளையும் சங்கீதன் 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ் இந்துக் கல்லூரி அணி பிற்பகலில் துடுப்பெடுத்தாடியது. ஆட்ட நேர முடிவில் 02 விக்கெட் இழப்புக்கு 29 ஓட்டங்களை யாழ்.இந்து பெற்றிருந்தது. கொக்குவில் இந்து சார்பில் நிறோஜன் 02 விக்கட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு தொடரும். (மேலும் செய்திகள், படங்கள் 3ஆம் பக்கத்தில் )

# 'உதய சூரியன்' சின்னத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பான சிக்கல் நீதிமன்றம் வரை சென்றிருப்பது தெரிந்ததே.

கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஒரு புறமாகவும் கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனும் ஏனையோரும் மறுபுறமாகவும் கன்னை கட்டி நிற்க இவ் விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது.

கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் கலந்தாலோசனை இல்லாமல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டங்களை செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் கூட்டக் கூடாது என தடைவிதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் கட்சியின் கூட்டம் கூட்டப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

தேர்தல் ஒன்றில் போட்டி இடுவதானால் கட்சியின செயலாளர் நாயகத்தின் ஒப்பத்துடனேயே வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் வேட்பாளர் தெரிவு உட்பட கட்சிப் பணிகளை முன்னெடுப்பதற்கான கட்சியின் பல்வேறு குழுக்களை செயலாளர் நாயகம் கூட்டுவதாயின் அதற்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி கட்சித்தலைவர் வீ.ஆனந்தசங்கரியினது ஒத்திசைவு அவருக்குத் தேவை. அது இல்லாத காரணத்தினால் கூட்டங்களும் கூட்டப்படவில்லை. தேர்தல்களிலும் அக் கட்சி போட்டியிடவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தோர் ஒருபுறம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சியில் தேர்தல்களில் நின்று வருகின்றார்கள். மறுபுறம் ஆனந்தசங்கரி மட்டும், அவ்வப்போது - கூட்டமே கூட்டுப்படாத தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரைப் பயன்படுத்தி - அக்கட்சியின் தலைவர் என்ற பெயரில் - அறிக்கைகளை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றார். எனினும் கட்சியின் ஏனைய பதவியினரோ அல்லது செயலாளர் நாயகமோ தம்முடன் ஒத்திசைவு கொள்ளாத காரணத்தால் அவரால் அதற்கு அப்பால் எதுவுமே செய்ய முடியவில்லை.

இந் நிலையில், இப்போது கட்சியின் முழு அதிகாரத்தையும் தாம் பயன்படுத்துவதற்கு தம்மை அனுமதிக்கக் கோரி அவர் தேர்தல் ஆணையாளர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார் என அறிய வருகின்றது.

கட்சியின் மாற்றுத் தரப்பினர் (சம்பந்தன் குழுவினர்) தனி அணியாகச் செயற்படுகின்றனர் என்றும்-

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பதால் தமது பிரிவை தமிழர் விடுதலைக் கூட்டணியாக அங்கீகரித்து 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்றும் - அவர் அக் கடிதத்தில் கோரியிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு கட்சி ஒனறு இரண்டுபட்டு நிற்கும் போது அவற்றில் ஒரு பிரிவை உண்மையான அக் கட்சியினை தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்து அத் தேர்தல் செயற்பாடுகளுக்கு உள்வாங்கிக் கொள்வாரானால் அத் தேர்தல் முடிவடைவதற்குள் நீதிமன்றுக்குச் சென்று தேர்தல் ஆணையாளரின் அந்த முடிவை தடுத்து நிறுத்துவதற்கு சட்டத்தில் வழி இல்லை என விடயம் அறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதாவது, ஆனந்தசங்கரியின் தற்போதைய கடிதத்தின் அடிப்படைகளை ஏற்று, தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டு அணிகளாகப் பிரிவுபட்டிருக்கின்றது என்ற முடிவுக்குத் தேர்தல் ஆணையாளர் வந்து, அதன் அடிப்படையில் ஓர் அணியான சங்கரி குழவினரைத் தேர்தல் ஆணையாளர் உண்மையான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கட்சி என அங்கீகரிப்பாராயினால்-

அதன் அடிப்படையில் ஆனந்தசங்கரி தரப்பினால் தாக்கல் செய்யப்படும் வேட்பாளர் பட்டியலை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட் டணி வேட்பாளராக ஏற்று அந்த அணிக்கு 'உதய சூரியன்' சின்னத்தை வழங்க அவர் தீர்மானிப்பாரானால்-

தற்போதைய மாகாணசபைகள் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்துக்குச் சென்றும் கூட அதனைத் தடுத்து நிறுத்த முடியாது என சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

எனினும், ஆனந்த சங்கரி இப்போது 'உதய சூரியன்' சின்னத்தைப் பயன்படுத்த அனுமதி கோரி எழுதிய கடிதம் சம்பந்தமாக கட்சியின் பதிவு செய்யப்பட்ட செயலாளர் நாயகமான சம்பந்தரிடம் தேர் தல் ஆணையாளர் கருத்துக் கோரியிருக்கின்றார் என்று தெரிகிறது.

மாகாணசபைத் தேர்தல் குறித்தும் ஏனைய விடயங்கள் குறித்தும் கட்சி ஆராய்ந்து வருகின்றது என்றும்-

தனிநபரான ஆனந்தசங்கரி காரண மாகக் கட்சி பிளவு பட்டு இரு அணிகளாக உள்ளது என்று கருதுவது தவறு என்றும்-

தாமே தொடர்ந்தும் கட்சியின் செயலாளர் நாயகம் என்பதால் வேறு யாரையும் அப்பதவியில் ஏற்று அங்கீகரிக்கக் கூடாது என்றும்-

இரா.சம்பந்தன் தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய பதிலில் தெரிவித்திருக்கிறார் எனவும் அறிய வருகின்றது.

இவ் விவகாரம் குறித்து தேர்தல் ஆணையாளர் என்ன முடிவு செய்திருக் கின்றார் என்பது இன்னும் தெரியவர வில்லை. (உ)

# இராணுவத்தளபதி நேற்று வவுனியாவுக்கு விஜயம்

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று வன்னிப்பகுதிக்கு விஜயம் செய்து மூத்த தளபதிகளுடன் கள நிலமையை ஆராய்ந்தார்.

வன்னிப்பிரதேச பாதுகாப்புக் குறித்து ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கம் என்று இராணுவத்தலைமை அலுவலகம் அறிவித்தது. இராணுவத்தளபதியுடன் சிரேஷ்ட இராணுவக்குழு வொன்றும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டது.

வன்னிப் பிரதேச தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இராணுவத் தளபதியை வரவேற்றார்.

எதிர்கால இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவது பற்றியும் இராணுவத்தளபதி பிரதேச தளபதிகளுக்கு அறிவுரை வழங்கினார் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இவ்வாறு சர்வதேச பிரமுகர் சுயோச்சைக் குழுவின் உறுப்பினர்களின் ஒருவரான பரிஸ் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும், நீதிபதியுமான ஜீன் பியர் கொற் தெரிவித்தார்.

தேசிய மனித உரிமை விசாரனைக்குழுவின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர் குழு நாளை மார்ச் 31ஆம் திகதியுடன் விலகிச் செல்கிறது. அந்தக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராகப் பணியாற்றியவர் ஜீன் பியரிகொற்.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் தாம் அளித்த பேட்டியிலே இந்த விவரங்களை அவர் வெளியிட்டார்.

அவர் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமான அம்சங்கள் சில வருமாறு:-

* தேசிய மனித உரிமை விசாரனை ஆணைக்குழு முற்று முழு தாகக் சுயோச்சையாகக் செயற்பட வகை செய்யப்பட வேண்டும். விசாரணை ஆணைக்குழுவுக்கு தேசிய மதிப்பு இருக்க வேண்டும். அதனை உருவாக்கக் கூடிய அரசியல் மனவுறுதியும் விருப்பரும் அரசாங்கத்துக்குத் தேவை

- தேசிய மனித உரிமை விசாரணை ஆணைக்குழு தனது கடமைகளைச் உரிய நியமங்களுக்கு ஏற்படச் செய்வதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

- விசாரணை ஆணைக் குழுவின் மதிப்பும் பெறுமதியும் பாதுகாக்கப்பட வேண்டும்.

* இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் , சர்வதேச சமூகம் சம்பந்தப்படுவதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

* குற்றம் புரிந்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

* பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் சார்பில் சட்டவியலாளர்கள் தோற்றுவது ஒரு பெரும் பிரச்சினையாகி உள்ளது. இது பெரும் பாரதூரமான விடயமாகும்.

மனித உரிமை விசாரணை ஆணைக் குழுவின் அலுவலர்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளே பணி புரிவது மிகவும் பாதகமான கடும் விவகாரமாகும். (அ)

# வங்காள விரிகுடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த மழை பெய்யும். காற்றின் திசை திடீரென திரும்பக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இடி, மின்னல் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பிரித்திகா ஜெயக்கொடி அறிவித்துள்ளார். (அ-2)

# வடபோர் முனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் இராணுவ மாநாட்டில் வவுனியா, மன்னார், மணலாறு, முகமாலைப் பகுதிகளில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக அறியவந்தது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், 58ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் நந்தன உடுவத்த மற்றும் கடற்படையின் பிராந்தியக் கட்டளைத் தளபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொதுவாக பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு பிராந்தியக் கட்டளை அதிகாரிகள் அழைக்கப்படுவதில்லை.

எனினும், அவசரமான நேரங்களில் அவர்கள் அழைக்கப்படுவதுண்டு. 2000 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் உள்ள படையினர் பெரும் நெருக்கடியைச் சந்தித்தவேளை, அன்றைய யாழ். குடாநாட்டு கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்து குறிப்பிடத்தக்கது என படைத்துறை அதிகாரிகள் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளனர். (அ-1)

# ஏ-9 வீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்த பிரமுகர்களான ஜிப்ரி குணதிலக, ஜெகான் பெரேரா, கிங்ஸ்ஸி றொட்ரிக்கோ உட்படப் பலரை ஜனாதிபதி கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அப்போது -

நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் நிர்ணயிக்கப்பட்தன் பிரகாரம் 2010ஆம் ஆண்டிலேயே நடத்தப்படும். அதற்கு முன்பாக வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி பிரமுகர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார் என அறிய வந்தது.

அரசமைப்பு விவகார சபையைக் கூட்டும் எண்ணம் தமக்கு இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, தேர்தல்கள் தெரிவுக்குழுவைக் கூட்டி அதன் வழிகாட்டல்களின் பிரகாரம் தேர்தல்கள் நடத்தப்படும் எனக் கூறினார்.

வடக்குக்கான பிரதான போக்குவரத்துப் பாதையான ஏ-9 வீதியை அரசு திறக்க முயற்சிக்குமாறு சிவில் பிரதிநிதிகள் கேட்ட போது, என்னைக் கொல்ல அனுமதிக்கச் சொல்கின்றீர்களா? என்று அவர் கேட்டார் என்று நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

எமது இராணுவச் செயற்பாடுகள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடத்தப்படவில்லை. அவை பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோருக்கு எதிரானவையே எனவும் ஜனாதிபதி கூறினாரென அறியப்படுகிறது. (அ-1)





## A/L வரலாறு

ஆசிரியர்: மா.பத்மன் B.A.(Hons) His. Spl. Dip. in Com

யாழ்நகர், விக்னா. | பிரவுண் வீதிச் சந்தி, DMI | மானிப்பாய், பிற்ஸ்மன்

* A/L 2009,2010 புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டே வழங்கப்படும்)
* வாரத்தில் நான்கு வகுப்புகள் நடைபெறுகின்றன
* மாதம் இரண்டு பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும் (பரீட்சை வினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்)

A/L 2008 மாதிரிப் பரீட்சைகள் நடைபெறுகின்றன ( மாதம் இரு பரீட்சைகள்)

* தனிப்பாட அனுமதியும் உண்டு


# மரண அறிவித்தல்

## திருமதி மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்

(முன்னாள் உபஅதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி )

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், வேலக்கைப் பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர் நேற்று (29.03.2008) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் திருஞானசம்பந்தர் (இளைப்பாறிய ஆசிரியர்) இன் மனைவியும் திருமாறனின் தாயாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற தம்பிராசா தம்பதிகளின் மருமகளும் சுபத்திராதேவி (இளைப்பாறிய ஆசிரியர்), புனிதவதி(இளைப்பாறிய ஆசிரியர்), Dr.விநாயகமூர்த்தி, சிவசோதராசா(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்) ஆகியோரின் சகோதரியும் கணேசலிங்கம்(கணக்காய்வாளர், யா.ம.ச.), கேசவராசா(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி ), இராசரட்ணம்(ஓய்வுபெற்ற ஆசிரியர் ), சோதி, சுபாயினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2008) ஞாயிற்றுக்கிழமைபி.ப 1மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய்.

தகவல்:
திருஞானசம்பந்தர்
(கணவர்).


## மனோ தத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHO THEREPHY)

பிரபல மனோதத்துவ வைத்தியர்

Dr.P. ஆறுமுகம் அவர்கள்

*மீண்டும் யாழ்.மண்ணில்.......*

மருந்துக்கள் குறிப்பிட்ட அளவு கொண்டுவர முடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டால் தங்களுக்கு ஏற்றவாறு மருந்துக்களை கொண்டுவரமுடியும்.

ஏப்ரல் 07ஆம் திகதி முதல் சில நாள்கள் மட்டுமே யாழ்.மண்ணில் இருப்பார்.

(552052) *T.P-0777 569 205, 065 222 4019*


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org